விலை ரூபா: 14.00 பக்கங்கள்:- 08+16

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
# VALAMPURI




சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 ஆவணி 24 திங்கட்கிழமை (09.09.2002) தொலைபேசி 3378 ஒலி 264

## நிறைவேற்று அதிகாரத்தை பயன்படுத்தி
# புலிகள் மீது மீண்டும் தடை விதிக்கும் எண்ணம் ஜனாதிபதிக்கு இல்லை!

### ஊடகப் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் தெரிவிப்பு

(நமது நிருபர்)

**நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி தமிழீழ விடுதலைப் புலிகள் மீது மீண்டும் தடை விதிக்கும் உத்தேசம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கு இல்லை என ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் தெரிவித்துள்ளார்.**

**தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடை நீக்கம் குறித்து சர்வதேச செய்தி நிறுவனம் ஒன்றிற்கு அளித்த விசேட பேட்டியின் போதே ஹரீம் பீரிஸ் தெரிவித்துள்ளார்.**

தாய்லாந்தில் இடம்பெறவுள்ள பேச்சுவார்த்தையை சுமூகமான சூழ் நிலையில் நடத்தப்படுவதற்கு வசதியாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்கியதை அடுத்து சிங்கள பௌத்த பேரினவாதிகள் நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி பாதுகாப்பு அமைச்சை மீண்டும் பொறுப்பேற்று விடுதலைப் புலிகளின் இயக்கத்தை தடை செய்யுமாறு ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

சிஹல உறுமய மற்றும் பேரினவாத பௌத்த அமைப்புக்கள் விடுத்த இவ் வேண்டுகோளை நிராகரிக்கும் வகையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன் படுத்தி விடுதலைப்புலிகள் மீது மீண்டும் தடை விதிக்கமாட்டார் என்றும், அவ்வாறு தடை விதிக்கும் உத்தேசம் அவரிடம் இல்லை என்

(8ம் பக்கம் பார்க்க)

## ஹயஸ் வானில் வந்தவர்கள் இளம் பெண்ணைக் கடத்த முயற்சி

### துணைவிச் சந்தியில் சம்பவம்

(வட்டுக்கோட்டை)

சங்கரத்தை துணைவிச் சந்திக்கு அருகில் பஸ்சிற்காகக் காத்துக் கொண்டு நின்ற இளம்பெண் ஒருவரைக் கடத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சி அயலவர்களினால் முறியடிக்கப்பட்டுள்ளது இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

நேற்று மாலை 4 மணியளவில் ஹயஸ் வானிலும் ஆட்டோ ஒன்றிலும் யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த கடத்தல் காரர்கள் பிரஸ்தாப பெணணருகே வானை நிறுத்தி அவரைப் பிடித்து இழுத்து வானில் ஏற்ற முற்பட் டனர்.

இதனால் பீதியடைந்த யுவதி கூக்குரலிட்டபடி அயலவர் ஒருவரின

(8ம்பக்கம் பார்க்க)

## தூதுவர் எரிக்சோல் தாய்லாந்து பயணம்

## அளவெட்டியில் பயங்கரம்
## இனந் தெரியாதோரால்

சிங்கா தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்கியதை அடுத்து சிங்கள பௌத்த பேரினவாதிகள் நிறைவேற்று அதிகாரத்தைப்'

வேண்டுகோள் விடுத்தனர்.

சிஹல உறுமய மற்றும் பேரினவாத பௌத்த அமைப்புக்கள் விடுத்த இவ் வேண்டுகோளை

மீண்டும் தடை விதிக்கமாட்டார என்றும், அவ்வாறு தடை விதிக்கும் உத்தேசம் அவரிடம் இல்லை என்

(8ம் பக்கம் பார்க்க)

அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

நேற்று மாலை 4 மணியளவில்

இதனால் பீதியடைந்த யுவதி கூக்குரலிட்டபடி அயலவர் ஒருவரின

(8ம்பக்கம் பார்க்க)

## தூதுவர் எரிக்சோல் தாய்லாந்து பயணம்

# பேச்சுக்களைக் கண்காணித்து உதவ மூன்று உயர் மட்டக் குழுக்கள் நியமனம்

(பாங்கொங்)

அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தாய்லாந்தில் எதிர்வரும் 16ந் திகதி ஆரம்பமாக இருக்கும் நேரடிப் பேச்சுக்களைக் கண்காணித்து உதவ மூன்று உயர் மட்டக்குழுக்களை தாய லாந்து அரசு அமைத்துள்ளது.

அரசு - புலிகள் பேச்சுக்கு அதிகம் முக்கியத்துவம் கொடுத்துள்ள தாய்லாந்து அரசு, பேச்சுக்களில் ஈடுபடுபவர்களின் பாதுகாப்பு, போக்குவரத்து ஒழுங்குகள் உணவு தங்குமிட வசதிகள் மற்றும் இதர தேவைகளைக் கவனிக்கவென்றே, இவ் உயர் மட்டக குழுக்களை அமைத்துள்ளது.

இக்குழுவில் தாய்லாந்துப் படையினர், பொலிசார், உளவுப் பிரிவினர் மற்றும் அரச உயர் அதிகாரிகள ஆகியோர் இடம்பெறுகின்றனர்.

இதேவேளை தாய்லாந்தில பேச்சுவார்த்தைக்கான ஏற்பாடுகளைக் கவனிப்பதற்காக, நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சோல்ஹெய்ம் தாய்லாந்து சென்றுள்ளார். அங்கு தாய்லாந்து அரசுடன் பேச்சு நடததும் அவர் ,அரசு - புலிகள பேச்சுக்கான முழு ஏற்பாடுகளையும் கவனிப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (இ)

## அளவெட்டியில் பயங்கரம்

# இனந் தெரியாதோரால் குடும்பஸ்தர் சுட்டுக்கொலை

(அளவெட்டி)

இனந் தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி குடும்பஸ்தர் ஒருவர் நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் மரணமானார்.

இப் பரபரப்பான சம்பவம் அளவெட்டி தெற்குப் பகுதியில் இடம் பெற்றுள்ளது. இச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த இளையதம்பி ரவிகுலன்(வயது 50) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

நேற்றுக்காலை பிரஸ்தாப நபரின் சடலம் மீட்கப்பட்டு யாழ் போதனா வைத்தியசாலைப் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் நள்ளிரவு இனந்தெரியாத துப்பாக்கிக் குழுவினர் பிரஸ்தாப நபரை சுட்டுவிட்டு தப்பிவிட்டதாக தெரிவிக்கப் படுகிறது.

இச் சம்பவம் அப் பகுதியில் பெரும் அச்சத்தையும் பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பாக இளவாலைப் பொலிஸார் விசாரணை மேற கொண்டு வருகின்றனர். (ம)

# புலிகளின் தடை நீக்கம் தற்காலிகமானதே!

## மீண்டும் வலியுறுத்துகிறார் அமைச்சர் டிரோன்

(கொழும்பு)

அரசாங்கத்துக்கு எதிராக ஆயுதம் ஏந்தும் எந்தக் குழுவையும் தடை செய்யத் தமது ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் தயங்காது என்று வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்ணன்டோ தெரிவித்துள்ளார்.

''சண்டே லீடர்'' பத்திரிகைக்கு அளித்த பேட்டியிலேயே அமைச்சர் டிரோன் இதனைக் குறிப்பிட்டார்.

அப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

ஜே.வி.பி உட்பட எந்தக் குழுவானாலும் அரசுக்கு எதிராக ஆயுதம ஏந்தினால் அது தடை செய்யப்படும்.

விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கம் தற்காலிகமானது. தேவை ஏற்பட்டால் விடுதலைப் புலிகள் மீதான தடையை

(8ம் பக்கம் பார்க்க)

வலம்புரி உடன்
வாரமலர்
சங்கு நாதம்
தவறாது கேட்டு
வாங்குங்கள

# சமாதானத்தை வலியுறுத்தி இன்று கொழும்பு நகரில் மாபெரும் பேரணி

## ஐந்து லட்சம் மக்கள் கூடுவர்

(கொழும்பு)

நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு ஐக்கிய தேசிய முன்னணி அரசு மேற்கொண்டு வரும் சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு தெரிவித்து நாடு தழுவிய ரீதியில் சுமார் ஐநது லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் இன்று கொழும்பு மாநகரசபை மைதானத்தில் கூட வுள்ளனர்.

தேசிய ஐக்கிய முன்னணி அரசில் அங்கம் வகிக்கும் கட்சியாளர் ஏற்பாட்டில் இன்று நண்பகல் ஒரு மணிக்கு நாட்டின் பல பாகங்களில் இருந்தும் வரும் மக்கள் கொழும்பு நகரின் பிரதான ஐந்து இடங்களில் கூடி அங்கிருந்து ஊர்வலமாக சமாதானக் கோசங்கள் எழுப்பிய வண்ணம் கொழும்பு மாநகரசபை மைதானத்தை பிற்பகல் 4 மணியளவில் வந்தடைவர்.

சுகததாஸ ஸ்ரேடிஸச்சந்தி, பொரளைச்சந்தி, நுகேகொடச் சந்தி

(8ம் பக்கம் பார்க்க)

# 19வது திருத்த சட்ட மூலம் நாளை வர்த்தமானியில்

(கொழும்பு)

அரசியல் அமைப்புக்கான 19வது திருத்தச்சட்ட மூலம் நாளை செவ்வாய்க்கிழமை வர்த்தமானியில் பிரசுரிக்கப்படவுள்ளதாக அரச வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இது தொடர்பான ஐக்கிய தேசிய முன்னணியின் கூட்டமென்று நடைபெற்றபோதே இதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

19வது திருத்தச்சட்ட மூலம் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுடன் கலந்துரையாடிய போதும் எந்தவிதமான இணக்கமும் ஏற்படாத நிலையில் 19வது சட்டத் திருத்தமூலம் 10ம் திகதி செவ்வாய் கிழமை வர்த்தமானி மூலம் வெளி

(8ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

### வகுப்புக்கள்

ஆண்டு 1 இலிருந்து மேற் படிப்பு வரை சிறந்த ஆசிரியர்கள வகுப்பில் சிறுதொகை மாணவர்களுடன் ஆங்கிலத்தில் கூடிய கவனம் அனுமதிக்கு தலைமை ஆசிரியர் ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி 426 (302) காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (5715)

### இடர் விலக இறைவனைப் பிரார்த்திப்போம்

சமாதான முயற்சிகள் நீடித்து நிலைபெற சிவபுராணம் தினசரி வழிபாடுகளில் ஓதுவதுடன் வெள்ளிக்கிழமை விரதவழிபாட்டில் சகலரும் இணைந்து பணிபுரிக.
வே. கெ. தனபாலன் இந்து இளைஞர் பேரவை இலங்கை, புதுக்குளம் மகாவித்தியாலயம் வவுனியா. (5877)

### பனம்விதை சேகரித்து பயன்பெறும் போட்டி 2002

அதிகவிதைகளை சேகரித்துப் பதப்படுத்துவோருக்கு பரிசுகள உண்டு. எழுத்து மூலம் தொடர்பு கொள்க. சிவதரிசினி பனம் பொருள் உற்பத்தி(தனியார்) நிறுவகம் நுணாவில் மத்தி, சாவகச்சேரி. (5884)

### தரம் 5 புலமைப்பரிசில்

2003 க்கான மேற்படி பரீட்சைக்கு இவ்வாண்டு ஒக்ரோபர் முதல் சிறந்த பயிற்சி கொடுப்பதற்கேற்ற தரமான துமகணிபபீடு தொடர்புடன் பலவேறு சிறப்புகளும் பொருநதி கணனியில அச்சிடப்பெறற டெலராவின 25 பயிற்சிப பரீட்சைகளில கலநது வெறறிபெற விருமபுவோா 'டெலரா' ஐயனார் வீதி, சுனனாகம முகவரியுடன தொடாபுகொண்டு விசேட விலைகழிவுகளுடன வினாத்தாளகளைப் பெறலாம். (C 4878)

### யாழ்ப்பாணம விஜயம்

(யாழ்பபாணம்)
கொழுமபு சீதுவப் பாடசாலை மாணவாகள 50பேர் அடங்கிய குழுஒன்று எதிர் வரும 20நதிகதி வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணமவருகை தரவுளளது
கடந்தகால அனர்த்தங்களினால் படுமோசமாக பாதிக்கப்பட்ட பாடசாலைகளுக்கு விஜயம செய்து அந்தநதப பாடசாலை மாணவாகளின கல்வித்தேவைகள தொடர்பாக கலந்துரையாடலகளை இக்குழுவினர் மேற்கொளள உளளனர்.
(க-6)

### முதல்வர் கவலை

(யாழ்ப்பாணம்)
யாழ்பபாணம மணிக்கூட்டுகோபுரம் திருத்தபபடாததுகுறிதது யாழ்.மாநகர சபை முதலவர் செ. கநதையன் கவலைவெளியிட்டுளளார்.
மணிககூட்டுக்கோபுர புனரமைப்புவேலை முடிந்து கடந்த ஜூலைமாதம 19 மதிகதி திறந்துவைக்கபப்பட்டஅன்றே மணிககூடு பழுதடைந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.
இத் திருத்தவேலைக்கான பணி தனியார் நிறுவனம் ஒனறிடம் ஒப்படைககப் பட்டதும், அந்நிறுவனம் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வில்லை எனவும் தெரியவருகிறது. (க-19)

# செய்திகளை திரிபுபடுத்தி பிரசுரிப்பது

# மக்களிடம் தவறான கருத்தை ஏற்படுத்தும்

## பாதுகாப்பு நடவடிக்கை தலைமையகம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)
பாடசாலை மாணவர்கள் போல் அடையாளம் காட்டிக் கொண்டு இராணுவ முகாம் களை தாக்கி உடைமைகளை சேதப்படுத்த முயற்சிக்கும் நபர்களைக் கட்டுப்படுத்த முடியுமான அதிகாரத்தை பயன்படுத்துவேன் என்று யாழ்மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத்பொன்சேகா கடந்த5ந் திகதி பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மற்றும் மெதடிஸ்ற் கல்லூரிஆகியவற்றை மீளத்திறப்பதுதொடர்பாக இடம்பெற்ற கலந்துரையாடலில் தெரிவித்தாரென்று யாழ்பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

இக்கருத்தின் ஒருபகுதியை மாத்திரம் பயன்படுத்தி பாடசாலை மாணவர்கள் இனி மேல் மறியலில் ஈடுபட்டால் துப்பாக்கிப்பிரயோகம் செய்யப்படும் என்றவகையில் செய்தி வெளியிடப்பட்டதால் பாதுகாப்புப்படையினர்பற்றி மக்கள் மத்தியில் தவறான எண்ணங்கள் உருவாகி விடுமென்று குறிப்பிட்டு யாழ் பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் பத்திரிகைக் குறிப்பொன்றை வெளியிட்டுள்ளது.

அச்செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இராணுவத் தளபதி சரத் பொன்சேகாஇராணுவமுகாம் களைத்தாக்கி உடைமைகளை சேதப்படுத்துவோருக்கு எதிராக முடியுமான அதிகாரத்தைப் பயன்படுத்துவேன் என்று குறிப்பிட்ட கருத்தை விளக்கி அங்கு கூடியிருந்த மக்களுக்கு தெரிவிக்கையில்.

முகாமுக்குள் அல்லதுவேறு எந்தவொரு பிரச்சினைக்காகவும் தனிப்பட்ட உடைமைகளுக்குசேதம்விளைவித்து ஊடுருவ முயற்சிக்கும் நபர்களை கலைந்து செல்லும் படி முதலில் வாய் மூலம் எச்சரிக்கைசெய்வதாகவும் அதன் மூலம் நிலைமையை கட்டுப்படுத்த முடியாவிட்டால் கண்ணீர் புகைக்குண்டு அல்லது பிரம்பால் அடித்து நிலைமையை கட்டுப்படுத்த முயல்வதென்றும் அதனாலும்நிலமையை கட்டுப்படுத்த முடியாவிட்டால் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு கலவரத்தைக் கட்டுப்படுத்த வேண்டிய நிலை ஏற்படும் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

ஆனால் அக் கருத்தின் ஒரு பகுதியைமாத்திரம் பிரயோகித்து பாடசாலை மாணவர்கள் சுடப்படுவார்கள் என்ற கருத்து மேலோங்கும் வகையில் செய்தி பிரசுரிக்கப் பட்டமையினால் பொது மக்கள் மத்தியில் பாதுகாப்பு படையினர்குறித்து தவறான எண்ணங்கள் உருவாக இடமுண்டு என்று அச்செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ)

### அரசியல் பணிமனை திறந்து வைப்பு

(மட்டக்களப்பு)
தமிழீழ விடுதலைப் புலிகளின் பட்டிருப்பு கோட்ட அரசியல் துறைபணிமனையை நேற்றுக்காலை களுவாஞ்சிக்குடியில் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் திறந்து வைத்தார்.

தமிழீழ தேசியக்கொடியை விடுதலைப்புலிகளின்பிரதிநிதி பிரபா ஏற்றிவைக்க, இப் பணிமனைக்கான பெயர்ப் பலகையை களுவாஞ்சிக்குடி உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஆனந்த நாணயக்கார திரை நீக்கம் செய்தார்.
(க-8)

# தேர்தல் வன்செயலால் ஏற்பட்ட பாதிப்புக்கு உடன் நட்டஈடு வழங்குக

## ஜனாதிபதி பிரதமருக்குக் கடிதம்

(கொழும்பு)
கடந்த பொதுத்தேர்தலின் போது இடம்பெற்ற வன் செயல்களினால் பாதிக்கப் பட்டவர்களுக்கான நட்டஈட்டை அடுத்தமாதம் முதலாம் திகதிக்குமுன்னர் வழங்குமாறு ஜனாதிபதி சந்திரிகா பிரதமர்ரணில் விக்கிரமசிங்காவுக்கு கடிதம்எழுதியுள்ளார்.

நட்டஈடுவழங்குவது தொடர்பாக கடந்தசில மாதங்ளுக்கு முன்னர் அமைச்சரவையில் தீர்மானம் எடுக்கப் பட்டது ஆனால் அத்தீர்மானம் இதுவரை நடைமுறைப் படுத்தப்படவில்லை.

மேற்படி அமைச்சரவைத் தீர்மானத்தை உடனடியாக நடைமுறைப்படுத்தும்படி புனர்வாழ்வு அமைச்சுக்கு உத்தரவு ஒன்றைப் பிறப்பிக்குமாறும் ஜனாதிபதி அக் கடிதத்தில் கோரியுள்ளார்.

இதேவேளை தேர்தல் காலங்களில் இடம்பெற்றவன் முறைச் சம்பவங்கள் தொடர்பாக மாவட்ட செயலாளர்கள் மற்றும் பிரதேசசெயலாளர்கள் மூலம் சமர்ப்பிக்கப் பட்ட முறைப்பாடுகள் ஜனாதிபதியால் உறுதிப் படுத்தப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

# விடுதலைப்போராட்டத்தில் தன்னை அர்ப்பணித்து வாழ்பவர் அடேல்

## நூல் வெளியீட்டு நிகழ்வில் பாப்பா

(யாழ்ப்பாணம்)
எமது விடுதலை இயக்கத்தின் அரசியல் பக்கங்களை அரசியல் அபிலாசைகளையும்போதிக்கும்ஆசானாக திருமதி அடேல் பாலசிங்கம் விளங்குகின்றார்.

இவ்வாறு விடுதலைப்புலிகளின் யாழ்மாவட்டஅரசியல் பிரமுகர் பாப்பா தெரிவித்துள்ளார்.

நேற்று 'சுதந்திரவேட்கை' நூல்வெளியீட்டு விழா அரசியல் பிரமுகர் பாப்பா தலைமையில் யாழ்பல்கலைக் கழகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பேசும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும்பேசுகையில் எமது போராட்டத்துக்குள் தன்னை அர்ப்பணித்து வாழ்ந்து கொண்டிருக்கும் வேற்றுமொழி பேசுகின்ற வெள்ளைத் தோலைக் கொண்ட தமிழிச்சி எழுதிய நூலே சுதந்திர வேட்கை.

இந்நூல் எமது போராட்டத்தின் விடுதலையினை அணு அணுவாக சித்திரித்து இருக்கின்றது.

எம்மேல் திணிக்கப்பட்ட நியாயமான போராட்டத்துக்கு இந்நூல் புதுவியாக்கியானம் அளிக்கின்றது.

அதுமட்டுமன்றி எமதுமண்ணையும் மக்களையும்புரிந்து கொண்டவர்எங்கள் அன்ரி.

எமது தேச விடுதலைப் போராட்டத்துக்கு வித்திடும் சக்தியாக திகழும் விடுதலைப் போராளி அவர்.

யாழ்ப்பாண மக்களின் வாழ்க்கை முறைக்கட்டுமானங்கள் அவர்களின்போராட்ட வழிகள் எல்லாவற்றையும் ஆய்வுக்கு உட்படுத்தியது இந்நூல்.

எமது மண்ணையும் மக்களையும் நேசிக்கும் அவர் இந்நூலை தனதுபிறந்த மண்ணிலும் எமது மண்ணிலும் வெளியிட்டுள்ளார் என்றும் பாப்பா மேலும் கூறினார்.
(இ-6)

# மென்மைஉணர்வுடைய போராளியின் அன்னை அடேல் பாலசிங்கம்

## விடுதலைப்புலிகளின் மகளிர்பிரிவு பிரமுகர் தமிழ்விழி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)
மென்மையான உணர்வுகளைக்கொண்ட ஓர் போராளியின் அன்னைபோல, நண்பி போல இருப்பவர்தான் 'சுதந்திரவேட்கை' நூலின் ஆசிரியர் திருமதி அடேல் பாலசிங்கம் என்று விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறை மகளிர் பிரிவுப் பிரமுகர் தமிழ்விழி தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ். பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற 'சுதந்திர வேட்கை' நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு மதிப்பீட்டுரை நிகழ்த்தியபோதே தமிழ்விழி இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் பேசுகையில் ஆழமான மனித நேயம் உள்ள மனிதன் ஏதோஒரு விதத்தில் போராளியாகவே இருப்பான். அந்த உண்மையை நிரூபிப்பவர் இந்த நூலின் ஆசிரியர் அடேல் பாலசிங்கம்.

பெற்றோரைப் பிரிந்திருக்கும் எங்கள் ஒவ்வொருவருக்கும் அவர் காட்டும் அன்பும் அரவணைப்பும் அளப்பரியது.

எமது தேசவிடுதலைப் போராட்டத்தில் தன்னை இணைத்துக்கொண்ட ஒரு பெண்போராளி அவர்.

சமூகப்பற்றுணர்வு கொண்டவர், மற்றவர்களின் வாழ்வில் ஆழமான அக்கறை உடையவர், மனிதநேயப் பண்புகளை நாம் அவரிடம் தான் கற்றுக்கொள்ளவேண்டும்.

தன்னுடன் உணவு அருந்தி ஒன்றாகப் படுத்துறங்கி சிரித்து மகிழ்ந்தபோராளி உயிர்இழந்துவிட்டால் மனம் உடைந்து, கண்ணீர் மல்கி அழுதுபுலம்பும்அற்புதப்பிறவியாக நாம் அவரைக் காண்கிறோம் என்று தமிழ்விழி மேலும் கூறினார், (இ-6)

### துறைமுக அபிவிருத்தி குறித்து ஆராய

# வெளிநாட்டு நிபுணர் குழு யாழ்ப்பாணம் வரவுள்ளது

(கொழும்பு)
காங்கேசன்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்வது தொடர்பாக ஆராய்வதற்கு ''பொஸ்கோலிஸ்'' என்ற வெளிநாட்டு நிறுவனத்தைச் சேர்ந்த நிபுணர்கள் குழு ஒன்று எதிர்வரும் 12ந் திகதி வியாழக்கிழமை யாழ்ப்பாணம் வரவுள்ளது.

நான்கு தினங்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் இக்குழுவினர் துறைமுகத்தை நேரில் சென்று பார்வையிடுவதுடன் துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்கான செயற்திட்ட அறிக்கையினையும் தயாரிக்கவுள்ளனர்.

இவ்வாறு தயாரிக்கப்பட்ட திட்டவரைவு அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்படும் என்றும் அதன்பின் வெளிநாட்டு நிதியுதவியுடன் துறைமுக அபிவிருத்திப்பணிகள் மேற் கொள்ளப்படும் என்றும்தெரிவிக்கப்படுகிறது. (த)

# இன்று ஒரு தகவல்

## கங்கையா ஹரிகதையா?

இது வாயு புராணத்திலுள்ள கதை சத்தியயுகத்தின் இறுதிப் பாகத்தில் கங்கைநதியிலிருந் துநான்கு மைல் தெற்கே சத்திய விரதம் என்ற ஒரு கிராமம் இருந்தது அதில் பிருஹத்தபா என்று அழைக்கப்பட்ட ஒரு பெரிய தவசி இருந்தார். மாலைவேளையில் பகவானுடைய கல்யாண குணங்களை ஹரிகதைகளாகச் சொல்வது அவர் வழக்கம், அதே கிராமத்தில் புண்ணிய தாமா என்ற ஓர் அந்தணர் இருந்தார் பிருஹத்தபா எப்பொழுது கதை சொல்லப் போகிறார்என்று காத்திருந்து இவர்கதைகேட்கப் போய்விடுவார். ஒருநாள் கூடவிடாமல் நூறுவருஷகாலம் தொடர்ந்து இவர் அந்த ஹரிகதைகளைக் கேட்டார். கங்கைக் கரைக்கு நான்கு மைல் தூரத்திலேயே வசித்தும் இவர் ஒருநாள்கூட, கங்கையில் ஸ்நானம் செய்ததில்லை. கதைகேட்பது, தன்னைத் தேடிவரும் அதிதிகளை உபசரிப்பது இவை இரண்டும் தான் இவருடைய வேலை.

ஒருநாள் கங்காஸ்நானம் செய்வதற்காக வெகுதொலைவிலிருந்து வந்த இரண்டுயாத்திரிகர்கள் இவர்வீட்டில்தங்கினார்கள். இவர் அவர்களை உபசரித்து அன்னம் போட்டார். இவருடைய மனைவி அதிதிகளுக்கு விசிறிகொண்டு வீசினாள். அப்பொழுதுஅதிதிகள் புண்ணியதாமாவைப் பார்த்து, 'இங்கிருந்து கங்கை எவ்வளவு தூரம்'? என்றுகேட்டார்கள். 'உண்மையில் அது எவ்வளவு தூரம்என்பதுஎனக்குத் தெரியாது. நான் நூறு வருஷத்துக்கு மேலாக இந்தக் கிராமத்திலிருந்தும் ஒருநாள் கூட கங்கையில் ஸ்நானம் செய்ததில்லை. ஆனால் அது நான்கு மைல் தொலைவில் இருக்கிறது என்று சொல்லக் கேட்டிருக்கிறேன்' என்று சொன்னார்.

இதைக் கேட்டதும் அவர்கள் 'கங்கையில்ஸ்நானம்செய்யாத இவரைப் போன்ற பாவி வேறுயாருங்கிடையாது என்று தோன்றுகிறதே, ஆயிரம்மைல்களுக்கு அப்பால் இருந்துகொண்டுகங்கா, கங்காஎன்று சொன்னால் கூட அவர்களுடைய பாவங்களெல்லாம நசித்து விடுகின்றனஎன்றுகூறுகிறார்கள். இவர் என்னடாவென்றால் இத்தனை சமீபத்திலிருந்தும் 'கங்கையில் ஸ்நானம் செய்ததுகிடையாது என்றுசொல்லுகிறாரே! இவர் வீட்டில் நாம் அதிதியாகத்தங்கியதே பாவம் என்று தங்களுக்குள் பேசிக் கொண்டு உடனே எழுந்துஅந்த வீட்டைவிட்டு வெளியே சென்று கங்கையை நோக்கி நடந்தார்கள். கங்கையில் ஸ்நானம்செய்யாத அந்தப் பாவியின் வீட்டில் தங்கின பாவத்தைக் கங்கையில் ஸ்நானம் பண்ணித் தான்போக்கவேண்டும் என்று சொல்லிக்கொண்டுகங்கையை நோக்கி நடந்தார்கள்.

ஆனால் கங்கையை அடைந்த போது பார்த்தால் கங்கையில் ஒரு சொட்டுத் தண்ணீர் கூட இல்லை. நதி வரண்டு கிடந்தது' கங்கைக் கரை வழியாகவே கங்கை உற்பத்தியாகும் இடம் வரை நடந்து பார்த்தார்கள். எங்கும் தண்ணீர் தென்படவில்லை. யாத்திரிகர்களுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. கடைசியில்காசிக்குத் திரும்பினார்கள். கங்கையை நோக்கிப் பிரார்த்தனை செய்தார்கள். 'அம்மா கங்கா தேவி நாங்கள் ஏதோ அபராதம் செய்து விட்டோம் என்று தோன்றுகிறது. அது தான் நீ எங்களுக்குத்தென்படவில்லை தயவுசெய்துஎங்கள் அபராதத்தைப்பொறுத்தருளவேண்டும் என்று வேண்டிக்கொண்டார்கள்

அப்பொழுது கங்கை அவர்களுக்கு முன் பிரத்தியட்சமாகிச் சொன்னாள். 'நீங்கள் அந்த மகா, புண்ணிய சாலி புண்ணியதாமாவை நிந்தித்து விட்டீர்கள். அந்தப்பாததுாளி என் மீது படாதா என்று நானேகாத்துக்கொண்டிருக்கிறேன். எங்கு ஹரிகதை நடத்கிறதோ. அங்கு எல்லாத்தீர்த்தங்களும் இருக்கின்றன. கோடி பிரம்மஹத்திதோஷத்திற்குக் கூட பிராயச்சித்தம் உண்டு. ஆனால் பகவானின் பக்தர்களின் நிந்தனைக்குப் பிராயச்சித்தமே கிடையாது. ஆகவே நீங்கள் அந்தப் புண்ணிய தாமாவின் மன்னிப்பைக் கோருங்கள். அதுவரையில் நான் உங்கள் கண்ணுக்குத்தென்படமாட்டேன்.

இரண்டு யாத்திரிகர்களும் புண்ணியாதாமவிடம்சென்று அவர்காலில் விழுந்துதங்களை மன்னிக்கும்படிகேட்டுகொண்டார்கள் அவர் அவர்களைப் பிருஹத்தபாவிடம் அழைத்துச் சென்று இரண்டு வருஷ காலம் ஹரிகதை கேட்கப் பண்ணினார் பிறகு எல்லோருமாகச் சேர்ந்து கங்கைக்குச் சென்று ஸ்நானம் செய்தார்கள்.

சுவாமி கமலாத்மானந்தர்

# புதிய கட்சி விரைவில் உதயமாகும்

# நாட்டை பாதுகாப்பதே நோக்கம்

## சங்கைக்குரிய தேரர் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் புதிய தொரு அரசியல் கட்சி விரைவில் ஆரம்பிக்கப்படும் என்று அதிசங்கைக்குரிய ஹங்கொடவல சோம தேரர் தெரிவித்துள்ளார்.

பம்பலப்பிட்டி பாடசாலை ஒன்றில் நேற்றுக் காலைநடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில், நாட்டின் அதிகாரத்தை கைப்பற்றும் நோக்கம் இக்கட்சிக்கு கிடையாது நாட்டை தற்போதைய மிக மோசமான நிலையில் இருந்து பாதுகாப்பதே இக்கட்சியின் இலட்சியம் ஆகும்.

கடந்த கால ஆட்சியில் இருந்த அரசியல் தலைவர்கள் எடுத்த சில தவறான தீர்மானங்கள் காரணமாக தமிழீழ விடுதலைப் புலிகள் போராட வேண்டிய சூழ்நிலைஉருவாகியது.

அதுமட்டுமன்றி கடந்த காலங்களில் எந்தவொரு சமூகத்துக்கும் தீங்கு இழைக்கப்பட்டிருந்தால், அது அரசியல் வாதிகளின் ஆதரவாளர்களினாலேயே மேற் கொள்ளப்பட்டிருக்கும் எனவும் குறிப்பிட்டுள்ளார். (க-08)

# துணை இழந்த பெண்களை வீட்டில் முடக்கும் கொடுமை ஒழிக்கப்படல் வேண்டும்

## கியூடெக் பணிப்பாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

துணை இழந்த பெண்களை வீட்டில் முடக்கும் சமூகக் கொடுமை முற்றாக மாற்றப்பட வேண்டும். அவளும் சுதந்திரக் காற்றை சுவாசிக்க சமூகம் ஏன் தடை போட வேண்டும்.

இவ்வரறு கேள்வி எழுப்பியுள்ளார் கியூடெக் பணிப்பாளர் வண பிதா சி. ஜி. ஜெயக்குமார் அடிகளார் நேற்றுக் காலை இடம்பெற்ற குருநகர் துணை இழந்தோர் சங்கஒருவருட நிறைவு நாளில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்; அபிவிருத்தி வேலைகளில் பெண்களின் பங்களிப்பு குறைவடைந்து கொண்டே போகிறது.

ஈழப் போராட்டத்தில் பெண்கள் எவ்வளவோ சாதனைகள் படைத்துக் கொண்டே போகிறார்கள்.

ஆனால் எமது பெண்கள் பெண் அடிமைத்தனங்களினாலும், அடக்குமுறைகளுக்குள்ளும் சிக்கி மீள முடியாத சமூகக் கட்டமைப்புகளுக்குள் வாழ்கின்றார்கள். இதுதவிர்க்கப்பட வேண்டும்.

பெண்களுக்கு எதிரான அடக்குமுறைகள், அடிமைத் தனங்கள உடைத்தெறியப்பட வேண்டியதொன்று.

இன்று நாட்டை அபிவிருத்திப் பணியில் கொண்டு செல்வதற்கு பெண்கள் முன்வர வேண்டும். அவர்கள் எல்லா வேலைகளிலும் அங்கம் வகிக்கப்பட வேண்டும்.

மோட்டார் மெக்கானிசம், மேசன், தச்சுத்தொழில்களைக் கற்று அதனைத் திறம்பட செயற்படுத்த வேண்டும் துணை இழந்து விட்டோமே என்று தமது வாழ்க்கையை தாமே அழித்துக் கொள்ளக் கூடாது. வீறு நடை போட்டு புதிய விடியலுக்காய் உங்களது கரங்களை ஒன்றுபடுத்துங்கள் என அவர் மேலும தெரிவித்துள்ளார். (க-06)

## இராசி பலன்

9 - 9 - 2002
(ஆவணி 24, திங்கள்)
திருதியை பி இ 2.22 வரை
அத்தம் பி.ப 5.25 வரை
இராகு காலம்-7.34-9 04
நல்ல நேரம் 12 04-1.34
சாம வேத உபாகருமம்

**மேடம்**
தொழில் விருத்தி, முயற்சி கைகூடும், சந்தோசமான நிகழ்வு, உடல் நலம்.

**இடபம்**
காரிய இடையூறு, புத்திரரால் கவலை, உடல் நலக் குறைவு, தொழில் கஷ்டம்.

**மிதுனம்**
வாக்கு மேன்மை, திடீர் நன்மை, தன்னம்பிக்கைக் குறைவு, முயற்சி தாமதம்.

**கடகம்**
கூட்டு முயற்சி, இனிய அனுபவம், தனவரவு, பிரயாணம்.

**சிங்கம்**
தேவையற்ற விவாதம், மனக்கிலேசம், காரிய தாமதம், தொழில் கஷ்டம்.

**கன்னி**
நல்ல முயற்சி, சயன சுகம், புதிய பொருள் சேர்க்கை நண்பர்கள் உதவி.

**துலாம்**
உணர்ச்சிவசப்படல், தந்தைவழி உறவு, காரிய தாமதம், எதிர் பார்த்த, நன்மை.

**விருச்சிகம்**
தொழில் சிந்தை, நண்பர்கள் சந்திப்பு, குடும்பசுகம், காரிய சித்தி.

**தனுசு**
கடுமையான முயற்சி, பெரியோர் ஆதரவு, உற்சாகம், முயற்சி பலிதம்.

**மகரம்**
புதிய திட்டமிடல், திடீர் பயணம், கட்டுப்பாடு, வீண் பயம்.

**கும்பம்**
வீண் தொல்லை, உடல் நலக் குறைவு, காரிய தாமதம் உறவினர் எதிர்ப்பு.

**மீனம்**
குடும்ப சுகம், வாகன வசதி, அபூர்வ சந்திப்பு, காரிய ஜெயம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

# வேலணையில் மாடுகளுக்கு தடுப்பூசி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

வேலணை கால்நடை அதிகாரியின் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் மாடுகளுக்கான தொண்டை அடைப்பான் நோய்க்கான தடுப்பு மருந்து ஏற்றப்படவுள்ளன.

தடுப்பு மருந்துகள் ஏற்றப்படும் இடங்கள், திகதிகள் பற்றிய விபரங்கள் பின்வருமாறு;

10 ஆம், 11 ஆம் திகதிகளில் காலை 9.00 மணிக்கு அலைதீவு செபமாலை கோவிலடி, 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப 10.00 மணிக்கு ஊர்காவற்றுறை பாலக்காட்டுச் சந்தி, 16 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு நாரந்தனை செருக்கன்சந்தி, மு. ப10.00 மணிக்கு இருதய ஆண்டவர் கோவில், மு. ப 11.00 மணிக்கு தம்பாட்டி அம்மன், பி. ப 1.00 மணிக்கு கணேசா பாடசாலை,

17 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 9.00 மணிக்கு புளியங்கூடல் சின்ன மடு, மு. ப 10.00 மணிக்கு சுருவில் வாசிகசாலை, புளியங்கூடல் நெசவு நிலையம் போன்ற இடங்களில் நடைபெறவுள்ளன. (க)

# யாழ்.குடா நாட்டில் குடிநீர் விநியோகம் விரைவில் நவீன முறையில்

(சுதுமலை)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் குழாய் நீர் குடி நீர் விநியோகத்திட்டத்தை நவீன முறையில் செயற்படுத்துவதற்கும், புதிய திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் இலங்கை தேசிய நீர் வழங்கல் வடிகால் சபை விரைவில் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

கடந்த வார முற் பகுதியில் மேற்படி தேசிய நீர் வழங்கல் வடிகால் சபையின் தலைவர் சேணல் விஜயசுந்தர யாழ். அலுவலகத்திற்கு விஜயம் செய்து இங்கு செயற்படுத்தப்படும் நீர் விநியோகத் திட்டங்களையும் அலுவலக நிலைமைகளையும் நேரில் பார்வையிட்டார்.

இலங்கையின் மற்றைய மாவட்டங்களில் பல்வேறு வசதிகளுடன் குடிநீர் விநியோகத் திட்ட செயன் முறைகள் செயற்படுத்தப் பட்டு வருவதாகவும், அதே வேளையில் யாழ் குடாநாட்டில் இச்சமாதான சூழ் நிலையில் புதிய திட்டங்கள் அறிமுகப் படுத்தப்படும் எனவும் நம்பிக்கை தெரிவித்தார்.

மேலும் யாழ். அலுவலகத்திற்கு தகுதி வாய்ந்த ஒரு முகாமையாளரை நியமிப்பதற்கும், ஏனைய பதவி வெற்றிடங்களிற்கு உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கும் நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துள்ளார். (க-252)

# கணனி கொள்வனவில் உயர்அதிகாரி தில்லுமுல்லு

(கொழும்பு)

கல்வியமைச்சில் பணிபுரிந்து வரும் சிரேஷ்டதர அதிகாரி ஒருவர் 800 பாடசாலைகளுக்கு கணனிகள் வழங்குவது தொடர்பான பத்திரங்களை மறைத்து வைத்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதற்கென சுமார் 10 ஆயிரம் கணனிகளை ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்குவதற்கு சுமார் 4 கோடி 50 இலட்சம் ரூபாவை வழங்கியிருந்தது.

ஆனால், கணனிகளை கொள்வனவு செய்வதற்கென கோரப்பட்ட கேள்விப் பத்திரங்களை கல்வியமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் மறைத்து வைத்திருந்தார்.

பாடசாலைகளுக்கான மூன்றாம் தவணை ஆரம்பித்துள்ள போதிலும், இக் கணனிகளுக்கான நிதி பயன்படுத்தப்படாமையால், இத் திட்டத்தினை ஆசிய அபிவிருத்தி வங்கி வாபஸ் பெற்றுக் கொள்ளும் நிலைக்கு வந்துள்ளமையும் குறிப்பிடத் தக்கது. (க-08)

### யாழ்ப்பாண

யா- சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, சி. குசாந்தினி- யா- இந்துமகளிர் கல்லூரி.

தரம் 12-13

இ. கேதாரசர்மா- யா- இந்துக் கல்லூரி, நா. சிவகரன்- யா- பரியோவான் கல்லூரி, யா. ஜெயராம்- யா- பரியோவான் கல்லூரி, ச. மயூரதி- யா- சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, உ. செந்தூரன்- யா- பரியோவான் கல்லூரி.

(உ-19)

# கொள்ளேகால் காட்டுப்பகுதி
# கர்நாடக- தமிழக அதிரடிப்படையினரால் முற்றுகை
# வீரப்பன் விரைவில் கைது செய்யப்படுவான்!

## பொலிஸ் அதிகாரி உறுதிபடத் தெரிவிப்பு

(சென்னை)

சந்தன மரக் கடத்தல் வீரப்பன் கொள்ளேகால் காட்டுப் பகுதியில் கர்நாடக தமிழக அதிரடிப் படையினரால் சுற்றி வளைக்கப் பட்டுள்ளார். எவ்வேளையிலும் இவர் கைது செய்யப்படலாமென மூத்த பொலிஸ் அதிகாரி ஒருவர் சென்னையில் தெரிவித்துள்ளார்.



வீரப்பன், நாகப்பாவுடன் மறைந்திருப்பதாகக் கருதப்படும் குண்டல் மலையின் தோற்றம்

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில் வீரப்பன் மறைந்திருக்கும் இடத்திலிருந்து சுமார் 4 சதுர கிலோ மீற்றருக்குள் வீரப்பனும், அவனது சகாக்களும் முற்றுகையிடப்பட்டதாவும், இம்முறை வீரப்பன் தப்பி விட முடியாது என்றும் தெரிவித்துள்ளார்.


குறிப்பிட்ட பகுதியில் வீரப்பனின் நடமாட்டம் காணப்படுவதாகப் பொலிசாருக்குக் கிடைத்த விசேட தகவலின் அடிப்படையில் இந்நடவடிக்கை முடுக்கி விடப்பட்டு ள்ளது.

மூவாயிரத்துக்கும் மேற்பட்ட அதிரடிப் படையினர் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதுடன், விசேட அதிரடிப்படையினருக்கும், வீரப்பன் குழுவினருக்கும் இடையில் துப்பாக்கிச் சமர் ஏற்படுமாயின் அதனை எதிர் கொள்வதற்கான அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப் பட்டதாக விசேட அதிரடிப்படைத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆகஸ்ட் 25ஆம் திகதி கர்நாடக முன்னாள் அமைச்சர் நாகப்பாவை, வீரப்பன் கொள்ளேகால் அருகேயுள்ள காமாக்கரையில் வைத்து கடத்திச் சென்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.



சத்தியமங்கலத்தை அடுத்த கடம்பூர் பகுதியில் காட்டுக்குள் முன்னேறிச் செல்லும் தமிழக சிறப்பு அதிரடிப் படையினர்.



இதே வேளையில் வீரப்பன் கைது செய்யப்பட்டால் அது உலக அதிசயங்களுள் ஒன்றாகும் என தமிழக முன்னாள் முதல்வர் மு.கருணாநிதி தெரிவித்திருந்ததாக பி.பி.சி.தனது செய்தியில் தெரிவித்திருந்தமை ஏற்கனவே தெரிந்ததே.

கடத்தப்பட்ட கர்நாடக முன்னாள் அமைச்சர் நாகப்பாவை விடுதலை செய்ய வேண்டுமெனக் கோரி அவரது குடும்பத்தினர் மற்றும் நெருங்கிய உறவினர்கள் நேற்று வீதிமறியற் போராட்டத்தில் ஈடுபட்டதாக பெங்களூர் செய்திகள் தெரிவித்தன.

## தேவாலயத்தில் தீ விபத்து

(பிறேசிலியா)

பிரேஸிலில் மூன்று நூற்றாண்டுகள் பழமைவாய்ந்த கிறிஸ்தவ தேவாலயத்தில் ஏற்பட்ட தீ விபத்து காரணமாகப்பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது.

இத் தேவாலயம் பிரேஸிலின் ஒதுக்குப்புறக்கிராமம் ஒன்றில் அமைந்துள்ளதாகவும், இங்கு ஏராளமான அரும் பொக்கிஷங்கள் இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத் தீ விபத்திற்கான காரணம் குறித்த தகவல் எதுவும் இருவரை வெளியிடப்படவில்லை. (க-3)

## பாக்.அதிபர் அமெரிக்கா பயணம்

(இஸ்லாமாபாத)

பாகிஸ்தான் ஜனாதிபதி பெர்வேஷ் முஷரட் ஒருவார கால விஜயமொன்றை மேற்கொண்டு நேற்றுமுன் தினம் அதிகாலை லாகூர் விமான நிலையத்திலிருந்து அமெரிக்கா புறப்பட்டுச் சென்றுள்ளார்.

அமெரிக்க நியூயோர்க் நகரில் 189 நாடுகள் அங்கம் வகிக்கும் ஐக்கியநாடுகள் பொதுச் சபைக்கூட்டம் எதிர்வரும் 12 ஆம் திகதி ஆரம்பமாகிறது. இக்கூட்டத்தில் உரையாற்றுவதற்காகவே அவர் நேற்று முன்தினம் சென்றுள்ளார்.

ஜனாதிபதி பெர்வேஷ் முஷரப் திட்டமிட்ட 2 அரை மணித்தியாலங்களுக்கு முன்பதாகவே இவர் புறப்பட்டுச் சென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (க-8)

## ஜம்மு தீவிரவாதிகளால்
# சுயேட்சை வேட்பாளர் சுட்டுக் கொல்லப்பட்டார்

(புதுடில்லி)

ஜம்மு காஷ்மீர் தேர்தலில் போட்டியிடவுள்ள சுயேட்சைக் குழு வேட்பாளர் ஷேவ் அப்துல் ரகுமான் தீவிரவாதிகள் என சந்தேகிக்கப்படுவோரால் கடந்த வெள்ளிக்கிழமை சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

கடந்த ஒருவாரகாலமாக நடைபெற்று வரும் தேர்தல் நடவடிக்கைகளில் சுட்டுக் கொல்லப்பட்டோரின் எண்ணிக்கை 5 பேராக உயர்ந்துள்ளது.

இதனிடையே காஷ்மீர் தீவிரவாதிகள் தேர்தல் நடத்தக் கூடாது என்று எச்சரிக்கை செய்திருப்பதும் குறிப்பித்தக்கதாகும். அத்துடன் இத் தேர்தலில் 162 பேர் போட்டியிடுகின்றனர். (உ-7)

# உலக தரிசனம்

## 35 பேர் பலி இமாலயத்தில் சம்பவம்

(புதுடில்லி)

பயணிகள் பஸ் ஒன்று ஆற்றுக்குள் பாய்ந்ததில் அதில் பயணம் செய்த சுமார் 35 பேர் பலியான சம்பவம் இந்தியாவின் இமாலயப் பிரதேசத்தில் நேற்று இடம் பெற்றது.

தலயாத்திரை செய்தோரே இந்த பஸ்ஸில் பயணம் செய்ததாகவும், 16 பேர் வரையில் படுகாயம் அடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்தவர்கள் குன்னூர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு தீவிர வைத்தியத்துக்கு உள்ளாக்கப்பட்டு வருவதாகப் பிந்திய தகவல்கள் தெரிவித்தன.

சடலங்களைத் தேடும் பணி தொடர்ந்து கொண்டிருப்பதாக மேலும் தெரிவிக்கப்படுவதுடன், ஆற்றின் ஆழத்தில் பஸ் புதையுண்டதால் மீட்புப் பணி தாமதமடைந்து வருவதாகவும் தெரியவருகிறது. (க-7)

## ஒருவருக்கு ஒரு பதவி சட்டம் செல்லுபடியற்றது சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பு

(புதுடில்லி)

தமிழ்நாட்டு அரசுகொண்டு வந்துள்ள ஒருவருக்கு ஒரு பதவி என்னும் புதிய சட்டம் செல்லுபடியற்றது என சென்னை உயர் நீதிமன்றம் அண்மையில் தீர்ப்பளித்துள்ளது.

சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழக உள்ளுராட்சி அலுவல்களில் பதவி வகிக்கக் கூடாதென்றும், அவ்வாறு பதவிகளில் இருந்தால ஏதாவதொரு பதவியை இராஜினாமாச் செய்ய வேண்டும் என்றும் தமிழக சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட சட்டத்தை எதிர்த்து, தொடரப்பட்ட வழக்கை விசாரித்த சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி வி.சுப்பிரமணியன்ரெட்டி நீதிபதி டி.முருகேசன் ஆகியோரைக்கொண்ட டிவிசன் பென்ஞ் அணமையில இத்தீர்ப்பை வழங்கியது.

நாட்டில் எதிர்காலத்தைக் கருத்திற் கொண்டு தான் சட்டம் கொண்டுவரப்பட வேண்டும் எனவும், முன் திகதி குறித்து ஒருவரது பதவியைப்பறிக்கக் கூடாது எனவும் நீதிபதிகள் தமிழக அரசுக்கு உத்தரவிட்டுள்ளனர்.

தமிழ் நாட்டரசின் இப்புதிய சட்டத்தினால் முன்னாள் சென்னை மாநகர முதல்வரான ஸ்ராலினின் பதவி பறிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (உ-8)

## தீவிரவாதிகள் தாக்குதல்
# 40 பொலிசார் நேபாளத்தில் பலி

(காதமண்டு)

நேபாள பொலிசாருக்கும் மாவோ தீவிரவாதிகளுக்கும் இடையில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற மோதலில் 40 பொலிசார் பலியானதுடன் 15 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

நேபாளத்தில் அவசர நிலை பிரகடனம் காலாவதியான 9 மாத காலத்தின் பின் கிழக்கு சிம்துலி மாவட்டத்தில் மாவோ தீவிரவாதிகளால் மேற்கொள்ளப்பட்ட அதிரடித் தாக்குதல் இதுவாகும்.

தீவிரவாதிகள திட்டமிட்டே இத்தாக்குதலை நடத்தினார்கள் என்றும் இதில் சுமார் 70 தீவிரவாதிகள் ஈடுபட்டிருந்தனர் என நேபாள உள்துறை இணை அமைச்சர் தெய்வேந்திரறாங்கண்டன் தெரிவித்துள்ளார்.

மாவோ தீவிரவாதிகளால் மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலை அடுத்து பொலிசாருக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையில் பல மணி நேரம் மோதல் இடம் பெற்றதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (க-8)



தாய்லாந்து நாட்டின் லோயி நகரில் வெள்ளம் பெருக்கெடுத்துள்ளது. வெள்ள நீருக்கு மத்தியில் மின்கம்பம் ஒன்றைப் பிடித்துக் கொண்டு நிற்கும் சிறுவனையும், மக்களின் அன்றாட வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதையும் படத்தில் காணலாம்.

## ஈராக் மீதான தாக்குதல்
# அமெரிக்காவின் ஆதரவு முயற்சிகள் பெரும் தோல்வியில் முடிந்தன

(லண்டன்)

ஈராக் மீதான தாக்குதல் நடவடிக்கை குறித்து அமெரிக்கா ஐக்கிய நாடுகள் பாதுகாப்புசபை உறுப்பினர்களின் ஆதரவைப் பெற்றுக் கொள்ளும் நோக்குடன் எடுக்கப்பட்ட முயற்சிகள் முதற் கட்டத்திலேயே எதிர்ப்பைச் சந்தித்துள்ளன.

ரஷ்யா இதற்கு கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது. ஈராக் மீதான தாக்குதலை தமதுபக்கம் நியாயப் படுத்துவது குறித்து தமக்கு ஆழ்ந்த சந்தேகங்கள் எழுந்துள்ளதாக ரஷ்ய ஜனாதிபதி அமெரிக்க ஜனாதிபதிக்குத் தெரிவித்திருப்பதாக கிறெம்ளின ஊடகச் சேவை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க.8)



போபால் நகரில் 1984ஆம் ஆண்டு இடம் பெற்ற விஷவாயு அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பொது மக்கள் மற்றும் பாடசாலை மாணவர்களை இந்தியக் குடியரசுத் தலைவர் ஏ.பி.ஜே.அப்துல் கலாம் சந்தித்து உரையாடிய போது இந்தியக் குடியரசுத் தலைவருடன் பாடசாலை மாணவனைப் படத்தில் காணலாம்.

## இரசாயன ஆயுதங்கள்
# உற்பத்தியில் ஈராக் முனைப்பு

(வாஷிங்டன்)

ஈராக் பாரிய அழிவுகளை ஏற்படுத்தக் கூடிய உயிரியல் இரசாயன ஆயுதங்களை உற்பத்தி செய்து வருவதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷும், பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயரும் கூட்டாக இணைந்து காரணம் காட்டியுள்ளனர்.

இவர்கள் இருவரும் 3 மணி நேரம் முக்கியமான பேச்சுவார்த்தைகள் நடத்தவிருப்பதற்கு முன்னர், பத்திரிகையாளர் மத்தியில் உரையாற்றும் போதே இவ்வாறு ஒன்றிணைந்து காரணங்கள் கூறியுள்ளனர்.

இவர்கள் பத்திரிகையாளர் மத்தியில் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில், ஈராக் இவ்வாறான ஆயுதங்களை உற்பத்தி செய்து வருகின்றது என்பதற்கு, அந்நாட்டின் பாகங்களில் இருந்தும் எடுக்கப்பட்ட செய்மதிப் புகைப்படங்களில் இருந்தும் தெரியவந்துள்ளதாக சர்வதேச அணுசக்தி நிலையம் கடந்த வெள்ளிக்கிழமை வெளியிட்ட அறிக்கையை சுட்டிக் காட்டியுள்ளார்கள்.

1998 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் ஒழுங்கமைப்பு பிரிவு வெளியிட்ட அறிக்கையில் ஈராக் 6 மாத காலத்துக்கு அணுவாயுத உற்பத்திகளை நிறுத்தி வைக்கக் கூடும் என குறிப்பிடப்பட்டிருந்தமையும் இரு தலைவர்களும் எடுத்து விளக்கினார்கள்.

இத்தனைக்கும் மத்தியிலும் ஈராக் அணுவாயுதங்களை உற்பத்தி செய்து வருகின்றது என்பதற்கு மேலும்ஆதாரங்கள் தேவையா? என இருவரும் பத்திரிகையாளரிடம் கேள்வியெழுப்பியுள்ளனர். (க-8)

# அமெரிக்காவில் விமானிகளுக்கு துப்பாக்கி செனட் அங்கீகாரம்

(வாஷிங்டன்)

அமெரிக்க விமானிகளுக்கு விரைவில் கைத்துப்பாக்கிகள் வழங்கப்படவுள்ளன.

அமெரிக்கப் பிரதிநிதிகள் சபையில் இப்பிரேரணை நிறைவேற்றப்பட்ட போது செனட்சபை அங்கீகரித்தால் மட்டும் இந் நடைமுறையை அமுல்ப்படுத்தப் போவதாக புஷ் நிர்வாகம் அறிவித்திருந்தது.

தற்போது இப்பிரேரணையை செனட் சபை அங்கீகரித்துள்ளதையடுத்து இந் நடவடிக்கை விரைவில் முன்னெடுக்கப்படும் என அமெரிக்க அரசுத் தரப்பு தெரிவித்துள்ளது.

அமெரிக்க வர்த்தக மையத் தாக்குதல், மற்றும் ஈராக் மீதான அமெரிக்கத் தாக்குதல்கள் போன்றவற்றில் எழுந்துள்ள அச்ச நிலையே அமெரிக்காவின் இம் முடிவிற்குக் காரணம் என அரசியல் வல்லுநர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (க-3)

## கொலம்பிய நீதிபதி சுட்டுக் கொலை

(பொஹோரா)

பாரிய அளவில் போதைப் பொருட்கள் கடத்துவோர் தொடர்பான வழக்குகளை விசாரித்த கொலம்பிய நீதிபதி பெர்னாண்டோ மென்சிலா இனம் தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

நீதிபதி தனது மோட்டார் வாகனத்தில் அலுவலகத்திற்குச் சென்று கொண்டிருந்த போதே இச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக இவருக்குக் கொலை மிரட்டல் எதுவும் இருக்கவில்லை என இரகசியப் பொலிஸ் அத்தியட்சகர் ஜொரி நொகேரா தெரிவித்துள்ளார். (க-3)

# நவரத்தினங்கள் ஜீவசக்தி வாய்ந்தனவாதலால் குற்றமற்ற கற்களையே பார்த்து அணியுங்கள்

ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும், எண்களைப் போலவே நிறங்களும் பல அற்புதங்களைச் செய்கின்றன. அழகுக்காகவோ, தம் செல்வத்தின் தன்மையைக் காட்டவோ நகைகள் அணிகிறார்கள். பெண்கள் உடல் முழுவதும் நகை அணிந்து கொண்டாலும் ஆண்கள் மோதிரம் போன்றவற்றை யாவது போட்டுக் கொள்கிறார்கள். இவற்றில் வெறும் பொன் ஆபரணங்களும் இருக்கலாம். கற்கள் பதித்தவையும் இருக்கலாம். ஆனால் பெரும்பாலும் கற்கள் பதித்த ஆபரணங்களைத்தான் அணிய விரும்புவர். அணியும் நகைகளிற் பதித்தவை சாதாரண கற்களாக இருந்தால் அவற்றால் ஒரு நன்மை, தீமையில்லை. நவரத்தினங்கள் என்று அழைக்கப்படும் கற்களாக இருந்தால், அதை அணிபவர் நன்கு ஆராய்ந்த பின்பே அணிந்து கொள்ள வேண்டும். அவ்விதம் செய்யாவிட்டால் ஏற்படும் விளைவுகளுக்கு ஆளாக வேண்டியதுதான். குறிப்பிட்ட ஒரு கல் எத்தகையது. ஒருவருக்கு நன்மை செய்யுமா, தீமை விளைவிக்குமா என்பதை உணர்ந்து கொள்வதால், வரும் விளைவுகளை அகற்றலாம் அல்லது நற்பயனை அனுபவிக்கலாம்.

## நவரத்தினங்கள் ஜீவசக்தி

நவரத்தினங்கள் என்று பாகுபாடு செய்யப்பட்ட கற்கள் ஒவ்வொன்றும் ஜீவசக்தி பெற்றவை. இந்தக் கற்களை ஒருவர் வாங்குவதற்கு முன் அவற்றில் நிபுணர்களாக உள்ளவர்களிடம் காட்டி, அவை குற்றமில்லாதவை தானா என்று அறிந்து கொள்வது மிகவும் அவசியமாகும். ஒருவர் அதிர்ஷ்டத்தை அளிக்கும் கற்களைச் சோதிக்காமல் அணியவே கூடாது. குற்றமுள்ள கற்கள் எவ்வளவுதான் கவர்ச்சிகரமானதாக இருந்தாலும் அவற்றை அணியவே கூடாது. இவ்விதம் குற்றமுள்ள கற்களை அணிந்தவர்கள் பல தொல்லைகளுக்கும், அழிவுகளுக்கும் ஆளாகி இருக்கிறார்கள்.

முக்கியமாக நீலநிறக்கல் பற்றிப் பல கதைகள் இருக்கின்றன. உண்மையான சம்பவங்களான அவை பல குடும்பங்கள் நாசமாவதற்கு காரணமான குற்றமுள்ள நீலநிறக் கற்களைப் பற்றியவை. எனக்குத் தெரிந்த ஒருவருக்கு நீலநிறக் கல்லை அணிந்து கொண்டால் அதிர்ஷ்டம் ஏற்படும் என்று சோதிடர் கூறினாராம். உடனே அந்த நண்பர் கடைக்குச் சென்று பார்க்கக் கவர்ச்சி கரமானதாகவும் விலை நயமாகவும் இருந்த ஒரு நீலநிறக் கல் பதித்த மோதிரத்தை வாங்கினார், அன்றே அதை அணிந்து கொண்டார்.

வாங்குவதற்கு முன் அந்தக் கல் நல்லதா என்று ஒருவரிடமும் கேட்கவில்லை. கடைக்காரரும் அது குற்றமுள்ள கல்லென்று கூறவில்லை. அதை விற்றால் போதுமென்று கடைக்காரர் இருந்துவிட்டார் போலும். வாங்கிய பிறகாவது நண்பர் அதை யாரிடமாவது காட்டியிருக்கலாம். அப்படியும் அவர் செய்யவில்லை. பிறகு அவர் அணிந்து கொள்வதற்கு முன் அன்று நல்ல நாள் தானா என்றும் பார்க்கவில்லை. சோதிடர் சொன்ன விதம் நீலநிறக் கல் மோதிரத்தை வாங்கியாகிவிட்டது. அணிந்து கொள்ளலாம் என்று அணிந்து கொண்டு விட்டார்.

## குற்றமுள்ள நீலக்கல்

இதன் விளைவு என்ன? கல்லை அணிந்த மூன்றாம் நாளே அவரது வியாபாரத்தில் பெருத்த நட்டம் ஏற்பட்டது. நாற்பதாவது நாள் அவரது மனைவி காலமானார். அதற்கும் நாற்பது நாட்களுக்குள் அவரது சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டன. சுமார் 6 மாதங்களுக்குள் அவர் கையில் திருவோடு எடுக்கும் அளவுக்கு வந்து விட்டார். நல்லவேளையாக அந்தச் சமயத்தில் ஒரு நண்பர் அவர் விரலில் அணிந்திருந்த நீலநிறக்கல் மோதிரத்தை பார்த்து விட்டார். அவருக்கு கற்களின் தன்மையை ஆராய்ந்து அறியத் தெரியும். அவர் நண்பரிடமிருந்து மோதிரத்தை வாங்கிப் பரிசோதித்தார். குற்றமுள்ள கல் என்பதை அறிந்தார். விபரத்தைக் கூறி அதை உடனே விற்றுவிடச் சொன்னார். மேலும் அந்தக் கல் மோதிரத்தை அணிந்து கொண்டதாலேயே அவருக்கு அந்த இழிநிலை ஏற்பட்டது என்பதையும் எடுத்துக் கூறினார். நண்பர் உடனே கடை வீதிக்குச் சென்றார். கிடைத்த விலைக்கு மோதிரத்தை விற்றார். அதன் பிறகு அவரது தொல்லைகளும் அகன்றன.

இதேபோல வைடூரியக் கல்லைப்பற்றியும் ஒரு கதை இருக்கிறது. சதுரங்கபட்டணம் கோட்டையை முற்றுகையிட்ட சமயம் தளபதிக்கு ஒரு வைடூரியக் கல் கிடைத்தது. அது சுமார் ஒரு கொட்டைப்பாக்களவு இருந்தது. பார்ப்பதற்கு மனதைக் கவர்வதாகவும், ஒளிவிட்டுப் பிரகாசித்துக் கொண்டும் இருந்தது. தளபதி அதை எடுத்துத்தன் சட்டைப் பையில் போட்டுப் பத்திரப்படுத்திக் கொண்டார்.

கோட்டையைக் கைப்பற்றும் பணியில் ஈடுபட்டிருந்த போது தளபதிக்குப் பலத்த காயமேற்பட்டது. அதனால் அவர் பல நாட்கள் மருத்துவ மனையில் படுத்திருந்தார். காயம் குணமான பிறகு அவர் இராணுவ சேவைக்குத் தகுதியற்றவர் என்று இங்கிலாந்து தேசத்திற்கு அழைக்கப்பட்டார். இங்கிலாந்து சென்ற முன்னாள் தளபதி தமக்குக் கிடைத்த கல்லை ஒரு நண்பரிடம் காட்டினார். கல்லின் கவர்ச்சி அந்த நண்பரைக் கவர்ந்தது. அவர் அதற்கு ஐந்நூறு பவுண் கொடுப்பதாகக் கூறிக் கல்லைக் கேட்டார். முன்னாள் தளபதி முதலில் கொடுக்க மறுத்தார். ஆனால் நண்பரின் வற்புறுத்தல் காரணமாக அவருக்கு ஐந்நூறு பவுணுக்குக் கல்லை விற்றார். கல்லை வாங்கிய நண்பர் அதை எடுத்துக் கொண்டு வீட்டிற்குச் செல்வதற்கு முன் அவருடைய பெரிய மாளிகை தீப்பிடித்து எரிந்து சாம்பலாகிவிட்டது.

அது ஏதோ தற்செயலாக ஏற்பட்டது என்று நண்பர் நினைத்து விட்டார். ஆனால் மூன்றாவது நாளே அவர் குடும்பத்தில் சச்சரவு ஏற்பட்டது. மனைவி அவரிடம் கோபமடைந்து தம் பெற்றோர் இல்லத்திற்குச் சென்றாள். கல்லை வாங்கிய நாற்பதாவது நாள் அவர் திடீரென்று மாரடைப்பால் மரணமடைந்தார்.

## மனத்தாங்கல்

அதன் பிறகு அந்தக் கல் அவருடைய குடும்பத்தில் ஒருவர் கையில் அகப்பட்டது. அவர் அதைப்பத்திரமாகத் தனது இல்லத்திற்கு எடுத்துச் சென்று வைத்தார். மூன்று தினங்கள் கடந்திருக்கலாம். அன்று திடீரென்று அவரது அருமைச் சகோதரருக்கும் அவருக்கும் மனத்தாங்கல் ஏற்பட்டது. அத்தனை காலமாக ஒன்றாக இருந்த குடும்பம் பிரிந்தது. பிரிவினைக்குப் பிறகு நண்பர் செய்து வந்த வியாபாரத்தில் நட்டம் ஏற்பட்டது. சரியாக நாற்பதாவது நாள் அந்த நண்பரும் திடீரென்று காலமானார். அவருக்குப் பின் அந்தக் கல்லை அவருடைய மனைவி ஒருவருக்கு விற்றாள். வாங்கியவரின் கதியும் முந்திய இருவரைப் போலவே, நேர்ந்தது. கடைசியாக அந்தக்கல் ஒரு வியாபாரியிடம் அகப்பட்டது. அவர் கல்லின் குற்றத்தை அறிந்தார். குற்றம் காரணமாகவே அந்தக் கல்லை வைத்திருந்தவர்களுக்கெல்லாம் தீமை நேர்ந்தது என்பதை அறிந்தார். இவ்வளவு பயங்கரத்தன்மை கொண்ட கல் வேறு ஒருவர் கையில் அகப்படக்கூடாது என்று அவர் அதை உடைத்துப் பொடி செய்து கடலில் கொண்டு சேர்த்தார். இன்னும் இது போன்று மரகதக் கல்லையும், மற்றைய நவரத்தினங்களையும் பற்றிப் பல உண்மைச் சம்பவங்கள் இருக்கின்றன. அவை ஒவ்வொன்றையும் விபரிக்க வேண்டுமானால் பெரிய நூலாகவே வந்து முடியும்.

அதிர்ஷ்டக் கற்கள் என்று குறிக்கப்பட்டுள்ளதை வாங்குவதற்கு முன் அதில் தேர்ச்சி பெற்றவரிடம் காட்டி குற்ற முடையதா? நல்ல ஜீவசக்தியுடன் இருக்கிறதா? என்பதைக் கண்டறிய வேண்டும். அதன் பிறகு கல்லை வாங்கி ஆபரணம் செய்து அணிந்து கொள்வதற்கு முன் நல்ல நாள் பார்க்க வேண்டும். எதற்கும் நல்ல நாள் பார்க்காமல் ஒரு காரியத்தைச் செய்வது ஆகாது. நாளும் கோளும் பார்த்துச் செய்யும் காரியங்கள் என்றைக்கும் தீமை பயக்காது. நன்மையே மேலும் நன்மையாகவே செய்யும்.

## மாணிக்கம்

மாணிக்கக் கல் மிருதுவானது. அதில் நான்கு வகைகள் இருக்கின்றன. பத்ம ராஜம், குருவிந்தம், சௌகாந்திகம், நீலகாந்தி. பத்மராஜம் தாமரை மலர் நிறத்தை ஒத்திருக்கும். ஒளி ஊடுருவிச் செல்லும் தன்மையது. உருண்டையாகவும், கண்களுக்கு குளிர்மையையும் அளிக்கக்கூடியது. குருவிந்தம் நல்ல சிவப்பாக இருக்கும். மிக நேர்த்தியாகக் காணப்படும். சௌகாந்திகம் மஞ்சள் கலந்த சிவப்பு நிறத்துடன் இருக்கும். நீலகாந்தியை நீலகங்கையென்றும் அழைப்பார்கள். அது தண்ணீரின் அடிமட்டத்திலேயே கிடைக்கிறது.

மாணிக்கக்கல் அதன் உருவத்திற்கும் அதிக கனமாகவிருக்கும். ஒளி ஊடுருவிச் செல்லும், இருட்டில் வைத்தால் ஒளி விட்டுப் பிரகாசிக்கும். கூட்டு எண் ஒன்று உடையவர்கள் மாணிக்கக்கல்லை அணிந்து கொள்வதால் எல்லாவித நன்மையும் அடைவர். பதவி உயரும். வாழ்க்கையில் எல்லா இன்பங்களையும் பூரணமாக அனுபவிப்பர். மன வலிமையற்றவர்களையும் மனோவலிமை மிக்கவர்களாகச் செய்யும்.

## முத்து

கடலின் அடியிலிருந்தே முத்து எடுக்கப்படுகிறது என்பதை அனைவரும் அறிவர். நல்ல முத்துக்கள் பால் நிறத்திலும், ஒளியுடனும் இருக்கும். இவற்றில் சற்று மங்கிய நிறமுள்ள முத்துக்களும் இருக்கின்றன. முத்துக்களை மோதிரம், காதணி, கழுத்து மாலை, வளையல்கள் ஆகப் பல வகையிலும் நகைகள் செய்து அணியலாம். கூட்டு எண் இரண்டாக உள்ளவர்கள் முத்து அணிந்து கொண்டால் அவருடைய முகத்தில் ஒரு வசீகரம் ஏற்படும். பணத்தட்டுப்பாடு ஒரு போதும் ஏற்படாது. தூய்மையான உள்ளத்தையும், பணிவையும் உண்டுபண்ணும். தாம்பத்திய வாழ்க்கையில் இன்பத்தை அளிக்கும்.

## பவளம்

நற்பவளங்கள் சற்று வெண்மை கலந்த சிவப்பு நிறமாக இருக்கும். கனமாகவும், குண்டாகவும், சற்று நீண்டும் இருக்கும். நல்ல பவளங்களை எளிதில் உடைக்க முடியாது. ஒளி ஊடுருவிச் செல்ல முடியாது. நம் நாட்டில் பவள மாலையணிய ஆசைப்படாத பெண்களே இருக்கமாட்டார்கள். சிறு பவளங்களைக் கொண்டு காதணிகளும், பொன் வளையல்களில் பதித்தும் பலர் அணிகிறார்கள். பவளங்கள் கவர்ச்சியை அளித்து நோயை அகற்றும். மற்றவர் போற்றுவர். முன் கோபக் காரரையும் சாந்த சீலராகச் செய்து விடும்.

## கோமேதகம்

பழுப்புக்கலந்த சிவப்பு நிறத்துடனும், மஞ்சளுடனும், பொன் நிறமாகவும் கோமேதகம் இருக்கும். ஒளி ஊடுருவிச் செல்லக் கூடியதாகவும், கடினமானதாகவும், பிரகாசமான ஒளியுடனும் இருக்கும். அணிபவருக்கு அதிர்ஷ்டத்தையும், மன மகிழ்ச்சியையும் அளிக்கும். நோய்களுக்குப் பாதுகாப்பாக அமையும்.

## புஷ்பராகம்

பல நிறங்களுடன் பிரகாசிக்கும் இது வெள்ளையாகவே இருக்கும். ஒளி ஊடுருவிச் செல்லக் கூடியதாகவும், சிறது மஞ்சள் கலந்துமிருக்கும். கடினமாகவும், கனமாகவும் இருக்கும். ஐந்து எண் உடையவர் பிரயாணங்கள் செய்து கொண்டேயிருப்பர். பிரயாணம் செய்யும் காலங்களில் ஏற்படும்

பாலாஜி

விபத்துக்களிலிருந்து காப்பாற்ற புஷ்பராகம் மிகவும் சிறந்தது. மேலும் இதையணிந்து கொள்வதால் செல்வம் செழிக்கும். புகழும் மன அமைதியும் ஏற்படும். மண வாழ்க்கையில் இன்பத்தை அனுபவிப்பர்.

## நீலம்

நீலக் கல் கருநீலமாக இருக்கும். ஒளியுடன் கூடிய இது சுத்தமானதாகவும், குற்றமில்லாமலும் இருப்பது மிகவும் அவசியம். நல்ல நீரோட்டமுள்ள கல்லாக விருக்க வேண்டும். நீலநிறக் கல் மோதிரம் ஆறு எண் உள்ளவர்கள் அணிந்திருந்தால் வரவிருந்த பெரிய தீமையையும் தடுத்து நிறுத்தியவராவர். நீல நிறக்கல்லை அணிந்தவர் தவறான வழியில் செல்ல இயலாது. சமூக சட்ட திட்டங்களைத் தாமாகவே கடைப்பிடிப்பர். பெருந்தன்மையாகவும் பணிவுடனும் நடந்து கொள்வர்.

## மரகதம் (பச்சை)

நல்ல மரகதம் பச்சைப் பசேல் என்ற நிறத்துடனிருக்கும். ஒளி ஊடுருவக் கூடியதாகவும், பிரகாசமாகவும் இருக்கும். கதிரவனின் ஒளி அல்லது விளக்கின் ஒளி மீது தாக்கினால் அந்த இடம் பூராகவும் பச்சை நிறமாகக் காட்சியளிக்கும். மரகதக் கல்லை அணிந்தால் கவர்ச்சியும், மன நிறைவும் ஏற்படும். வாழ்க்கையில் புகழும், உயர் பதவியும் கிடைக்கும். மண வாழ்க்கையில் மகிழ்ச்சியுண்டாகும்.


## வைடூரியம்

வைடூரியம் கடுஞ் சிவப்பு நிறமுடையது. ஒளி ஊடுருவிச் செல்லும். பிரகாசமாகவும், கடினமாகவும், கனமாகவும் இருக்கும். நோய்களைப் போக்கி ஆயுளை அதிகரிக்கச் செய்யும். ஆனால் அணிபவர் எப்போதும் பரிசுத்தமாக இருக்கவேண்டும். கல்லையணிந்து கொண்டு தீய காரியங்களைச் செய்யக் கூடாது. மீண்டும் குளித்த பிறகே அணிய வேண்டும். தீட்டுப்பட்ட வைடூரியம் கொடுமையிலும் கொடுமையான பயங்கரச் சம்பவங்கள் நிகழச் செய்யும். இந்தக் கல்லை பரிசுத்தமாக வைத்திருந்தால் அவருக்கு ஒரு குறையும் இருக்காது. அவர் வாழ்க்கையில் எல்லா நன்மையும் பெறுவார்.


## வைரம்

வைரம் மிகவும் உயர்ந்த கல் என்று அனைவரும் கூறுவர். வைரம் கடினமானது. ஒளி ஊடுருவிச் செல்லக் கூடியது. ஒளி பட்டால் வானவில்லின் அத்தனை நிறங்களையும் இந்தக் கல்லில் காணலாம். நல்ல நீரோட்டமுள்ள கல்லாகவிருந்தால் அதில் ஜீவசக்தி பூரணமாகவிருக்கும். வைரத்தை உபயோகிப்பதால் ஆயுள் விருத்தியும், புகழும் ஏற்படும். விரோதிகளை பணிய வைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியை ஏற்படுத்தி அமைதியை அளிக்கும்.

மேலே கூறப்பட்டவை அவரவர் கூட்டெண்ணுக்கு ஏற்ற கல்லை அணிவதைக் கூறினேன். ஆனால் நவரத்தினங்கள் பதித்த மோதிரத்தை அனைவரும் அணிந்து கொள்ளலாம். இது மிகவும் மேன்மையானது. இதனால் எதிரியும் வசியமாவான். செல்வம் நினைப்பதற்கும் அதிகமாகச் சேரும். நோய்கள் வராமல் பாதுகாக்கும். மன அமைதியும் ஏற்படும்.



சுவாமி விவேகானந்தரின் அழகிய திருவுருவப்படத்தை பருத்தித்துறை தம்பசிட்டி அமெரிக்கமிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை அதிபர் சு.மாணிக்கவாசகர் திரைநீக்கம் செய்து வைப்பதையும், அருகில் பருத்தித்துறை சாரதாசேவாச்சிரமத்தைச் சேர்ந்த சுவாமி சித்ரூபானந்தா நிற்பதையும் படத்தில் காணலாம்.



இமையாணன் அரசினர் தமிழ்க்கலவன் வித்தியாலய நூல் நிலையத்திற்கு ஸ்ரீராமகிருஷ்ணரின் நூல்கள் அன்பளிப்பு செய்யப்பட்ட வைபத்தின் போது பாசாலை அதிபர் திருமதி நவமணி சந்திரசேகரம் உரை நிகழ்த்துவதையும், வடமராட்சி கல்விப்பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம் அமர்ந்திருப்பதையும், சாரதா சேவாச்சிரமத்தைச் சேர்ந்த சுவாமி சித்ரூபானந்தா அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

# விடுதலைப்புலிகள் மீதான தடைநீக்கம் சமாதானத்துக்கான அத்திபாரமே

## மகல்ஹல்கடவள தேரர் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலை புலிகள் மீதான ஐக்கிய தேசிய முன்னணி அரசின் தடைநீக்கம் எதிர்கல சமாதானத்துக்கான அத்திபாரம் என இலங்கையின் நீதிக்கும், சமாதானத்துக்குமான உலக ஒத்துழைப்பு மன்ற போசகர் மகல்ஹல்கடவள புண்ணிய சார தேரர் தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவினாலும், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனாலும் மேற்கொளளப்பட்டிருக்கும் இரு தசாப்த யுத்தங்களை முடிவுக்குக் கொண்டுவரும் இம்முயற்சி, உலகளாவிய ரீதியில் போற்றப்பட வேண்டிய ஒரு விடயமாகும்.

நாட்டில் சமாதானம் மலர காத்திருக்கும் இச்சந்தர்ப்பத்தில் தாய்நாட்டின் மீது பற்றில்லாதவர்கள் சிலர் தமது சொந்த நலன்களுக்காக இனவாதம் பேசி அதனை குழப்பும் முயற்சியில் ஈடுபட்டு மேலும் நாட்டைக் குட்டிச் சுவராக்க முனைகின்றனர்.

இச் சந்தர்ப்பத்தில் தான் நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றுகூடி பிரதமரின் கரங்களை மேலும் வலுப்படுத்திக் கொள்ள வேண்டும். அத்துடன் தமிழ்ச் சகோதரர்களுக்கு நீதியான தீர்வொன்று கிடைக்க ஒத்துழைப்பு நல்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (க-08)

## சர்வதேச கிரிக்கெட் பயிற்சியாளர் மாநாடு

### 25, 26 இல் இலங்கையில்

(கொழும்பு)

சர்வதேச கிரிக்கெட் பயிற்சியாளர் மாநாடு இம்மாதம் 25, 26 ஆம் திகதிகளில் இலங்கையில் நடைபெறவுள்ளது.

இம்மாநாட்டில் பிரபல கிரிக்கெட்வீரர்களான டொனி கிரேக், பொப் வில்மர், ஸ்ரீவ் ரிக்சன், ஜோன்பக்னன், பெர்ரி ரிச்சர்ட்ஸ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இம்மாநாட்டில் இலங்கை கிரிக்கெட் துறையை அபிவிருத்தி செய்யும் எதிர்கால திட்டங்கள் மற்றும் தொழில்முறை கிரிக்கெட்போட்டிகளை நடத்துவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் பற்றி கலந்துரையாடப்படவுள்ளது. (உ-3)

## மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையீடு

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவுக்கு அருகேயுள்ள சிறுதீவுக் கடற் பகுதியில் கடந்த செவ்வாயன்று மீன் பிடித்துக் கொண்டிருந்த ஏழு மீனவர்கள கடற்படையினரால் தாக்கப்பட்ட சம்பவம் குறித்து மீனவர்கள் நேற்று முன தினம் யாழ். மாவட்ட மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இந்த முறைப்பாட்டை அடுத்து மேற்படி சம்பவத்தில் ஈடுபட்ட கடற்படையினரை எதிர்வரும் வெள்ளிக்கிழமை மனிதஉரிமை ஆணைக்குழுவில், விசாரணைக்காக கடற்படையினரை அழைத்துள்ளதாக யாழ். மாவட்ட மனித உரிமை ஆணைக்குழுவின் இணைப்பாளரும், விசாரணை அதிகாரியுமான றுவான் சந்திரசேகர தெரிவித்துள்ளார். (க-6)

## விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்க அறிவிப்புக்கு அமெரிக்கா பாராட்டு

(கொழும்பு

அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே தாய்லாந்தில் இடம்பெறவுள்ள சமாதானப் பேச்சுக்கு முன்னோடியாக விடுதலைப் புலிகள் மீதான தடையை இலங்கையரசு நீக்கியதை அமெரிக்கா பாராட்டியுள்ளது.

ஆதேவேளை விடுதலைப் புலிகள் சொல்லாலும் செயலாலும் பயங்கரவாதத்தை விட்டொழிக்கும் வரையில் அதை வெளிநாட்டுப் பயங்கரவாத அமைப்புப் பட்டியலில் தொடர்ந்து வைத்திருக்கப் போவதாகவும் அமெரிக்க அரசு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது,

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அரசும், விடுதலைப்புலிகளும் இம்மாதம் 16 ஆம் திகதி தாய்லாந்தில் பேசுவதற்கு முடிவெடுத்திருப்பது பாராட்டுக்குரியதாகும்

இந்நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை அரசுநீக்கியிருப்பது வரவேற்கத் தக்க ஒரு செயலாகும் என்றும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## நயினை அம்பிகா அணிக்கு சம்பியன் கிண்ணம்

(சுண்டிக்குளி)

ஊர்காவற்றுறை தம்பாட்டி காந்திஜீ விளையாட்டுக் கழகம், அதன 37வது ஆண்டு நிறைவை முன்னிட்டுநடாத்தி வந்த 7 வீரர்கள பங்குபற்றும் 10 ஓவர்களுக்கு மட்டுப்படுத்பட்ட மென்பந்து கிரிக்கெற் போட்டித்தொடரின், அரை இறுதி ஆட்டங்களும், இறுதி ஆட்டமும, கடந்த ஞாயிற்றுக்கிழமை கழக விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றன.

முதலில் இடம்பெற்றஅரை இறுதி ஆட்டத்தில் ஊர்காவற்றுறை அண்ணா விளையாட்டுக் கழக ஏ பிரிவு அணி அதனை எதிர்த்தாடிய தம்பாட்டி விளையாட்டு கழக ஏ பிரிவு அணியை 11 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

இரண்டாவதாக இடம் பெற்ற இன்னொரு அரை இறுதி ஆட்டத்தில் நயினை அமபிகா விளையாட்டு கழக ஏ பிரிவு அணி, அதனை எதிர்த்தாடிய ஊர்காவற்றுறை அண்ணா பி பிரிவு அணியை 56 ஓட்டங்களால தோற்கடித்தது.

இறுதி ஆட்டத்தில் நயினை அமபிகா விளையாட்டு கழக அணி அதனை எதிர்த்தாடிய ஊர்காவற்றுறை அண்ணா விளையாட்டு கழக ஏ பிரிவு அணியை 3 விக்கெட்டுக்களால் வென்று சம்பியன் ஆனது.

முதலில் துடுப்பெடுத்தாடிய அண்ணா அணி 9.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 63 ஓட்டங்களைப்பெறறது.

அதனைத்தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய நயினை அம்பிகா அணி 9 4 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து வெற்றிக்கு அவசியமான 64 ஓட்டங்களைப் பெற்று சம்பியன் ஆனது. (உ-110)

## அறிவுறுத்தல் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத் தொழிற்றுறைத் திணைக்களத்தின் நெசவுப போதனாசிரியர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் இன்று திங்கட்கிழமை யாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில்மு.ப.10மணிக்குஇடம் பெறவுளளது. (உ-19)

## தமிழர் புனர்வாழ்வு கழக யாழ் அலுவலகம் திறப்பு

(யாழ்ப்பாணம)

தமிழர்களின புனர்வாழ்வினை மையமாகக்கொண்டு தமிழர் புனர்வாழ்வுக் கழக யாழ்ப்பாண மாவட்டப்பணிமனை நாளை செவ்வாய் மு.ப10.00மணிக்குஇல 82/1 கே.கே.எஸ்வீதி, கொக்குவில் என்னும் முகவரியில் திறந்து வைககப்படவுளளது. (உ-6)

## பெண் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை மெலிஞ்சிமுனைப் பகுதியைச் சேர்ந்த பெண்மணி ஒருவர் வாந்திபேதி நோய்கது இலக்காகி மரணமானார்.

இருதயநாதன் எலிசம்மா (வயது-55) என்பவரே உயிரிழந்தவராவார்.

இதேவேளையில் இன்னும் 07 பேர் வாந்திபேதி நோய்க்கு இலக்காகியுள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (க-06)

## வன்னிக்கு வைத்திய உபகரணங்கள் அமெரிக்காவிலிருந்து

(கொழும்பு)

வன்னியிலுள்ள புதுக்குடியிருப்பு, கிளிநொச்சி, மல்லாவி ஆஸ்பத்திரிகளுக்கென அமெரிக்காவிலிருந்து பெருந்தொகையான வைத்திய உபகரணங்கள் இலங்கைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

மேற்படி உபகரணங்கள் இலங்கையை வந்தடைந்துள்ளதாகவும் பிந்திய தகவல்கள் தெரிவிக்கின்றன. (க-03)

## கிழக்கு மாகாணத்தில் இடம்பெயர் குடும்பங்களின் விபரம் கோரப்படுகின்றன

(மட்டக்களப்பு)

கிழக்குமாகாணத்தில் யுத்த நடவடிக்கைகள் காரணமாக இடம்பெயர்ந்து மீளக் குடியமர்ந்துள்ள குடும்பங்களின் விபரங்களை கிழக்கு புனர்வாழ்வு அமைச்சு திரட்டி வருகின்றது.

அமைச்சின் செயலாளர் சுசானா விடுத்த அவசர உத்தரவின் பேரில் இந்த விபரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன.

எதிர்வரும் செவ்வாய்க் கிழமைக்கு முன்னராக அவை தொடர்பான விபரங்களைச் சமர்ப்பிக்குமாறு கிழக்கு மாகாண மாவட்டச் செயலக திட்டமிடல் அதிகாரிகளை அமைச்சின் செயலாளர் பணித்துள்ளார்.

இடம்பெயர்ந்துள்ள குடும்பங்களின் பெயர் விபரங்கள், மீளக் குடியமர்த்தப்பட வேண்டிய கிராமங்களின் விபரங்கள், மேற்கொள்ளப்பட வேண்டிய உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பான மதிப்பீட்டு அறிக்கையினை சமர்ப்பிக்குமாறும் பணிக்கப்பட்டுள்ளது. (க-த)

## யாழ்ப்பாண வலய மட்ட ச. கல்வி போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண வலய மட்டத்தில் இடம்பெற்ற சமூகக் கல்விப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

மேற்படி போட்டிகளில் முதல் 5 இடங்களையும் பெற்றவர்களின் பெயர் விபரம் வருமாறு,

### பாடசாலை வகை 1

தரம் 6-7

ஆ. ஜினித்தா யா- நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்., லோ. ரம்யா யா- நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்., ச. சரண்ராஜ் யா- இளையதம்பி இந்து வித்., கு. ஜனார்த்தனன் யா- கலட்டி மெ. மி த. க, யோ. கயல்விழி யா- புத்த கலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்

தரம் 8-9

வ. றமேஸ்குமார் யா- கொக்குவில் நாமகள் வித்., செ. யசோந்தினி யா- நீர்வேலி சி.சி த க பா., கு. யூடிற்றா யா- நீர்வேலி சி.சி. த.க, வ. ஜெனனி யா- நீர்வேலி சி.சி த க, த. ஆனந்தசேகர் யா- கொக்குவில் நாமகள் வித்.

தரம் 10-11

ஆ. சிந்துஜா யா- நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்., தி. விஜயதீபன் யா- புத்த கலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்., வ. சுரேஷ்குமார் யா- கொக்குவில் நாமகள் வித்., ப. கலைச்செல்வி யா- நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்., சி. அஜந்தன் யா- கந்தர்மடம் சைவப்பிரகாச வித்.

### பாடசாலை வகை 2

தரம் 6-7

அ. லிருபநாத் யா-கரந்தன் இராமுப்பிள்ளை, தா. கௌசிகா யா- புனித திரேசா மகளிர் கல்லூரி, சி. சஜீவனன் யா- கொழும்புத்துறை இந்து மாவ., இ. விவேதிகா யா- கொட்டடி நமசிவாயம், அ. மரியமதனி யா- பாஷையூர் சென் அந்தனிஸ்.

தரம் 8-9

யோ. பிரசன்ராபாணுஜி யா- புனித திரேசா மகளிர் கல்லூரி. சி. குகணாய் யா- கொட்டடி நமசிவாயம் விந். யோ. நிரோஜா யா-புனித திரேசான் மகளிர் கல்லூரி. மு. ரஷிதா யா- செங்குந்த இந்துக் கல்லூரி, இ. நாராயணி யா- கொட்டடி நமசிவாயம் வித்.

தரம் 10-11

பூ. ராஜ்வினோத் யா-அச்செழு சைவப்பிரகாச வித்தி, சி.வினோதாயா.உரும்பிராய் இந்துக்கல்லூரி, செ. நீலஜா யா-புனித திரேசாள் மகளிர் கல்லூரி, வ. பிரதீபன் யா- வைத்தீஸ்வராக் கல்லூரி, இ.சஞ்சீவன் யா- கோண்டாவில் இராமகிருஷ்ண ம.வி.

தரம் 12-13

த.கௌதமன் யா-உரும்பிராய் இந்துக்கல்லூரி, இ.ஜெசிந்தா யா- கோண்டாவில் இராமகிருஷ்ண ம. வி. இ. வர்ஷிகன் யா-பெரியபுலம்.ம.வி, கு கோபிகா யா- உரும்பிராய் இந்துக்கல்லூரி, அ.பிரதீபா யா-வைத்தீஸ்வராக்கல்லூரி.

### பாடசாலை வகை 3

தரம் 6-7

ஜெ நெல்சன் யா-ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித், அ. யுகலிஸ்ரா யா- சென்ஜேம்ஸ் மகளிர்கல்லூரி, செ. தர்மராஜ் யா- கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி, ஜெ. ஜெகலேகா யா-புனித மரியாள் வித்தியாலயம், பே. குகநாத் யா- இடைக்காடு ம வி.

தரம் 8-9

ச நிரோஜன் யா-கனகரத்தினம் ம ம.வி., சி.சாணுகா யா- உரும்பிராய்சைவத்தமிழ் வித்தி, ம. விஜிதரன் யா- முத்துத்தம்பி ம.வி..செ வசந்தமதி யா-அச்சுவேலி மத்திய கல்லூரி, சி.ஜெகதீஸன் யா-கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.

தரம் 10-11

ப.யசோதினி யா- கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி, த. அனுஷியா யா- முத்துத்தம்பி ம.வி., ச திவாகரதாசன் யா- கோப்பாய்கிறிஸ்தவக் கல்லூரி, ம துஸாந் யா- புனித சாள்ஸ் ம.வி.,

தரம் 12-13

க. லஷ்மிகாந்தன் யா- அச்சுவேலி மத்திய கல்லூரி, சி கோபிகா யா-கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி ப. நிமலதாரணி யா-நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி, கெ இராசேந்திரம் யா- நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி, சி. காயத்திரி யா- கோண்டாவில் இந்து ம.வி.

### பாடசாலை வகை 4

தரம் 6-7

மு. அறிவரசி- யா- வேம்படி மகளிர் கல்லூரி, எம் யூட் நிசாந்- யா- சென் பற்றிக்ஸ் கல்லூரி, ஜே. லெடஸ்லோய் யா- சென்.பற்றிக்ஸ் கல்லூரி, இ. மகிபன்- யா- இந்துக்கல்லூரி, க. சுரேஷ்- யா- இந்துக் கல்லூரி.

தரம் 8-9

த. அஜந்தன் யா- இந்துக் கல்லூரி, க. விதூஜன்- யா- இந்துக் கல்லூரி, கா. நிஸாந்தன்- யா- இந்துக்கல்லூரி. சி.பா. சக்திநாதன் யா- பரியோவான் கல்லூரி, ஸ்ரீபாலன் யா- பரியோவான் கல்லூரி.

தரம் 10-11

ம. நிலக்ஷி- யா- இந்து மகளிர் கல்லூரி, மு. மேரிநிரோஜினி- யா- வேம்படி மகளிர் கல்லூரி, ம. அன்பரசன் யா- இந்துக்கல்லூரி, சு. துஸ்யந்தி

( 3ம் பக்கம் பார்க்க)

நிறையுடைமை நீங்காமை
வேண்டின் பொறையுடைமை.
போற்றி ஒழுகப்படும்

குறள்

வலம்புரி

## பொறுமை அவசியம்

பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி மெதடிஸ்த கல்லூரி ஆகியன அமைந்துள்ள பகுதி உயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப் படுத்தியுள்ளமையால் அப்பகுதியிலுள்ள வீதிகளைப் பொது மக்களின் பாவனைக்கு அனுமதிக்க முடியாதென பாதுகாப்பு அமைச்சரின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டுள்ள போதிலும், படைமுகாம்களின் நகர்வுகள் குறித்தோ, மூடப்பட்ட வீதிகளைத் திறந்து விடுவது குறித்தோ இன்னமும் தெளிவான முடிவெதுவும் அரச தரப்பால் எடுக்கப்படவில்லையென்றே கூறவேண்டும்.

இந் நிலையில் அரசும்-விடுதலைப் புலிகளும் எதிர்வரும் 16 ந் திகதி சமாதான பேச்சுவார்த்தையின் முதற் கட்டத்தை ஆரம்பிக்கவுள்ளனர். இப் பேச்சு வார்த்தையில் அடுத்த கட்டப் பேச்சுக்கான ஒழுங்குகள் இடம் பெறுவதாக இருப்பினும் வடக்கு கிழக்கு மக்களின் இயல்பு வாழ்க்கைக்கான சில விடயங்கள் பிரஸ்தாபிக்கப்படுமென நம்பலாம். இது பருத்தித்துறை முகாம் பகுதி தொடர்பாக ஆராயப்பட்ட உயர் மட்ட மாநாட்டிலும் உறுதிப் படுத்தப்பட்டுள்ளது.

எனவே எதிர்வரும் 16 ந் திகதி ஆரம்பமாகும் அரசு- புலிகள் பேச்சுக்களில் மூடப்பட்ட வீதிகள் மற்றும் படைமுகாம்கள் அமைந்துள்ள பாடசாலைகள்வணக்கத்தலங்கள் குறித்து பிரஸ்தாபிக்கப்படுமாகையால் மாணவர்கள் பொறுமையோடு நடந்து கொள்வது மிக அவசியமாகும்.

சமாதான சூழ்நிலை உருவாகும் போது மாணவர்கள் மேற்கொள்ளும் ஆர்ப்பாட்டங்கள் பேரணிகள் விபரீதமான முடிவுகளைத் தராத வகையில் பாதுகாத்துக் கொள்வதும் மாணவர்களின் கடமை என்பதால் மாணவர்கள் பொறுமையைக் கடைப்பிடிப்பது மிக மிக அவசியமாகும்.

பேச்சுவார்த்தைக்கான ஆயத்தங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது மாணவர்கள் மறியற் போராட்டங்களில் ஈடுபடுவது நியாயமானதாக இருப்பினும் சர்வதேசத்தின் பார்வையில் அவை நயத்தக்க நாகரிகமாக இருக்காது.

# தண்டனை வழங்குதல் என்பது பிள்ளைகளை உளரீதியாக பாதிக்கிறது

# எவருமே இதனை உணர்வதாக தெரியவில்லை

## பேராசிரியர் சபா. ஜெயராசா எருத்துரைப்பு

(யாழ்ப்பாணம்)

பிள்ளைகளுக்கு பெற்றோர் தண்டனை வழங்கும்போது கூட நோக்கத்தைப்பொறுத்து தண்டனை வழங்காது, தாக்கத்தைப் பொறுத்து தண்டனை வழங்கும் பழக்கம் காணப்படுகின்றமையானது, பிள்ளைகளை எத்தகைய உளத்தாக்கத்திற்கு உட்படுத்துகிறது என்பதை எவருமே உணர்வதில்லை

மானிப்பாய் இந்துக்கல்லூரியின் நூலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் முற்பகல் 9.00 மணியளவில் இடம்பெற்ற சிறுவர் கேடுறுத்தல் பற்றிய கருத்தரங்கில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ். பல்கலைக்கழக நுண்கலைப்பீடாதிபதி கலாநிதி சபா. ஜெயராசா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இணுவில் லயன்ஸ் கழக தலைவர் கலாநிதி அமிர்தலிங்கம் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் பேராசிரியர் சபா. ஜெயராசா தொடர்ந்து உரையாற்றுகையில்;

இன்று உலகளாவிய ரீதியில் சிறுவர்கள் பல்வேறு வகையான கேடுறுத்தல்களுக்கு உள்ளாக்கப் படுகின்றனர். சிறுவர்கள், கடத்தப்படுதல், சிறுவயதில் வேலைக்கமர்த்தப் படுதல், உடல் உள ரீதியான இம்சைக்குள்ளாக்கப் படுதல் சர்வசாதாரணமாக இடம் பெற்று வருகிறது.

உடல் ரீதியான துன்புறுத்தல்களை விட, உள ரீதியாக சிறுவர்கள் பாதிக்கப்படுவது குறித்து எவருமே அக்கறை கொள்வது இல்லை.

பாடசாலைகளில், வீடுகளில் கூட சிறுவர் கேடுறுத்தல் சர்வசாதாரணமாக நிகழ்கிறது. கல்வியைப் பொறுத்த வரையில் வயதிற்கு மீறிய கல்விச் சுமையை ஏற்றி அவர்களை சுய சிந்தனை அற்றவர்களாக மாற்றிவிடுவதில் பலரும் தெரிந்தோ தெரியாமலோ ஈடுபடுகின்றனர்.

பரீட்சைகள் யாவுமே போட்டி அடிப்படையில் நடத்தப்பட்டு வெறும் புள்ளிகளின் அடிப்படையில் திறமையை மதிப்பிடுவது கூட ஒருவகையான கேடுறுத்தல் தான். போட்டிப் பரீட்சையில் வெற்றி பெறாத சிறுவர்கள் எத்தகைய உளப் பாதிப்பிற்கு உட்படுகிறார்கள் என்பது அவதானிக்கப்பட வேண்டும்.

பிள்ளைகளுக்கு கற்பிக்கும் போது சொற்களை தெளிவாக உச்சரிப்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். தரமற்ற சொற்களை, வசனங்களை பயன்படுத்துவது கூட கேடுறுத்தலே.

திரைப்படங்கள் கூடசிறுவர்களின் உள்ளத்தில் வன்செயல் உணர்வை தூண்டி விடுகின்றன. தவறான பழக்க வழக்கம், நடத்தைகளிலிருந்து சிறுவர்களை உள, உடல் ரீதியாக பாதுகாப்பது சகலரினதும் பொறுப்பாகும்.

சிறுவர் கேடுறுத்தல் என்பது உளவியல் ரீதியாக மிக ஆழமாக ஆராயப்பட்டு தீர்வு காணப்பட வேண்டிய ஒரு முக்கியமான பிரச்சினையாகும். உளவியல் என்பது குறித்து பலரும், பல தரப்பட்ட வாதங்களை முன் வைக்கின்றனர்.

ஒரு தரப்பாரின் கூற்றை மறு தரப்பார். மறுதலிக்கும் தன்மையும் காணப்படுகின்றது. அந்தந்த நாடுகளின் சமூக, பொருளாதார சூழலும் இதற்கு அடிப்படைக் காரணமாகும்.

''ஆசிரியத்துவமும் சிறுவர் கேடுறுத்தலும்'' என்னும்விடயம் பற்றி மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் கு.சண்முகநாதன் உரையாற்றும் போது, மகிழ்ச்சி கரமான கற்றல் என்பது இன்று காண முடியாததாக உள்ளது. வீடு ஒரு பெரும் சுமை, பாடசாலை என்பது சுமை, கல்வி என்பது சுமை இவ்வாறு எங்கு நோக்கினும் பிள்ளைகளுடைய உளத்தாக்கத்திற்கு வழி சமைப்பனவாகவே காணப்படுகின்றன. இவற்றிலிருந்து பிள்ளைகளைப் பாதுகாக்க வேண்டியது அவசியமாகிறது.

இன்று மாணவர்கள் பெரும்பாலும் புலக்காட்சி அற்றவர்களாகவே காணப்படுகின்றனர். மகிழ்ச்சியான கற்றலை, ஏற்படுத்தக்கூடிய இடமாக பாடசாலைகளை மாற்றுவதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.

மாணவர்களுக்கு தண்டனை வழங்குதல் என்பது கூட ஒரு வகையான சிறுவர் கேடுறுத்தல் தான். மாணவருக்கு தண்டனை வழங்குவதில் தற்காலிகமான ஒரு மாற்றத்தை ஏற்படுத்தலாமே தவிர நீடித்த நிலையான மாற்றத்தை ஏற்படுத்த முடியாது. மாணவர்களை உள ரீதியில் நெறிபடுத்த, அவர்களுக்கு தகுந்த வழி காட்ட தக்கோர் முன் வர வேண்டும். தக்க அரவணைப்பு இல்லாமல் மாணவர்கள் உள ரீதியான பாதிப்புக்கு நாளாந்தம் உள்ளாகிறார்கள். அவர்களுடைய தாக்கத்தை உணர்ந்து தக்க வகையில் பரிகாரம் காணப்பட வேண்டும்.

இணுவில் லயன்ஸ் கழகம், சிறுவர் பாதுகாப்பு நிதியம் ஆகியன இணைந்து நடாத்திய இக் கருத்தரங்கில் லயன்ஸ் கழக பிராந்திய தலைவர் சற்குணானந்தன், யாழ்.பல்கலைக்கழக வணிக, முகாமைத்துவ தலைவர் பேராசிரியர் தேவராசா, சிறுவர் பாதுகாப்பு நிதியத்தைச் சேர்ந்த தற்பரன், ஆசிரியர்கள், மாணவர்கள், பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டனர். ஆசிரியர் விக்கினேஸ்வரன் நன்றியுரை பகன்றார்.

(க)

## வாந்திபேதி நோய்பற்றிய விழிப்புணர்ச்சி அவசியம்

(யாழ்ப்பாணம்)

பயங்கர நோயாகிய வாந்திபேதி நோய் தற்பொழுது மாநகரசபை எல்லைக்குட்பட்ட குருநகர் பகுதியில் இருவருக்கு ஏற்பட்டுள்ளதை இனங்கண்டு தடுப்பு நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பாதிக்கப்பட்டவர்கள் தற்போது குணமடைந்து வருகின்றனர். அதனைத்தொடர்ந்து உடன் நடவடிக்கையாக அப்பகுதிக்குச்சென்று தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதன்பலனாகஅப்பகுதி சுத்தம் செய்யப்பட்டு கிருமிநாசினி விசிறப்பட்டு, கிணறுகளுக்குக் குளோறின் போடப்பட்டன.

பொதுமக்களுக்கு வாந்திபேதிபற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடவடிக்கையாக;

★ தனிநபர் சுகாதாரம்.
★ சுற்றாடல் சுகாதாரம்.
★ உணவுச் சுகாதாரம்.
★ கொதித்தாறிய நீர் பருகல் போன்ற சுகாதாரம் பற்றிய விடயங்களையும், நோய் ஏற்படுவதற்கான அறிகுறிபற்றியும் சுகாதாரக் கல்விமூலம் அப்பகுதி மக்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது;

இவ்வாறு யாழ். மாநகர சபை வைத்தியஅதிகாரி ம. மரியதாசன் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது

அதில் மேலும் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது;

மாநகரசபைமூலம் சவர்க்காரம், தடுப்பு மருந்துவகைகளும் வழங்கப்பட்டன.

உணவகங்கள், உணவு கையாளும் நிலையங்கள் முதலியவற்றிற்கு சுகாதாரப்பரிசோதகர்கள் சென்றுபார்வையிட்டு ஒருசில உணவகங்கள் உடன் மூடப்படவேண்டும் என்றும், மற்றும் உணவு கையாளும் நிலையங்களுக்கு வேண்டிய அறிவுறுத்தல்களும் சுகாதாரக்கல்வியும் வழங்கப் பட்டன.

வாந்திபேதி நோய் மாநகர சபை சுகாதாரப் பகுதியினரின் தொடர் நடவடிக்கையாலும், சுகாதாரக்கல்வி புகட்டலாலும் தற்சமயம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்விடயத்தில் பொதுமக்கள் விழிப்புடன் இருந்து இந் நோய் பரவாமல் தடுப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் கேட்டுக்கொள்கிறோம்.

(உ)

### தினசரி தியானம்

## திருப்தியுடையவர்

தனக்கு நேருகின்ற நிகழ்ச்சிகள் அனைத்தும், தனது பழைய காலச்செயல்களின் பலன்களே என்பதை உணர்கின்றவனே திருப்தியுடைய மனிதன். அவன் அழியக்கூடிய பொருள்களைப்பெறுவதற்கானமுயற்சிகளில் ஈடுபடமாட்டான். அவன் பல்வேறு விவகாரங்களுக்கிடையில் தன்மானத்தையும், அறிவையும், பரம்பொருளான இறைவனிடம் நிலைக்கச்செய்கிறான் எப்போதும் மகிழ்ச்சியும், உற்சாகமும், உடையவனாக இருக்கிறான் இடைவிடாத தியானத்தின் காரணமாக, அவனதுமனம் இறைவனது சிந்தனையால் நிறையப்பெற்றிருக்கிறது.

சுவாமி சிவானந்தர்

## யாழ். மாவட்டத்தில் 2 வருட வர்த்தக திட்டத்தை ஜி. ரி. II அறிமுகப்படுத்தும்

(கொழும்பு)

யாழ்ப்பாண மாவட்டத்துக்கான இருவருட துரிதவர்த்தக மேம்பாட்டுத் திட்டங்கள், ஜி.ரி. IIநிறுவனம் மூலம்நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

இத்திட்டங்களை தயாரிக்கும் பணி குருநாகலில் இயங்கும் வடமேல் மாகாண கைத்தொழில் சேவைகள் பணியகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக அதன்பணிப்பாளர் காமினி சேனநாயக்கா தெரிவித்துள்ளார்.

இத்திட்டவரைவுஎதிர்வரும் நவம்பர் மாதம் ஜி.ரி II நிறுவனத்திடம் கையளிக்கப்படவுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-8)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

மருத்துவ உத்தியோகத்தர்கள் (ஆரம்ப தரம்) பல்வைத்திய உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கான வினைத்திறமை காண் தடைப்பரீட்சைக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பங்கள் இம்மாதம் 27 ஆம் திகதிக்கு முன்னராக பணிப்பாளர் (பரீட்சை) த.பெ.இல. 513 கொழும்பு 10 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

● ● ●

இலங்கை நீதிமன்ற பேச்சுப் பெயர்ப்பாளர் சேவையின் II ஆம் தர பேச்சுப்பெயர்ப்பாளர் பதவிகளுக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பங்கள் இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர், நீதிச்சேவை ஆணைக்குழு அலுவலகம், கொழும்பு 12 என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். (க-3)

## வருடாந்த உற்சவம்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி அரச கேசரிப் பிள்ளையார் கோவில் வருடாந்த மகோற்சவம் இம் மாதம் 11 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

20 ஆம் திகதி காலை.8.00 மணிக்கு தேர் உற்சவமும் 21 ம் திகதி தீர்த்த உற்சவமும் 22 ஆம் திகதி பூங்காவன உற்சவமும் இடம் பெறும்.

(க)

### புலிகள் மீது....

றும் அப் பேட்டியில் ஹரிம் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி பாதுகாப்பு அமைச்சை தன்வசம் எடுத்து விடுதலைப்புலிகள் மீது மீண்டும் தடை விதிக்க முடியும்.

ஆனால் தற்போது நிலவும் அரசியல் சமாதான சூழ்நிலைக்குப் பாதிப்பை ஏற்படுத்த ஜனாதிபதி விரும்பவில்லை. அதனை அவர் செய்யவும் மாட்டார்.

விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்க விவகாரத்தைப் பொறுத்த வரையில் ஏற்கனவே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா திறந்த மனதுடன் தனது கருத்தை வெளியிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டு அதில் ஏற்படுகின்ற முன்னேற்றத்தைப் பொறுத்தே புலிகள் மீதான தடை நீக்கம் இடம் பெற வேண்டும் என்பது ஜனாதிபதி சந்திரிகாவின் நிலைப்பாடு.

ஆனால் தற்போது அரசு பேச்சுவார்த்தைக்கு முன்பாகவே புலிகளின் தடையை நீக்கியுள்ளது. இதனால் ஏற்படும் விளைவுகளுக்கு அரசாங்கமே பொறுப்பு.

19வது அரசியல் சட்ட திருத்த மூலம் தொடர்பாக ஹரிம் பீரிஸ் தெரிவிக்கையில், இத் திருத்தச் சட்ட மூலத்தில் ஜனாதிபதிக்கு அச்சுறுத்தல் விடுக்கும் அம்சங்கள் இருப்பதினால் அதனைப் பொதுஜன ஐக்கிய முன்னணி ஆதரிக்காது என்றும் ஹரீம் பீரிஸ் தெரிவித்துள்ளார். (ம)

### 19வது திருத்த....

யிடப்படவுள்ளது.

இதேவேளை 19வது சட்டத்திருத்த மூலம் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா கட்சியின் முக்கியஸ்தர்களுடனும், முன்னாள் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருடனும் இன்று கலந்துரையாடவுள்ளதாகவும், இதனைத் தொடர்ந்து ஜனாதிபதி தனது நிலைப்பாட்டைஅறிவிப்பார் என்றும் பொதுஜன ஐக்கிய முன்னணி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ம)

## சித்த மருத்துவர்களை பதிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

சித்த மருத்துவர்களாகப் பதிவு செய்வதற்காக விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 15ம்,16ம் திகதிகளில் யாழ். செயலகத்தில் நடைபெறும் என பேராசிரியர் பவானி அறிவித்துள்ளார்.

இதேவேளை 15ந் திகதி காலை 9.30 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் தேசிய மருத்துவத்தைப் பாதுகாக்கும் நிறுவனம் சித்த மருத்துவர்களுடனான கலந்துரையாடல் ஒன்றையும் நடத்தவுள்ளது. (ந)

### ஹயஸ் வானில்...

வீட்டிற்குள் ஓடிச் சென்றார். இதனையடுத்து கடத்தல்க்காரர்கள் அங்கிருந்து வேகமாகத் தப்பிச் சென்றுள்ளனர்.

நேற்று மாலை இடம் பெற்ற மேற்படிச் சம்பவத்தை அடுத்து அப்பகுதி மக்கள் மத்தியில் பெரும் பரபரப்பும் அச்சமும் நிலவிவருகிறது. மாலை வேளைகளில் இளம் பெண்கள் வீதியில் தனியே சென்றுவர அஞ்சுவதாகவும் தெரிவிக்கப் படுகின்றது.

இதேவேளை கடந்த வெள்ளிக்கிழமை சுழிபுரம் பகுதியில் இதே போன்றதொரு கடத்தல்ச் சம்பவம் பொதுமக்களினால் முறியடிக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-216)


வலம்புரி
+
சங்குநாதம்
வவுனியா, கொழும்பு
விலை ரூபா:- 17.00


# எமது தேசத்தின் மீது கொண்ட இறுக்கமான உறவின் அடையாளமே "சுதந்திர வேட்கை"

## நூல் வெளியீட்டில் கவிஞர் புதுவை

(யாழ்ப்பாணம்)

எமது தேசத்தின் விடுதலைப் போராட்ட வரலாறுகளை முன் நகர்த்தும் செயற்பாடாகவே "சுதந்திர வேட்கை" என்ற நூல் அமைந்துள்ளது.

இவ்வாறு விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை தெரிவித்துள்ளார்.

நேற்று பிற்பகல் 3 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தின் துணைவியார் திருமதி அடேல் பாலசிங்கம் எழுதிய "சுதந்திர வேட்கை" எனும் நூல் வெளியீட்டு விழா இடம் பெற்றது.

இந் நிகழ்வில் நூல் வெளியீட்டு உரையை நிகழ்த்தும் போதே கவிஞர் புதுவை இரத்தினதுரை மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.


அங்கு அவர் மேலும் பேசுகையில்: எமது தேசத்தின் மீது இனம் புரியாத இறுக்கமான ஓர் உறவினை அடேல் பாலசிங்கத்தின் நூல் எடுத்துக் காட்டுகின்றது.

எமது மக்களின் வாழ்க்கை முறையை நன்கு அறிந்த ஒரு பெண் போராளி எழுதும் உயிரின் காவியமே இந்த "சுதந்திர வேட்கை" நூலாகும்.

இறுக்கமான அன்புறவை எமது மண்ணுடனும் மக்களுடனும் நூலாசிரியர் கொண்டுள்ளார்.

தமிழ்ப் போராட்ட வரலாறுகளை நாட் குறிப்பில் குறித்து வைத்து அதனை நூலாக வெளியிட்ட ஒரு தமிழிச்சியை நாம் பாராட்டு கின்றோம் என்றும் கூறினார். (இ-6)

## அத்தியடிப் பிள்ளையார் கும்பாபிஷேகம் இன்று



யாழ்.வண்ணை அத்தியடி ஸ்ரீ சிதம்பர நடராஜ வீரகத்திப் பிள்ளையார் ஆலய மகா கும்பாபிஷேகம் இன்று காலை 6.30 மணிக்கும 7.29 மணிக்கும்இடையிலான சுபவேளையில் பிரதம குரு சிவஸ்ரீ நா.யோகீஸ வரக்குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது. (இ)

### புலிகளின்...

அரசாங்கம் மீண்டும் அழுலுக்கு கொண்டு வரும் என்று தெரிவித்த அமைச்சர் டிரோன்

எண்ணற்ற மக்களை கொன்று குவித்த ஜே.வி.பி அரசியல் பாதையில் நுளைய அனுமதிக்கப்பட்டிருக்கும் நிலையில் விடுதலைப் புலிகள் மீதான் தடையை நீக்கி அவர்களை அரசியலில் ஈடுபடவைப்பதில் தவறொன்றும் இல்லை என்றும் கூறினார். (இ)

### சமாதானத்தை.....

ஊறுகொடவத்தசந்தி, ஹிருன்னேசந்தி, ஈகிய இடங்களில் இருந்தும் மலையக மக்கள் முன்னணித் தலைவர் எஸ்.சந்திரசேகரன் தலைமையில் கொழும்பு ஐந்துலாம்படிச் சந்தியில் இருந்தும் ஊர்வலங்கள் ஆரம்பமாகும்

நாட்டின் பலபாகங்களிலும் இருந்து மக்கள் ஊர்வலத்தில் கலந்து கொள்வதற்காக, அரச தனியார் துறையைச் சேர்ந்த 2500 பஸ்வண்டிகளும், ஆறு புகையிரத வண்டிகளும் பயன் படுத்தப்படவுள்ளன.

கொழும்பு மாநகரசபை மைதானத்தில் நடை பெறவுள்ள கூட்டதில் பிரதமர் ரணில் விக்கிரம சிங்க உட்பட ஐக்கியதேசிய முனனணித் தலைவர்கள் மலையகக் கட்சித் தலைவர்கள், தமிழ்க் கட்சிக் கூட்டமைப்புத் தலைவர்கள உரையாற்றவுள்ளனர்.

இன்று நடை பெறவுள்ள மக்கள எழுச்சி சமாதானக் கூட்டத்தை அடுத்து கொழும்பு நகர பாடசாலைகள் யாவும் முற்பகல் 11 மணியுடன் மூடப்படவிருப்பதாகவும் பாதுகாப்பு கடமையில் சுமார் 4 ஆகாயவிமானங்கள் ஈடுபடவுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகின்றுது. (ம-5)

## மாவட்ட செயலர் பதவிக்கு விண்ணப்பம் கோரப்படும்

(கொழும்பு)

தற்போது நாட்டில் வெற்றிடமாகவுள்ள மாவட்ட செயலாளர்களின் பதவிகளை நிரப்புவதற்கு விண்ணப்ங்கள் கோருவதற்கு அமைச்சர் அலிக அலுவிகார நடவடிக்கை மேற் கொணடுள்ளார்.

யாழ்ப்பாணம், அம்பாறை ஆகிய மாவட்டச் செயலாளர்கள் நியமனத்திற்கும் புதிய விண்ணப்பங்கள் கோர விருப்பதாகவும் அமைச்சர் அலிக் அலுவிகார மேலும் தெரிவித்துள்ளார். (ம)


யப்பான் எலக்ரோனிக்ஸ் எஞ்சினியர்ஸ்

கணணி உற்பத்தி நிறுவனமான e-Pact இன் வன்னி மண்ணில் ஏக முகவர்களாக "யப்பான் எலக்ரோனிக்ஸ் எஞ்சினியர்ஸ்" தொழிற படுகின்றனர்.

இல. 28 புகையிரத நிலைய வீதி. வவுனியா.

ஒரு வருட உற்பத்தியாளர் உத்தரவாதம்

நான்கு வருட விற்பனைக்குப் பிந்திய சேவையும் வழங்கப்படுகின்றது.

[C/4981]



உ

சிவமயம்

திருமணத் திருமுகம்

அன்புடையீர்

நிகழும் மங்களகரமான சித்திரபானு வருடம் ஆவணி மாதம் 26ம் நாள் (11.09.2002) புதன் கிழமை காலை 10.51 மணி முதல் 12.00 மணிவரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்

எமது சிரேஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
குமணன்
அவர்களுக்கும்



எமது திருதித புத்திரி
திருநிறை செல்வி
இலங்கேஸ்வரி
அவர்களுக்கும்

திருவருள் துணை கொண்டு நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்மன் ஆலய திருமண மண்டபத்தில திரு மாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதரராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

வரவேற்புபசாரம் 13.09.2002 வெள்ளிக்கிழமை பி.ப 3.00 மணிக்கு "குமுதம்" வல்லை வீதி சங்கானை இல்லத்தில் நடை பெறும்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும

திரு.திருமதி.தா.சு.லோகநாதன்.
தம்பதிகள்
"அன்னை இல்லம்"
43,கேசாவில் பிள்ளையார் வீதி
யாழ்ப்பாணம்.

திரு.திருமதி.க.தியாகராசா.
தம்பதிகள்
மிசன் பாடசாலை ஒழுங்கை
கோண்டாவில்.

(இரு வீட்டார் அழைப்பு)



யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்
நடாத்தும்
விஞ்ஞானக் கண்காட்சி

காலம் : செப்டம்பர் 11, 12, 13
நேரம் : மு.ப 9மணி முதல் பி.ப 4 மணி வரை
இடம் : வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

யாழ்.பல்கலைக் கழகத்தினர், IIS கணனி நிறுவனத்தினர், மற்றும் யாழ்,கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட முன்னணிப் பாடசாலை மாணவர்கள் பங்கு பற்றும் வியத்தகு கண்காட்சிகள்.

நுழைவுச் சீட்டு : மாணவர்கள் 10 ரூபா
ஏனையோர் 20 ரூபா

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

செயலாளர்
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்.

[C/4979]



SERENDIB EXPRESS
(The Preferred Airline)

எங்கள் விமான சேவையினூடாக கொழும்பிற்கு ஒரு மணி நேரத்தில் சென்றடைவதற்கு ரூபா 2700/- மட்டுமே!

உங்கள் பயணத்தைத் தொடர எம்மை அழையுங்கள்

மனோஜ் எக்ஸ்பிரஸ் சேர்விஸ்சஸ்
13,மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
077 - 801038
077 - 512648

மனோஜ் எக்ஸ்பிரஸ் சேர்விஸ்சஸ்
67/A, ஆட்டுப்பட்டி தெரு,
கொழும்பு – 13.
072 - 266108
077 - 517019
E - Mail: mes@Dialogsl.net.

[C/4980]


இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில 09.09.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வலம்புரியின் வாரமலர்

பக்கங்கள் - 16

# சங்கு நாதம்


(09-15 செப். 2002)

Sankunatham

சங்கு:- 03 வள்ளுவர் ஆண்டு 2033 தொலை பேசி 3378 நாதம்:- 27

பக்கம்-02

அரசியல் அலசல்

பக்கம்-08

மௌனத்தின் தேடல்கள்

பக்கம்-11

மகளிர் உலகம்

பக்கம்-14

சிறுவர் அரங்கம்

பக்கம்-16

சினிமாச் சிதறல்

# சமாதானத்தைக் குழப்புவதற்கு முந்துகிறது முஸ்லிம் காங்கிரஸ்



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் வாரமலர்

# சமாதானத்தைக் குழப்புவதற்கு முந்துகிறது முஸ்லிம் காங்கிரஸ்

அரசும் விடுதலைப்புலிகளும புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்ட பின்னர் எதிர்வரும் 16ம், 17ம்,18ம் திகதிகளில் முதற் கட்ட சமாதானப் பேச்சுவார்த்தைகள் இடம பெறவுள்ளது.


சமாதானப் பேச்சுவார்த்தைகள நடைபெற வேண்டுமாயின் விடுதலைப்புலிகள் மீதான தடை நீக்கப்




பட வேண்டும் என்ற நிபந்தனை அரசினால் பூர்த்தி செய்யப்பட்டதை அடுத்தே சமாதானப் பேச்சு 16ந் திகதி ஆரம்பமாகுமென்ற நம்பிக்கை மக்கள் மத்தியில் ஏற்பட்டது.

### புலிகள்மீதான தடை நீக்கம் முக்கிய திருப்பம்

தமிழீழவிடுதலைப்புலிகள் மீது இலங்கையின் அரசியல் எல்லைக்குள் போடப்பட்ட தடையானது கடந்த 5ந் திகதி அதிகாலை நீக்கப்பட்டது. 1998ம ஆண்டு பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தினால் புலிகள் மீதான



தடை அமுல்படுத்தப்பட்டது. தலதா மாளிகைக் குண்டுவெடிப்பு மற்றும மத்திய வங்கிக் குண்டுவெடிப்பு என்பவற்றை அடுத்து புலிகள் மீதான தடையை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா பாதுகாப்பு அமைச்சர் என்ற எல்லைக்குள்-இருந்து கொணடு அமுல்படுத்தினர்.

எனினும் ஐக்கியதேசிய முன்னணி அரசாங்கம் ஆட்சிப் பீடம ஏறியதும் விடுதலைப் புலிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றைச் செய்து கொண்டது. அதன் விளைவாக அரசும் விடுதலைப்புலிகளும் இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்துப் பேசுகின்ற சந்தர்ப்பம் ஏற்படடுள்ளது. இவ்வாறு அரசுடன் பேசுவதாயின் தம்மீது விதித்துள்ள தடை நீக்கப்பட வேண்டுமென்பது புலிகளின் கோரிக்கை.

இக்கோரிக்கைக்கு அமைவாகவே கடந்த 4ந் திகதி நள்ளிரவு 12மணிக்கு வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானி மூலம் 5ந் திகதி அதிகாலையிலிருந்து விடுதலைப் புலிகள் மீதான தடை இலங்கையின் அரசியல் எல்லைக்குள் நீக்கப்படுவதாக பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன அறிவித்துள்ளார். இவ்வறிவித்தல் உத்தியோகபூர்வமானதேயொழிய, புலிகள் மீதான தடையானது - எப்போது அரசு விடுதலைப புலிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டதோ அன்றிலிருந்து நீக்கபபட்டு விட்டதென்பதே உண்மை. உள்நாட்டு அரசியல் எல்லைக்குள் தடைசெய்யப்பட்ட இயக்கத்துடன் அரசு ஒப்பந்தமொன்றைச் செய்துள்ளதெனின் அது தன்னியல்பாகவே புலிகள் மீதான தடையை நீக்கியுள்ளதென்பது பொருளாகும்.

இல்லையேல் தடைசெய்யப்பட்ட இயக்கத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தமும் செல்லுபடியற்றதாகிவிடும். ஆகையால் புலிகள மீதான தடை புரிந்துணர்வோடு நீக்கப்பட்டிருப்பதும் அது உத்தியோகபூர்வமாக கடந்த 4ந் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது என்பதும் புதியன அல்ல.

### தடை நீக்கத்திற்கு ஜனாதிபதி சம்மதமே

விடுதலைப்புலிகள் மீதான தடை பல்வேறுபட்ட சட்ட சிக்கல்களை ஏற்படுத்துமெனவும். தடை நீக்கத்தை ஜனாதிபதி தடுத்து நிறுத்தமுடியுமெனவும் அரசியல்



தரப்பில் பலரும் கருதியதுண்டு. ஆனால் இதற்கு சட்டமா அதிபர் முற்றுப்புள்ளி வைத்தார். அதாவது பாதுகாப்பு அமைச்சரினால் கையொபபமிட்டு அறிவிக்கப்பட்ட விடுதலைப் புலிகள் மீதான தடையை பாதுகாப்பு அமைச்சர் கையொப்பமிடுவதன் மூலம் நீக்கமுடியுமென சட்டமாஅதிபர் தெளிவுபடுத்தியிருந்தார்.

இதனடிப்படையிலேயே பாதுகாப்பு அமைச்சர திலக் மாரப்பன புலிகள் மீதான தடை நீக்கத்திற்கு கையொப்பமிட்டார். விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கத்திற்கு தான் எதிர்ப்புப் போல ஜனாதிப்தி காட்டிக்கொண்டாலும் உளளூர அவரும் புலிகள் மீதான தடை நீக்கத்திற்கு ஆதரவு என்பது மறுக்கப்படமுடியாத உண்மை. விடுதலைப்புலிகளுடன் அரசு விரைவாக பேச்சு நடத்தி இனப் பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டும். பேச்சுக்களை விரைவுபடுத்துவதையே நான் விரும்புகின்றேன் என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா பல தடவைகள் கூறியுள்ளார்.

பேச்சுவார்த்தையை விரைவுபடுத்துங்கள் எனக் கூறும் ஜனாதிபதிக்கு புலிகள் மீதான தடையை நீக்காவிட்டால் பேச்சுக்கள் நடைபெறாது என்பது தெரியாத விடயமல்ல. அப்படியாயின் புலிகள் மீதான தடையை நீக்கி அவர்களுடன் அரசு பேச வேண்டும் என்பதே ஜனாதிபதியின் விருப்பமாகும். அதேவேளை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா கடந்த 3ம் திகதி ஜனாதிபதியைச் சந்தித்த பின்னரே, புலிகள் மீதான தடை நீக்கம் பற்றிய அறிவித்தல் 4ந் திகதி நள்ளிரவு வெளியாகியது. பிரதமருக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் நடைபெற்ற இச் சந்திப்பு புலிகளின் தடை நீக்கத்திற்கு ஜனாதிபதியிடம் அனுமதி பெறும் ஓர் சந்திப்பாகவே அமைந்திருந்தது.

எனினும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்களுககும், ஜே.வி.பி போன்ற இனவாதக் கட்சிகளுக்கும் தன்னைக் காட்டிக்கொள்ளாத வகையில் புலிகள் மீதான தடை நீக்கத்திற்குத் தான் தடைபோல் ஜனாதிபதி காட்டிக் கொண்டிருக்கிறார்.

### பேரினவாதிகளின் பருப்பு அவியாது

விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்க கூடாது என ஜே.வி.ப, சிஹல உறுமய போன்ற கட்சிகள் ஊளையிட்ட போதிலும், பிரதமர் ரணில் அவற்றையெல்லாம் மீறி தனது வாக்குறுதிகளை நிறைவேற்றியுள்ளார். இதன் காரணமாக எதிர்க் கட்சிகள் இப்போது தனித்தனியாகவும், கூட்டாகவும் அறிக்கைகளை விட்டு வருகின்றன. இதில் ஒரு சில கட்சிகள் பாதுகாப்பு அமைச்சருக்கு எதிராக வழக்கு தாக்குதல் செய்யப் போவதாகவும் பாராளுமன்றில் அவருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவரப்போவதாகவும் பயமுறுத்தி வருகின்றன.

பேரினவாதிகளின் இக் கூச்சலுக்கு தென்னிலங்கை சிங்கள மக்கள் ஒரு போதும் செவி சாய்க்கப் போவதில்லை என்பதோடு அவர்களுக்கு ஆதரவு வழங்கப் போவதில்லை என்பதும் சர்வநிச்சயம். இப்போதெல்லாம் தென்னிலங்கை மக்களைப் பொறுத்தவரை அவர்களுக்கு தேவையாக இருப்பது சமாதானம் மட்டுமே.


### ஜனாதிபதியும் எதிர்க்க முடியாது

1983ல் திருநெல்வேலியில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டதற்காக ஒரு பெரும் இனஅழிப்பு தென்னிலங்கையில் ஏற்பட்டது. இனவாத நெருப்புக்குப் பேரினவாதிகள் எண்ணெய் விட்டனர். அதனால தமிழ் மக்கள் கொன்றொழிக்கப்பட்டார்கள். உடைமைகள் சூறையாடப்பட்டன. இலங்கை பௌத்த தேசம் என்ற கொள்கையோடு செயறபட்ட இனவாதிகள் ஜூலைக் கலவரத்தோடு தென்னிலங்கையில் இருந்து தமிழ் மக்களை அழித்து விடலாம் என் கனவு கண்டனர்.

இது ஒருபுறம் நடக்க மறுபுறத்தில்



தமிழ் மக்கள் இலங்கைத் தீவில் உரிமையோடு - சுதந்திரத் தோடு வாழ வேண்டுமாயின் அதற்கு ஓரே வழி ஆயுதப் போராட்டமே என்ற கொள்கை தமிழ் இளைஞர்களிடம் வலுப்பெற்றது. 1983 களில் தமிழ் இளைஞர்களிடம் வலுப்பெற்ற



போராட்ட உணர்விற்கு சிங்களப் பேரினவாதிகள் முகம் கொடுக்க முடியாது மண்டியிட்டனர்.

பாதுகாப்புப் படைகள் அதிர்ந்து போயின. படைத்தரப்பில் ஏற்பட்ட ஆயிரக்கணக்கான உயிரிழப்புகள் தென்னிலங்கையில் சமாதானம் என்ற குரல் ஒலிப்பதற்கு வகை செய்தது. அதன் ஒரு வெளிப்பாடே இன்று அரசு -விடுதலைப்புலிகளுடன நடத்த முன்வந்நுக்கும் சமாதானப் பேச்சுவார்த்தையாகும். இப் பேச்சுவார்த்தையில் தனிநாடு என்ற கோரிக்கை தவிர்ந்த ஏனைய விடயங்கள் ஆராயப்படுமென வெளிவிவகார அமைச்ர் டிரோன் பெர்ணாட்போ தெரிவித்துள்ளார். அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே நடைபெறப்போகின்ற சமாதானப் பேச்சுவார்த்தையில் முஸ்லிம் மக்களின் உரிமையையும் உறுதிப்படுத்தி விடவேண்டும் என்பதில் அமைச்சர் ஹக்கீம் முனைப்புடன் செயற்படுகிறார். விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்ட அமைச்சர் ஹக்கீம் வாழைச்சேனையில் ஏற்பட்ட தமிழ்-முஸ்லிம் மக்களுக்கிடையேயான வன்முறைச் சம்பவத்தை தனக்கு சாதகமாக்கிக் கொண்டு முஸ்லிம்களின் உரிமையை, அவர்களின் பாதுகாப்பை இச் சந்தார்ப்பத்தில் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டுமென முடிவு கட்டிக்கொண்டார்.

### அரசுக்கு எச்சரிக்கை

முஸ்லிம்களின் உரிமை விடயத்தில் தானும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசும் உறுதியாக இருக்கின்றது என்பதை அரசுக்கு தெளிவுபடுத்துவதற்காக வடக்கு கிழக்கு மாகாணத்தில் திட்டமிட்டபடி உள்ளூராட்சித் தேர்தலை நடத்தாவிட்டால் ஸ்ரீலங்கா முஸ்லீம்காங்கிரஸ் அரசுக்கு வழங்கிவரும் ஆதரவை விலக்கிக் கொள்ளுமென அமைச்சர் ஹக்கீம் அரசுக்கு எச்சரிக்கை செய்தார் இதனால் பிரதமர் ரணில் ஆடிப்போனதுண்டு -அமைச்சர் ஹக்கீமின் அறிவிப்பு முஸ்லீம் மக்களைப் பொறுத்தவரை தக்க நேரத்தில் விடப்பட்டதொரு இராஜதந்திர அறிவிப்பாகும். அதாவது இலங்கையில் எந்தக்கட்சி ஆட்சி செய்வதென தீர்மானிப்பது முஸ்லீம்களே. எனவே ஆட்சியமைக்கும் அதிகாரம் முஸ்லீம்களுக்கு இருப்பதனால் பிரதமர் ரணில் நிதானமாக செயறபட வேண்டுமென்பது ஹக்கீமின எச்சரிக்கை.

அமைச்ர் ஹக்கீமின் எச்சிக்கை விடுதலைப் புலிகளுக்கும் இக்கட்டானதோர் நிலையை ஏற்படுத்தியிருந்தாலும், விடுதலைப் புலிகள் அதனை ராஜதந்திர ரீதியாக கையாணடனர். அமைச்சர் ஹக்கீம் முதற் கட்டப் பேச்சுக்களில் அரச பிரதிநிதியாகவும், ஏனைய பேச்சுக்களில் முஸ்லீம் பிரதிநிதியாகவும் பங்கு பற்றலாம் என்ற அனுமதியை அமைச்சர் ஹக்கீம் - கலாநிதி அன்ரன் பாலசிங்கத்துடனான சந்திப்பின் போது வழங்கப்பட்டது. இதன்மூலம் ஹக்கீம் அமைதியடைந்தார்.

சமாதானப் பேச்சுக்களுக்கு முன்னதாக ஹக்கீமின் போக்கு சமாதான முயற்சியை குழப்புவதாக இருந்த போதிலும் விடுதலைப்புலிகளின் ராஜதந்திரம் அதனை முறியடித்து விட்டது.


**JAFFNA TECHNICAL, INSTITUTE**
**JAFFNA, SRILANKA**

REGD NO: 15251 T.P: 3335

## தொழிற் பயிற்சிகள்

◆ RADIO, T.V . AND VIDEO DECK REPAIRING

சகல இன றேடியோ, ரீ.வி, வீடியோ டெக் மற்றும் எலக்ரோனிக் உபகரணங்கள், **Computer Monitor, Printer ,UPS** என்பன திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சி அளிக்கப்படும். (காலம் 10 மாதங்கள்)

◆ MOTOR REWINDING AND ELECTRICAL WIRING

சகல இன மோட்டார், (f) பான் ரான்ஸ்போமர்கள் றிவைண்டிங் செய்யும் முறை மற்றும் வீட்டு மின்னிணைப்பு **Three phase** இணைப்பு முறை என்பன பயிற்சி அளிக்கப்படும். (காலம் 7 மாதங்கள்)

◆ MOTOR CYCLE MECHANISAM

சகல இன மோட்டார் சைக்கிள், நீரிறைக்கும் இயந்திரம் திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும். (காலம் 6 மாதங்கள்)

◆ AIR CONDITIONING AND REFRIGERATION

சகல இன குளிர்சாதனப்பெட்டி மற்றும் எயார் கொண்டிசன் திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும். (காலம் 6 மாதங்கள்)

◆ CITY AND GUILDS OF LONDON EXAM
1. POWER 2. ELECTRONICS

**புதிய பயிற்சிகள் ஆரம்பம்**

13.09.2002 (கிழமை நாட்களில்)
14.09.2002 (சனி ஞாயிறு நாட்களில்)

மேலதிக விபரங்களுக்கு நேரில்.

11/10 B, Stanley Road,
Jaffna (Near K.K.S. Road)

[C/4967]

**DIRECTOR-**
NO-07 Palaly Road
Jaffna

# தமிழ்த் திரைப்படப் பாடல்களில் தமிழுணர்வின் பிரதிபலிப்பு

இனி கவிஞர் கண்ணதாசனின் தமிழ் உணர்வுக் கவிதைகள் பற்றிப் பார்ப்போம்.

'மதுரைவீரன்' திரைப்படத்தில் அவரெழுதிய ''செந்தமிழா எழுந்து வாரோயோ? உன் சிங்காரத்தாய் மொழியைப் பாராயோ? அன்றொருநாள் அரசர் மூவர் மடியிலே, நின்று தவழ்ந்து மகிழ்ந்த மொழியிதே, இனிமையோடு பாராயோ?'' எனத் தொடங்கும் பாடல் தமிழுணர்வின் அடித்தளத்திலானது. ''சங்கம் வளர்த்த தமிழ், தாய்ப்புலவர் காத்த தமிழ், கங்கை கொண்ட எங்கள் தமிழ் வெல்லும் வெல்லும், ஒருகாலம் வரும் நல்ல பதில் சொல்லும் சொல்லும்'' என்ற 'துலாபாரம்' படப்பாடலும் எளிமையான சொற்களினால் தமிழுணர்வை வெளிக் கொணர்வது. அவரது சொந்தப் படமான 'சிவகங்கைச் சீமை'யின் பாடல்கள் அனைத்தும் தமிழுணர்ச்சியினை மழையாகப் பொழிபவை. ''எங்கள் திராவிடப் பொன்னாடே'' எனத் தனது முதற்தயாரிப்பான 'மாலையிட்ட மங்கை'யில் அரசியல் கொள்கையை வெளிப்படுத்திய கண்ணதாசன், இந்தப் படத்தில் மருதுபாண்டியர் வரலாற்றினூடாகத் தமிழினத்தின் வீரத்தையும் அவலத்தையும் உணர்வு பூர்வமாக்கிப் பாடல்களாக வடித்தளித்தார். அப்பாடற்றொகுதியில் தற்கால ஈழத்தமிழர்களுக்கு இன்றும் பொருந்தக் கூடிய பாடலாக எஸ்.வரலட்சுமி பாடிய பாடல் அமைந்துள்ளது.

''தனிமை நேர்ந்ததோ! இதயம்
வெந்ததோ
அமைதி நாடி வந்தாயோ?
சருகு போலவே புயலில் ஆடியே
உறவு தேடி வந்தாயோ?
அன்னையின் நாடும் மன்னவர் வீடும்
அடிமையாவதே நீதியா?
ஆற்றுவாரில்லை! தேற்ற ஆளில்லை
அலைவதே எங்கள் ஜாதியா?''

மருதுபாண்டியரிடம் அடைக்கலம் தேடி வந்த வீரபாண்டிய கட்டபொம்மனின் தம்பி ஊமைத்துரைக்கு உணர்த்துவதாக அமைந்த இப்பாடல், இன்றைய உலகத் தமிழினம் முழுவதற்கும் பொருத்தமானதாகிறது. கவிஞர் இயற்றிய ''இதழிரண்டும் பாடட்டும்! இமை இரண்டும் மூடட்டும்'' (படம் ராணி சம்யுக்தா) என்ற பாடலில் வரும்

''வாளோடு போர்க்களத்தில் அவராடுவார்
- கை
வளையோடு அவர் மார்பில் நானாடுவேன்
எங்கள்
தோளோடு கிளிபோல நீ ஆடுவாய்''

என்னும் வரிகள் பழந்தமிழர் வீரத்தையும், காதலையும் குழந்தை இன்பத்தையும் புலப்படுத்துகின்றன. கண்ணதாசனின் தமிழ்ப் பற்றினை எடுத்துக் காட்டும் ஏராளமான திரைப்பாடல்களை நாம் இனங்காணமுடியும். அதேபோன்று மருதகாசி, கே.டி.சந்தானம், உடுமூந் தூர்ப்பேட்டை சண்முகம் போன்றவர்களின் பாடல்களிலும் தமிழ் மணம் வீசுவதை அறிய முடியும். பல இதிகாச புராண வரலாற்றுப் படங்களில் தமிழுணர்ச்சியானது வெளிப்படையாகவும், மறைமுகமாகவும் பாடல்களின் மூலம் புகுத்தப்பட்டுள்ளது. திரைப்படங்கள் பலவற்றில் இடம் பெற்ற நாட்டியப் பாடல்களிலும் தமிழுணர்வு ஓங்கி நின்றதை நாம் அவதானிக்க முடிகிறது. தூய கர்நாடக இசையிலோ அல்லது மெல்லிசை வடிவிலோ அபபாடலகள் வெளிவந்து நெஞ்சை நிறைவித்துள்ளன. 1970 களுக்குப் பிந்திய தமிழ்த்திரையுலகின் செல்நெறியானது நவீன தொழினுட்பங்களுக்குக் கொடுத்த முக்கியத்துவத்தை, பண்பாட்டுப் பாரம் பரியங்களுக்குக் கொடுக்கத் தவறியுள்ளது. இதனால் தமிழுணர்வின் வெளிப்பாடுகள் குறையவும், திரையிசைப் பாடல்களின் தரமும், தகுதியும் வணிக நோக்கிலும் பாமர ரஞ்சகத்திலும் தங்கியிருக்கவும் நேர்ந்தள்ளமை துரதிர்ஷ்டமாகும். எவையெவை எமக்கு ஆபத்தானவை என்பதை நகைச்சுவை கலந்து, உடுமலை நாராயணகவி இட்டுக்கட்டி ''டேஞ்சரு'' என்ற ஆங்கிலச் சொற்பிரயோகத்தினூடாக வெளிப்படுத்திய பாடலினை இச் சந்தர்ப்பத்தில் நினைவு கூருவது தமிழ்த் திரையுலகின் போக்கினை உணர்ந்து கொள்ளப் போதுமானதெனலாம். சமகால சமூகத்திற்கும் இப்பாடல் போதனையென்றும் கூறலாம்.

''டேஞ்சரு அய்யா டேஞ்சரு வெரி வெரி
டேஞ்சரு அய்யா டேஞ்சரு
நடிப்பது மெத்த டேஞ்சரு
இருப்பவரும் இல்லாதவரை அவ
மதிப்பது இனிமேல் டேஞ்சரு
(டேஞ்சரு )

காட்டையும் மேட்டையும் உழுவாமல்
பேனா
கஞ்சிக்கே வரும் டேஞ்சரு
கட்டுப் பாட்டுக்குள் அடங்காதவர்கள்
கட்சியில் இருப்பது டேஞ்சரு
ஓட்டுப் போடத் தெரியா விட்டால்
நாட்டுக் கதனால் டேஞ்சரு
உலகம் போற்றும் உத்தமரானால்
உயிருக்கே ரொம்ப டேஞ்சரு

ஓய்ஞ்சுபோன காலத்திலே உட்கார்ந்து
சாப்பிடவே
உழைப்பாலே தேடிய பணத்தை
ஊதாரிச் செலவுகள் செய்தால் டேஞ்சரு
(டேஞ்சரு)

பட்டம் பதவிக்கே ஆசைப்பட்டால்
துட்டுக்கே வரும் டேஞ்சரு
பக்க மேளம் சரியில்லாட்டிப்
பாடகனுக்கே டேஞ்சரு
முட்டாப் பசங்களை யோசனை கேட்டா
மூளைக்கு ரொம்ப டேஞ்சரு
(டேஞ்சரு )

கண்ட பெண்களைத் தெருவில் பார்த்துக்
கண்ணடிப்பது டேஞ்சரு
கரண்டுக் கம்பத்து மேலே ஏறிக்
கம்பியைத் தொடுவது டேஞ்சரு
பெண்டு பிள்ளைமேல் ஆசை
கொண்டவன்
சண்டைக்குப் போவது டேஞ்சரு
பெரியோர் சிறியோர் சென்று
பேசிப் போவது டேஞ்சரு
(டேஞ்சரு )

கல்லாதார் கலைஞரானால்
கலைக்கு ரொம்ப டேஞ்சரு
காப்பியடிக்கிற பசங்க கிட்டக்
கதையை படிப்பது டேஞ்சரு
இல்லாதவர்கள் இருப்பவர் போல
தன்னலமற்ற தியாகிகளுக்கு
சர்க்கார் பதவி டேஞ்சரு
சர்க்கார் பதவி கொண்டவனுக்கே
தாட்சண்யத்தால் டேஞ்சரு
அண்ணன் தம்பியைப்
பகைத்தவனுக்கே
அடுத்தவராலே டேஞ்சரு
அறிவில்லாதவன் எவனோ அவனுக்கு
அவனே வெரி வெரி டேஞ்சரு
(டேஞ்சரு )

பண்டிதர்.செ.திருநாவுக்கரசு

1956இல் 'மாதர்குல மாணிக்கம்' என்னும் திரைப் படத்தில் இடம் பெற்ற இப்பாடல் சமகாலச் சமூக தரிசனமாகும். தமிழுணர்வு மீதூரப் பெற்ற தமிழர்களுக்கும், தமிழ்த் திரையுலகத்திற்கும் இன்றும் பொருந்துவதாகும். தமிழ்த் திரைப் படங்களில் இடம் பெற்ற பாடல்கள் இவ்வாறு தமிழின் சிறப்புக்களையும் தமிழர் தம் வாழ்வியற் கூறுகளையும் வெளிக்காட்டின. பெரிய சாகரசங்கமத்துள் இக்கட்டுரையில் காணக் கிடைத்தவை ஒரு சில துளிகளேயாகும்.

* * *

# சிலப்பதிகாரம் எனும் ஓரே தமிழ் நாடகம்

ஷேக்ஸ்பியர் வரலாற்றிலும், மரபிலும் வழங்கிய கதைகளுக்குப் பட்டை தீட்டி பொன்மயமாக்கியதுபோல இளங்கோவும் சங்ககாலத்துப் பாடல்களின்றும் ஒரு சில நிகழ்ச்சிகளை எடுத்து அற்புதமான நாடகம் ஒன்றை நமக்குத் தந்திருக்கிறார்.

பேகன் என்ற சங்ககாலத்து குறுநில மன்னன் ஒருவன் தன் மனைவி கண்ணகியை விட்டுப் பிரிந்திருந்ததைக் கண்டித்து கபிலர், பெருங்குன்றூர்க்கிழார், அரிசில்கிழார் ஆகியோர் பாடியிருக்கிறார்கள். வேங்கை மரத்தடியில் வேதனையியுடன் நிற்கும் பெண் ஒருத்தியின் குறிப்பும் சங்க இலக்கியத்தில் காணப்படுகின்றது. இவற்றின் அடிப்படையில் எழுந்ததுதான் 'சிலப்பதிகாரம்' என்ற நாடகம்.

## இளங்கோ சொல்ல விரும்புவது என்ன?

சிலப்பதிகாரத்தில் இளங்கோ என்ன சொல்ல விரும்புகிறார்? பதிகத்தில் வரும் மூன்று உண்மைகளையா? அம்மூன்று உண்மைகளில் மிகவும் முக்கியமானது 'ஊழ்வினை உருத்து வந்தூட்டும்' என்பதாகும். அதாவது விதியை வெல்வது என்பது அரியகாரியம்.

துன்பவியல் நாடகங்கள், விதியையோ, கடவுளையோ மனிதன் எதிர்த்துப் போராட முயன்று தோல்வியடைவதைத் தான் குறிப்பிடுகின்றன என்று கூறுவார்கள். மனிதனால் போராட முடியுமென்பதே மானிடத்திற்கு வெற்றி என்றளவில், துன்பவியல் நாடகம் இப்போராட்டத்தைத்தான் - வெற்றி தோல்வியென்பன முக்கியமல்ல - சித்தரிக்க வேண்டுமென்பது டோப்பிறி, கான்றோர் என்போர்களின் கருத்து.

நல்லது கெட்டது என்பவற்றில் எதைத் தேர்ந்தெடுப்பது என்ற சுதந்திரம் மனிதனுக்கு இருக்கிறது. 'விதி' தவிர்க்க முடியாதது என்ற நிலையில், துன்பவியல் நாடகத்தின் கதா நாயகன் கெட்டதைத் தேர்ந்தெடுத்து, வீழ்ச்சியடைகிறான். இறுதி வெற்றி 'விதி'க்கு. விதிக்குப் பதிலாகக் கடவுள் என்று கொண்டால், துன்பவியல் நாடகம் மனித ஆற்றலின் வரையறையையும், மூலப் பொருளின் எல்லையற்ற தன்மையையும் சுட்டிக் காட்டுமென்று கொள்ளலாம்.

கோவலனின் வீழ்ச்சிக்குக் காரணம் என்ன? அவன் கண்ணகியை விட்டு நீங்கியது தவிர்க்க முடியாதது. வழியில் சந்தித்த மறையவன் 'மதுரைக்கு இடப்பக்கமாக செல்லலாம் போகும் வழியில் உனக்கு நேரே இருப்பதை உணர வாய்ப்புண்டு' என்று கூறியதைப் புறக்கணித்துக் கௌந்தியடிகளின் யோசனைப்படி நடு வழியைத் தேர்ந்தெடுத்தது தவிர்க்க முடியாதது. ஆகவே சிலப்பதிகாரத்தில் வரும் நிகழ்ச்சிகள் அனைத்தும் கோவலனை அவன் அழிவுக்கு அழைத்துச் செல்வன என்றளவில் தான் அர்த்தமுடையனவா? அல்லது அர்த்தமற்றவையா? கோவலனின் மரணம் என்ற உண்மைக்கு முன்னால் கண்ணகியின் கற்பு, மாதவியின் கலையாற்றல், பூம்புகார், மதுரை மாநகர் ஆகிய நகரங்களின் செல்வவளம் எவைக்குத் தான் அர்த்தமிருக்கின்றன. ஓர் உண்மையை நிலை நிறுத்திக் காட்டுவதற்கு இதனை தோற்ற மாயைகளையா? இளங்கோ சிருஷ்டித்து காட்டியிருக்க வேண்டும். இவை மிகவும் சுவாரஸ்யமான கேள்விகள்.

## விதியின் விளையாட்டு

சிலப்பதிகாரத்தில் கதாநாயகன் மட்டும் இறக்கவில்லை. தவறு செய்த அரசன் மரணம் எய்துகிறான். அவன் மனைவி அவனைத் தொடர்கின்றாள். இறுதியில் ஊர் எரிவாய்ப்பட்டு அழிகின்றது. அவரவர் கொண்டிருந்த லட்சியங்களும், கனவுகளும் சிதைந்து, அழிவு என்றோர் உண்மை அரியாசனம் ஏறுகின்றது. கணவனே கடவுளாகக் கொண்ட கண்ணகியின் கற்பு தவறுடையதா? கண்ணகிக்கு விதிக்கப்பட்டிருந்த ஒழுக்கத்தை மீறிக் கோவலனை வழிபட்ட மாதவியின் குற்றம் என்று

## இலக்கிய நயம்

சொல்ல முடியுமா? வணிக தர்மத்தில் சலிப்படைந்து, கலை ஆர்வம் கொண்டது கோவலனின் தவறா? பொற்கொல்லனையும் இளங்கோ வில்லனாகச் சித்திரிக்கவில்லை. 'கூற்றத்தூதுவனாகத்தான்' காட்டியிருக்கிறார். விதி விளையாடிய காரணத்தினால் தான் பாண்டிய மன்னனின் நாக்கும் தடுமாறியது.

மரபு வழி துன்பவியல் நாடகங்கள் மூலப் பொருளின் எல்லையற்ற தன்மையைச் சுட்டிக் காட்டும் வழியில் மனிதனின் பலவீனத்தை எடுத்துக் கூறுகின்றன. ஆனால் மூலப்பொருளின் எல்லையற்ற தன்மையை நையாண்டி செய்யும் நாடகங்களையும் இக்காலத்தவர்கள் **Grotesque**' என்று சொல்லுகிறார்கள். 'கிங் லியர்' இவ்வகையைச் சார்ந்த நாடகம். ஓர் உண்மையை நிலை நிறுத்திக் காட்ட எல்லோரும் இறக்க வேண்டுமென்றால், அந்த உண்மையை நிலை நிறுத்திக் காட்ட வேண்டிய அவசியம் தான் என்ன? கடவுளையோ, விதியையோ அல்லது எல்லையற்ற தாய் நாம் நினைக்கின்றோமா அதைப் பரிகசிப்பது போல் இருக்கிறது. கண்ணகியின் கற்பை நாம் புரிந்கொள்வதற்காக ஓர் ஊர் எரிய வேண்டியது அவசியம்தானா? சிலப்பதிகாரத்தின் தொனி பொருள் இதுதான் என்று தோன்றுகின்றது.

## வாழ்க்கையின் அர்த்தம்

வாழ்க்கையின் அர்த்தமற்ற தன்மையே அதன் அர்த்தம். அர்த்தமில்லாத வாழ்க்கைக்கு அர்த்தம் கற்பித்துக் கொள்ள வேண்டியதுதான் மனிதனின் முயற்சி.

புகார் காண்டம், மதுரைக் காண்டம் மூலம் இவ்வெறுமையை வற்புறுத்திய இளங்கோ வஞ்சிக் காண்டத்தின் வழியாக இதற்கு ஓர் அர்த்தம் காணமுடியுமா என்று முயல்கிறார். செங்குட்டுவனின் வடநாட்டுப் படையெடுப்பும், அவன் கண்ணகிக்கு கோயில் எடுத்ததும் இம்முயற்சியின் பலன்கள்.

மனிதனின் முயற்சியை சிறப்பித்துக் கூறும் வஞ்சிக் காண்டத்தில் விதியைப் பற்றி பேச்சே இல்லை. கனகவிசயர் விதியின் காரணமாக தோற்றார்கள் என்றோ, அல்லது செங்குட்டுவன் கண்ணகிக்குக் கோவில் எடுக்க வடநாடு சென்றது ஊழ்வினையின் காரணமாகவென்றோ கூறப்படவேயில்லை. மனிதன் தன் ஆற்றலின் எல்லையை உணரத் தொடங்குகின்ற போது, அவன் வலிமைக்கு அப்பாற்பட்டதாகக் கருதப்படும் ஒரு சக்தியைப் பற்றிப் பேச வேண்டிய நிர்ப்பந்தம் இல்லை.

இவ்வாறு பார்க்கும் போது பிரஷ்ட் கூறுவது போல் புகார் காண்டம், மதுரைக் காண்டம், வஞ்சிக் காண்டம் என்று ஒரு நாடகத்துக்குத் தேவையான மூன்று அம்சங்களும் சிலப்பதிகாரத்தில் இருப்பதை நாம் காண்கின்றோம்.

நன்றி: கணையாழி

# தாமதம்



அய்யா அதிகாரியே
ஏன் தாமதம் என்று
எழுதிக் கேட்பவரே

இந்தத் தாள் போதாது
எண்பது பக்க நோட்டு
இருக்கிறதா உம்மிடம்?

பேருந்துப் பட்டையில்
தூக்கிட்டுத் தொங்கியதில்
வலக்கைக்கு வலுவில்லை
சொல்கிறேன் எழுதும்

ஒன்று
கூந்தல் முடிந்து
குளிக்கப் போனேனா
தண்ணீர் தாமதம்

இரண்டு
தண்ணீரோடு
சம்பந்தப்பட்டதால்
பாலும் தாமதம்

மூன்று
எங்கள் வீட்டு எரிவாயு
மூன்று நாளாய்
மூர்ச்சையானதால்
சமையல் தாமதம்

நான்கு
தேர்தலை நம்பும்
வாக்காளர் மாதிரி
என் மார்பை நம்பும் மகனுக்கு
எப்போதோ சுரக்கும்
தாய்ப்பால் தாமதம்

ஐந்து
தாய்ப்பால் எப்படித்
தாமதம் என்பீரா?
இந்தப் பேரிளம் பெண்ணுக்குத்
தாய்மையே தாமதம்

ஆறு
தாய்மை ஏன் தாமதம் என
வினாவுதிராயின்
என்
கன்னிமை உடைக்க நான்
உண்டியல் உடைத்ததால்
கல்யாணம் தாமதம்

ஏழு
உள்ளாடைக் கொக்கி
ஒழுங்காய்ப் போடாமல்
ஓடோடி வந்தேனா
பேருந்து தாமதம்

எட்டு
பேருந்து என்னும்
நகர நரகத்துள்
என் கால்கள் மீது
எவரெவரோ நடந்ததனால்
நான்
சேமித்த செருப்பு
அறுந்து போனதா
தைக்கத் தாமதம்

என்ன பார்க்கிறீர்?

இந்தியாவுக்குச்
சுதந்திரம் தாமதம்

இந்தியாவுக்குச்
சுபிட்சம் தாமதம்

போன நூற்றாண்டே
இன்னும் தாமதம்


என்னது?

எண்பது பக்கமும்
தீர்ந்து போனதா?

இன்னொரு நோட்டுக்கு
இன்னுமா தாமதம்?

# மன உறுத்தலும், சமாதானத்தேவையும் கட்சிகளின் வரம்புகளை உடைக்கின்றன

மனித குலம் உயிர்வாழும் வரைக்கும் உலகில் நிச்சயமான இரண்டு உண்மைகள் மரணமும் மனச்சாட்சியுமாகும். மரணத்திலிருந்து தப்பவும் முடியாது, மனச்சாட்சி அழிந்து விடுவதும் கிடையாது. மக்களால் தெரிவு செய்யப்பட்ட எம்.பி.க்கள் மத்தியில் அவர்கள் எக்கட்சியைச் சார்ந்தவர்களாயினும் மக்கள் தேவைகளை கட்சி வரம்புகளுக்கு அப்பாற்பட்டு நின்று பார்க்கும் மனோபாவம் தாராளமாக இருக்கவே செய்கிறது. அதாவது, மனச்சான்று அவர்களை நெறிப்படுத்தி வழி நடத்திக் கொண்டேயிருக்கிறது. ஆனால் அவர்கள் தத்தமது கட்சிகளின் மேலிடம் எடுக்கும் தீர்மானங்களுக்கு ஆமாம்சாமி போட்டு தத்தமது பதவிகளையும் அந்தஸ்துகளையும் காப்பாற்றிக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்த நிலையும் இது வரை காலமும் இருந்து வந்துள்ளது.



வெறுமனே கட்சிச் சண்டை, குரோதங்கள், பதவிஆசை போன்ற அற்ப விடயங்களுக்குக் கட்சி மாறும் சம்பவங்கள் அசிங்கமானவை. ஆனால் இவைகள் வரலாற்றில் இடம் பெற்றவையுமாகும்.

### கட்சி மாறியவர்கள்

தேசியப் பிரச்சினைகளை முன்வைத்து எம்.பி.க்கள் தாம் சார்ந்திருந்த கட்சிகளை விட்டு வெளியேறி புதிதாக கட்சிகளை அமைத்திருக்கின்றனர். அற்ப காரணங்களுக்காக அநேகர் கட்சிகளுடனான தமது விசுவாசத்தை மாற்றி அரசாங்கங்களையே கவிழ்த்திருக்கின்றனர். கட்சிமாறிய எம்.பி.க்களால் உருவாக்கப்பட்ட சில கட்சிகள் பாரிய வளர்ச்சி கண்டுள்ளன. ஐ.தே. க. விலிருந்து பிரிந்த எஸ். டபிள்யூ. ஆர். டீ. ப்ண்டாரநாயக்க, டீ. எம். ராஜபக்ஸ தலைமையில் உருவான ஸ்ரீ.ல.சு. கட்சி ஆளும் கட்சியாக வந்தது. தமிழ் காங்கிரசிலிருந்து பிரிந்து உருவாகிய தமிழரசுக்கட்சி தமிழ் மக்களின் ஏக தலைமையாக, விருட்சமாக வளர்ந்தது. சுதந்திரக் கட்சி அரசில் காணி, நீர்ப்பாசன அமைச்சராக விருந்த சீ.பீ.டீ.சில்வா தலைமையில் கட்சி மாறி ஐ.தே.க. வில் இணைந்தவர்களின் ஸ்ரீ.ல.சு. சோசலிசக் கட்சி, ஐ.தே.க.வில் கரைந்து அழிந்தது. ஆயினும், 1965இல் டட்லி சேனநாயக்க தலைமையில் அரசு அமைப்பதில் இது பெரும் பங்காற்றியது.

தீவிரக் கொள்கை விசுவாசியான ட்ரொட்ஸ்கிசவாதி காலஞ்சென்ற எட்மன்ட் சமரக்கொடி தலைமையில் சமாசக் கட்சியிலிருந்து 1964 இல் நான்கு எம்.பி.க்கள் வெளியேறி புரட்சி வாத சமசமாஜ கட்சியை நிறுவினர். பிரபல தொழிற்சங்க வாதி பாலா தம்புவும் அதனுள்ளிருந்தார். ஆனால் ஏனோ அக்கட்சி தேய்ந்து அழிந்துவிட்டது. புதிய கட்சியை அமைத்த தலைவரே புளத் சிங்கள தொகுதியில் 283 வாக்குகளை மட்டுமே பெற்றிருந்தார். சுயாட்சிக் கழகத்தை அமைத்த ஜீ. நவரத்தினத்தின் கதையும் இவ்வாறே முடிந்தது. கடந்த ஆண்டில் பொ.ஐ.மு அரசிலிருந்து அமைச்சர்கள் ஜீ. எல். பீரிஸ், எஸ். பீ. திசாநாயக்க ஆகியோருடன் 13 பேர்கள் வரையில் கட்சி மாறினர். இப்போதும் புதிய அரசில் அமைச்சர்களாயுள்ளனர். இவ்வாறாக, இலங்கை பாராளுமன்ற வரலாற்றில் எம்.பி.க்கள் கட்சிமாறி அரசாங்கங்களை வீழ்த்தியதும், புதிய அரசாங்கங்களை அமைத்ததும் வரலாறு.

### சட்டத்திருத்தம்

இத்தகைய கட்சிமாறல்களால் அவ்வப்போது நன்மைகளும், தீமைகளும் விளைந்திருக்கின்றன. ஆனால் ஜே.ஆர். ஜெயவர்த்தனா தலைமையில் அமைந்த கடந்தகால அரசாங்கம் ஒரு எம்.பி.



கட்சி மாறும் போது அவரது பதவியும் அத்துடன் இழக்கப்படக்கூடியதான சட்டங்களை ஆக்கியது. இதனால் ஏற்பட்ட நிலையானது, தேசியப் பிரச்சினைகள் விடயத்தில் கட்சி பேதம் மறந்து எம்.பி.க்கள் மனச்சாட்சிப்படி வாக்களிப்பதை தடுக்கும் சக்தியாக குறுக்கே நிற்கின்றது. இத்தடையை நீக்குதல் இக் கட்டத்தில் அவசியமாகும். சமாதானப் பாதையில் தொடர்ந்து முன்னேறுவதற்கு இது இன்றியமையாத ஒரு படிக்கல்லாகவும் இருக்கிறது. இதனை உத்தேசித்தே மனச்சாட்சிப்படி வாக்களிக்கும் சட்டத்திருத்தத்தையும் ஜனாதிபதி பாராளுமன்றத்தை கலைக்கும் அதிகாரத்தினை குறைக்கும் சட்டத்திருத்தத்தையும்



ஐ.தே.க. அரசாங்கம செப்.11ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்ற முனைந்து நிற்கிறது.

### சட்டவலுவற்ற கூற்று


நான் மூன்று ஆண்டுகளுக்கு பாராளுமன்றத்தைக் கலைக்க மாட்டேன், என்று ஜனாதிபதி உறுதி மொழி கூறியிருப்பினும் அது சட்டவலுவுள்ள கூற்று அல்ல. புதிய பாராளுமன்றத்தின் ஒரு ஆண்டு ஆயுள் முடியும் தினமான டிசம்பர் 5ஆம் திகதியின் பின்னர் ஜனாதிபதி விரும்பும் பொழுதில் பாராளுமன்றம் கலைக்கப்படுவதை இந்த உறுதி மொழி தடுக்கப் போவதில்லை. கொடுத்த வாக்குறுதிகளை அப படியே காற்றில் பறக்க விட்டு விடும் போக்கில் ஜனாதிபதி முன்னர் நடந்து கொண்டதாக அவரது கட்சியினரே கூறியுள்ளனர். இதனாலேயே கடந்த செவ்வாயன்று இரவு ஐ.தே.மு தலைவர்கள் ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரத்தை கட்டுப்படுத்துவதென்ற இறுதி முடிவை எடுத்துள்ளனர். திருத்தத்தின்படி ஜனாதிபதியின் கட்சி தவிர்ந்த வேறு ஒரு கட்சி பாராளுமன்ற ஆட்சியிலிருக்குமிடத்து அப்பாராளுமன்றத்தை ஜனாதிபதி தன்னிச்சையாகக் கலைக்க முடியாது. கலைப்பதற்குரிய தீர்மானத்தை அதே பாராளுமன்றம் நிறைவேற்ற வேண்டியிருக்கும். ஏனென்றால் ஜனாதிபதி சார்ந்திருக்கும் கட்சிப் பாராளுமன்றில் ஆட்சி நடத்தும் பட்சத்தில், அவர் விரும்பும் பட்சத்தில் அவ்வாட்சியை அவர் கலைக்கலாம். ஆனால் வேறு ஒரு கட்சி ஆட்சியிலிருந்தால் ஒரு அற்ப காரணத்தைக்காட்டி அரசியல் இலாபத்திற்காகப் பாராளுமன்றத்தை ஜனாதிபதி கலைக்க முடியும். உதாரணமாக சமாதான முயற்சிகள் முன்னேற்றம் கண்டு ஐ.தே.மு. வின் ஆட்சி மேலும் வரவேற்பை பெறும் ஒரு கட்டம் வந்தால் ஜனாதிபதி பாராளுமன்றத்தை கலைப்பதற்கு தீர்மானிக்கலாம். அதனால் சமாதான முயற்சிகளும் முறிவடைந்து போகலாம்.

### சட்டவடிவம்

கொண்டுவரப்படவுள்ள 18 ஆவது திருத்தமானது ஜனாதிபதியின் சிந்தனைக்கு முரணானது அல்ல. அவரேதான் பாராளுமன்றத்தை இன்றைய நிலையில் கலைப்பது முறையல்ல என்று உணர்ந்து வெளிப்படுத்தியுள்ளார். உண்மையில் கொண்டு வரப்படவிருக்கும் திருத்தச் சட்ட மூலம் ஜனாதிபதியின் விருப்பத்திற்கு சட்ட வடிவம் கொடுப்பதாகவே இருக்கிறது.

உண்மையில் ஜனாதிபதி விரும்பாத விடயம் துண்டு துண்டாக தனது அதிகாரங்களைக் குறைப்பதற்கு எடுக்கும் முயற்சியாகும். அது தீங்கானது என்று கருத இடமுண்டு. இன்று ஒரு அரசாங்கம் இன்றைய சூழ் நிலைக்கேற்ப ஒரு திருத்தச் சட்ட மூலத்தை நிறைவேற்றுவது போல, எதிர்காலத்தில் பதவிக்கு வரக்கூடிய இன்னுமொரு அரசாங்கம் இதனையே மறுவளமாக மாற்றிக் கொள்ள முடியாதா? அடிப்படையில் நிறைவேற்று அதிகாரங்கள் கொண்ட ஜனாதிபதி முறையை இல்லாமற் செய்வது மட்டுமே கட்சிகள் பலவும் ஒப்புக் கொண்டுள்ள விடயமாகும்.

இச்சட்டத்திருத்தம் எதிர்க் கட்சியினரை உலுப்பி வருகிறது. சட்ட மூலத்தை ஆதரிப்போரின் கை பொ. ஐ. முன்னணிக்குள் ஓங்கி வருவது தெரிகிறது. எதிர்க் கட்சித் தலைவர் மகிந்தராஜபக்ஸ இது தொடர்பாக நல்ல தொரு முடிவை எடுக்க வேண்டும் என்று கட்சியின் தலைமைப் பீடத்தை நெருக்கி வருகிறார். அரசாங்கத்தின் கொள்கையை ஆதரித்து நடக்கும் எதிர்க்கட்சியாக மாற வேண்டும். அல்லது கட்சியில் ஒரு பகுதியை அரசுடன் இணைப்பதற்கு அனுமதிக்க வேண்டும் என்ற சங்கட நிலைக்குள் எதிர்க்கட்சி தள்ளப்பட்டுள்ளது. இந்த இரண்டும் கெட்டான் நிலையில் எதிர்க்



கட்சியை சிந்திக்க வைத்திருக்கும் மக்களின் சமாதானத்தின் மீதான அழுங்குப்பிடி வெற்றிக்கு வழிவகுக்கக் கூடியது.


### மனச்சாட்சி

மனச்சாட்சி இன்றைய பாராளுமன்றத்தின் எம்.பி.க்களிடம் நன்கு மிளிர்வது தெரிகிறது. இதற்கு சமசமாஜக் கட்சியின் காலி மாவட்ட எம். பி. சமித்த தேரர் வெளியிடும் கருத்துக்கள் போதிய சான்றாக உள்ளன. அவர்தான் சார்ந்த கட்சியின் கொள்கைகளுடன் இறுக்கத்துடனும், கண்டிப்புடனும், கட்டுக் கோப்புடனும் நின்று செயற்படுகிறார்.

அதேவேளை சமாதான நடவடிக்கைகள் மிக நன்றாக முன்னேறி வருவதையும் மனங்கோணாமல் பாராட்டுகிறார். இவ் விடயத்தில் அரசாங்கத்திற்கு முழுமையான ஒத்துழைப்பையும், வழங்க வேண்டுமென்று ஏனைய கட்சிகளையும் தூண்டுகிறார். இந்தத்தெளிவான சிந்தனை, மனச்சாட்சிப் படி வாக்களிக்கும் தேவையை சுட்டிக் காட்டும் சிறந்த குறிகாட்டியும், சமாதான நடவடிக்கைகளை வலுப்படுத்தும சிந்தனைப் போக்குமாகும். இச் சிந்தனைக்கு சட்டப்படியான செல்லுபடியாகும தன்மையொன்றை 18ஆவது திருத்தச் சட்ட மூலமே வழங்கும். தேசியப் பிரச்சினைகளை கட்சி வரம்புகளுக்கு அப்பாற்பட்டு நின்று செயற்படுத்தும் நடை முறை உருவாக வாய்ப்பளிக்கும். மனச்சாட்சிப்படி வாக்களிக்க விடாது எம்.பி.க்களை தடுக்கும் ஒரு நிலை அழிக்க முடியாத மனச்சாட்சியை அழிப்பதற்கு எடுக்கும் நாயின் வாலை நிமிர்த்தும் முயற்சியாகவே முடியும்.

**சர்வன்**

# மனையடி சாஸ்திரம்



### பழைய மனையைப் பெயர்த்து வேறு மனை கட்டுவதனால் உண்டாகும் பலன்

ஒரு மனையோ அல்லது அந்த மனையில் கட்டிய கட்டடமோ, வீடோ அழியுமானால், அதைப் புதுப்பிப்பது வழக்கம். அவ்வாறு புதுப்பிக்கும் போது அந்த மனையிலுள்ள பொருள்களை வேறு இடத்திற்குக் கொண்டு போகாமல் அந்த இடத்திலேயே, மீண்டும் புனர்நிர்மாணம் செய்வதற்குரிய நல்ல முகூர்த்தம் பார்த்துக் கட்டினால் குற்றங்கள் இல்லை.

அதை விட்டு பழைய மனையைப் பிரித்து வேறு இடத்திற்கு அந்த மனைப் பொருள்களைக் கொண்டு சென்று புதிய மனையாகக் கட்டினால், அதுவும் கிழத்தன்மை பெறுமேயல்லாது வாலிபத்தையடையாது. வேறு இடத்திற்குக் கொண்டு போய்க் கட்டினால், பொருள்கள் விரயமும் வீண் இழப்புகளுமே உண்டாகும்.

### மனைக்கட்டுக்குரிய விஸ்தாரம்

ஆலயங்களுக்கு மனைகள் கட்ட வேண்டிய பரப்பளவுகளில் தேவாலய சிவாலயங்களுக்கு 100 அடிகள் விஸ்தாரத்துக்கும், தெருக்கள் கிணறுகட்கு 30 அடி விஸ்தாரமும் அரண்மனை மடங்களுக்கு 15 அடிகள் விஸ்தாரமும், மண்டபங்கள் யக்ஞசாலைகள் சத்திரங்களுக்கு 10 அடிகள் விஸ்தாரமுமாக மனைகளைக் கட்ட வேண்டும்.

### வாசற்படிக்கு முகடு வைப்பதன் பயன்

மனைகளின் வாசற்படிக்கு அழகு செய்வதற்காக முகடுகளைக் கட்டி மனைகளைக் கட்டும்போது அந்த முகட்டின் நிழல், தலை மீதுபடுமானால், அந்த மனையின் பொருள் நாசமும், மனையில் வாழ்வோருக்கு நோய்த் தொல்லைகளும் தோன்றக் கூடும். முகட்டின் நிழலில் பிரவேசிப்பதனால் மனையில் சோம்பலும் மனையாள் விரோதமும் பாம்பினால் அச்சமும் உண்டாகும்.

### சாஸ்திரத்தைப் பாராமல் ஆத்திரத்தால் மனைகள் வாங்கலாகாது

வீடு கட்ட வேண்டுமானால், மனையடி சாஸ்திர நூலின் பிரமாணங்களைத் தெரியாமல் ஆத்திரத்தால் அவசரப்பட்டு மனை வாங்கி வீடு கட்டினால் துன்பப் படத்தான் நேரும். இதனால் குலமும் கோத்திரமும் கெடும். குடியும் தழைக்காது.

வீடு கட்டுவதற்கு, முக்கியமாக வாஸ்து தேவதை லக்ஷணங்களை, மனையடி நூலில் சொல்லியுள்ளவைகளை நன்றாகக் கவனித்து, வாஸ்து தேவனின் பார்வை பார்த்து, எந்த மாதத்தில் எந்த வாசல் வைக்க வேண்டுமோ, அந்தந்த மாதத்தில், அந்தந்த வாசல் வைத்து வீடுகட்டினால் தான் நற்பயன்கள் உண்டாகும்.

வீடு கட்டுவதற்கான மனையானது கிழக்கிலும் மேற்கிலும் நீண்டும் வடக்கிலும் தெற்கிலும் குறுகலாகவும் இருந்தால், அந்த பூமியில் வீடு கட்டினால் நற் பயன்கள் உண்டாகும்.

இத்தகைய முறைப்படி வீடு கட்டும் பூமிகிடைக்க வேண்டுமாயின், நகரங்களிலும் பேரூர்களிலும் கிடைப்பது அரிது. கிராமங்களில் மட்டுமே இத்தகைய மனைகள் கிடைக்கும்.

### கிணறெடுக்கும் திசைகளின் நன்மைகள் தீமைகள்

வீட்டுமனையில் கிணறுக்காக இடம் தேர்ந்து எடுப்பதும் விடுவதும் நூலின் விதிப்படி, அஸ்டதிசைகளிலும், மனையின் நடுவிலும் விடுவதற்குப் பொருந்தாது.

மனையில், கிணற்றுக்காக இடம் விடுவது கிழக்கில் விட்டால் செல்வங்கள் மிகுந்து வாழ்வார்கள். அக்கினி மூலையில் விட்டால், கருக்கள் நாசமாகும். தெற்கில், கிணற்றுக்கு இடம் விட்டால் உயிர்கட்கு தேசமுண்டாகும். நிருதி மூலையில் கிணற்றுக்காக இடம் விட்டால், உடைமையாளர்கள் நோயினால் துன்பமடைவார்கள். மேற்கில், கிணற்றுக்கு இடம் விட்டால் நற்பயன்கள் உண்டாகும். வடமேற்குத் திசையில் விட்டால், புத்திரர்களுக்குத் தோஷமுண்டாகும். வடக்கிலும் ஈசானிய திக்கிலும் கிணறு எடுத்தால் ராஜயோகம் பெற்று வாழ்வார்கள். மனையின் மத்தியில் கிணறு எடுத்தால், பொருள் நாசமும் தேசமும் உண்டாகும்.

### கிணறு எடுக்கும் சாஸ்திர முறைகள் (Water Devining)

வீடு கட்டும் மனையானது, சமபூமியாக இருந்தாலும், மலைப்பாங்காக இருந்தாலும், அங்கு கிணறு எடுப்பதற்குரிய பொது இலட்சணங்களும், முறைகளும் பின்வருமாறு: தண்ணீர், தரையில் எந்தப் பகுதியில் இருக்கிறது என்பதைக் கண்டு பிடிப்பது மிகவும் கடினம். அதைக் கண்டு பிடிக்கும் மரபு இங்கு கூறப்படுகிறது:

**தொகுப்பு**
**ஆசிரியர் குழு**

எந்த இடத்தில் கிணறு விடவேண்டுமோ அந்த இடத்தில் பசுவின் பெண் கன்றினைக் கொண்டு சென்று, அந்தக் கன்றினைக் குளிப்பாட்டி, மஞ்சள் அரைத்தது, சந்தனம் முதலியவைகளைச் சாற்றி, புஷ்ப மாலைகள் அணிவித்து, கன்றின் முன்பு பூஜை செய்து, படைப்பிற்குரியவைகளைப் படைத்து, தூப தீபங்காட்டித் தேங்காயுடைத்து, கன்றின் கழுத்தில் நீண்ட கயிறு ஒன்றைக் கட்டி கயிற்றைக் கையில் பற்றி நின்றால், அந்தக் கன்றானது எந்த இடத்திற்குச் செல்கிறதோ அது செல்லும் இடம் வரை கயிற்றை விட்டுப் பார்க்க வேண்டும்.

(தொடரும்...)

## வியாசரே! நீங்கள் மகாபாரதத்தினைஎழுதினீர்களாமே! எனது காதல் காவியத்தையும் நான் சொல்லச் சொல்ல எழுதித்தருவீரா?

*ரஞ்சனா கந்தரோடை*
✵ வியா அங்கிள்!மனித வாழ்வில் பசுமையான பருவம் எது?
◉ **துன்பத்தை உணரமுடியாத குழந்தைப் பருவம்.**

*றியானா யாழ்ப்பாணம்*
✵ இறைவனால் மட்டுமே நிறைவேற்ற முடிந்த முக்கிய விடயங்கள் சில நிறைவேற்றப்படாமலேயே உள்ளனவே?
◉ **மரணத்தின் பின் உயிர்ப்பைக் கேட்கிறீர்கள் போலிக்கிறது.**

*க.கிருஷ்ணன் வியாபாரிமூலை*
✵ வியாசரே!நீங்கள் மகாபாரதத்தினைஎழுதினீர்களாமே! எனது காதல் காவியத்தையும் நான் சொல்லச் சொல்ல எழுதித்தருவீரா?




◉ **தம்பி கிருஷ்ணா, பாரதப் போருக்கே காரணமாக இருந்த கிருஷ்ணன் கலியுகத்தில் காதல் காவியமா படைக்கப் போகிறான் ஆகட்டும்.**

*வேணு நாரந்தனை*
✵ வியா அங்கிள்! சோகத்திலும் சுகம் உண்டு என்கிறார்களே பிளீஸ் சொல்லுங்கள்?
◉ **நிஜமான சோகத்தில் சுகம் இருக்க முடியாது கற்பனையில் உதிக்கும் சோகங்கள் சுகமானவை தான்.**

*பார்த்திபன் மிருசுவில்*
✵ வியாசர்சார்! நன்றாகச் சிந்தித்து செயலாற்றக் கூடியவர்கள் ஆண்களா? பெண்களா?
◉ **ஆண்களின் சிந்தனையை சிதறடிப்பவர்கள் பெண்கள்.**

*அருண் மாவடி*
✵ மனதில் இருக்கும் உருவ தெய்வத்தைச் 'சைட்' அடிக்க கோவிலிலிருக்கும் அருவ தெய்வத்தைப் பயன்படுத்துவது தப்பா வியா?



◉ **ஒரு தப்பும் கிடையாது சைட் அடிப்பதை நிறுத்தி விட்டால், ஆலயங்களில் ஆண்டவனைக் காவுவதற்கும் ஆட்கள் கிடையாது.**

*அன்ரன் நீர்வையூர்*
✵ வியாசார்! நீங்கள் அதிக தடவை பார்த்த தமிழ்ப் படம் எது?
◉ **"காசி"**

*விஜயா தெல்லியூர்*
✵ தமிழனாய்ப் பிறந்து தமிழை மதிக்காமல் வாழ்கிறவர்களைப் பற்றி?
◉ **பெற்றதாயைத் தூற்றும் பேதையர்கள்.**

## மனதில் இருக்கும் உருவ தெய்வத்தைச் 'சைட்' அடிக்க கோவிலிலிருக்கும் அருவ தெய்வத்தைப் பயன்படுத்துவது தப்பா வியா?

*க.ஆனந்தன்யாழ்.பல்கலைக்கழகம்*
✵ வியாமாமாவே!தென்பகுதி சுற்றுலாக்காரர் பற்றியும் யாழ்ப்பாணத்துச் சுற்றுலாக்காரர் பற்றியும் யாது கூறுகிறீர்?



◉ **தென்பகுதி சுற்றுலாக்காரர் ஆடைக்காக உடுக்கிறார்கள், யாழ்ப்பாணச் சுற்றுலாக்காரர் ஆடை உடுக்கிறார்கள்.**

*ஆனந்தன் மல்லாவி*
✵ வியாசர்சார்!எதற்கு அதிகம் ஆசைப்படக் கூடாது?
◉ **அடைய முடியாததை அடைய வேண்டுமென்று ஆசைப்படக் கூடாது.**

*த.உதயகுமார் இயற்றாலை*
✵ வியாசரே!பெண்களிடம் ஆண்கள் எதிர்பார்ப்பது எதை?
◉ **கற்பெனும் திண்மையை.**

*வே. சஞ்சீவன் ஓட்டுமடம்*
✵ நீதிதேவதை இம் முறையாவது தமிழர்களுக்கு நீதி வழங்குவாளா வியாசரே?
◉ **நீர் கேட்ட தேவதை அமெரிக்காவிடம் சிறைப்பட்டு விட்டாள்.**

*தாஸ் சாவகச்சேரி*
✵ வியாமாமா!காதல் எனும் அத்தியாயத்தில் 'காத்திருப்பு' எனும் படலம் சுகமானதா? சுமையானதா?
◉ **ஆணின் காத்திருப்பு சுகமானது, பெண்ணின் காத்திருப்பு சுமையானது.**

# வியாசரின் பதில்கள்

*சைலஜா யாழ்ப்பாணம்*
✵ இன்பத்தில் நம்மோடு உறவாடும் உறவினர்கள், துன்பத்தில் நம்மோடு இருப்பதில்லையே ஏன்?
◉ **பழுதடைந்த பொருட்களை வேண்டுவதற்காக யாரும் சந்தைக்குச் செல்வதுண்டா.**

*சங்கர் மீசாலை*
✵ வியா மாமா! நன்றாகப் படித்த மேதைகள் கூட சில சமயங்களில் அசிங்கமாக நடந்து கொள்கிறார்களே?
◉ **படித்திருக்கிறார்களே தவிர அவர்கள் பண்புடையவர்களல்ல.**


*ஜீவா கல்வயல்*
✵ வியாசார்! சிறந்த கேள்விகள் எப்போது பிறக்கின்றன?
◉ **ஈடுசெய்ய முடியாத இழப்பின்போது. . .**

*வே. சஞ்சீவன் ஓட்டுமடம்*
✵ வியாசரே!எனது நண்பன் ஒரு பெண்ணை ஒரு தலையாய்க் காதலித்தான். இப்போது அந்தப் பெண் குடும்பமாக வேறோர் இடத்துக்குச் சென்று விட்டாள். இதனால் எனது நண்பன் தவியாய்த் தவிக்கிறான் அவனுக்கு ஆறுதல் கூறுவீர்களா?
◉ **போனால் போகட்டும் போடா.. என்று கூற வேண்டியதுதானே.**

*மதி இளவாலை*
✵வியாசர்சார்! போட்டியில்லாமல் கிடைக்கும் பதவி எது?
◉ **அமரர்.**

*வேல்நந்தன் பருத்தித்துறை*
✵ வியாசர் மாமா! காதல் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெற யாது செய்ய வேண்டும்?
◉ **கவிதை, கடிதம், சைட் அடி ஆகிய பாடங்களை நன்றாகக் கற்கவேண்டும்.**

*சேகர் புலோப்பளை*
✵ வியாசர் சார்!வெண்புறாவை கையில் ஏந்தி வித்தை காட்டுவோர்பற்றி?



◉ **ஏமாளிக் கூட்டம் இன்னமும் இருப்பதாக நம்புகிறார்கள்.**

*வினோதினி அரியாலை*
✵ வியாமாமா!மழலை மொழி - மனைவி மொழி வித்தியாசம் என்ன?
◉ **மழலை ~ மனைவி.**

## வியாசர்சார்! வெண்புறாவைக் கையில் ஏந்தி வித்தை காட்டுவோர் பற்றி?

*யோகேஸ்வரன் அல்லைப்பிட்டி*
✵ வியாசரே!கடவுள் மனிதனுக்கு எல்லா வசதிகளையும் கொடுத்திருந்தால்?



**கொடுத்தவன் கொலை செய்யப்பட்டிருப்பான். பெற்றவன் மிருகமாக மாறியிருப்பான்.**

*புஷ்ப ரஞ்சினி மல்லாகம்*
வியாமாமா!அரசியலில் நீங்கள் இறங்கினால் முதலில் என்ன செய்வீர்கள்?
◉ **"கும்பிடு" போடப் பழகிக் கொள்வேன்.**

*துவாரகன் நெல்லியடி*
✵ வியாசர்சார்!போதி மாதவனின் போதகர்கள் யுத்தத்தின் மூலமே முடிவைக் காண்போம் என்கிறார்களே?
◉ **பாவம் போதிமாதவன்.**

*ஆனந்தகுமார் பருத்தித்துறை*
✵ வியாமாமா! குடும்ப நிர்வாகத்தில் ஆண்களின் ஆட்சியா? பெண்களின் ஆட்சியா சிறந்தது?
◉ **சிறந்தது ~ ஆண்களின் ஆட்சி**
**நடப்பது ~ பெண்களின் ஆட்சி**

*சிவஜோதி பண்ணாகம்*
✵ வியா சார்!நல்ல மனிதர்களுக்கு அதிகம் சோதனை ஏன்?
◉ **வெகுமதி கொடுப்பதற்காக.**


*நிலா நீர்வையூர்*
✵ நல்ல ஆண்களை இனங்காண்பது எப்படி...?
◉ **அவர்களது சிநேகிதர்களை வைத்து.**

*கதிர் அளவெட்டி*
✵ அண்மைக் காலமாக பக்தி நெறி தழைக்கின்றதே காரணம் என்ன வியாசரே..?
◉ **பக்தர் கே(ா)டிகள் பெருகி விட்டனர்.**

*மணி இளவாலை*
✵ வியாசார்! பெண்களை இயந்திரமாக நினைப்பவர்கள் பற்றி...?
◉ **தாய்மையின் தாற்பரியம் தெரியாத ஜடங்கள்.**

## வியாசரே!கடவுள் மனிதனுக்கு எல்லா வசதிகளையும் கொடுத்திருந்தால்......?

# வாசகர் இதயநாதம்



**சங்கு நாதமாய் வசந்தங்கள் வீசிவருகின்ற எங்கள் வார மலரே! ஒதுக்கிய தமிழினத்தின் தகவல்களை வெளிக்குணர்த்தும் குருஷேத்திரம் மற்றும் பல அம்சங்களும் எட்டுத் திசையும் ஓங்கி ஒலித்திட என் வாழ்த்துக்கள்.**

*கு. சி. இன்பராஜ்.*

**யாழ் மண்ணிலே யாவரும் போற்றியே ஏற்றும் வலம்புரியின் வண்ண வாரமலரே உன் ஆக்கங்கள் அனைத்தும் ஆனந்தம் தருகின்றது. இலக்கிய நயம் இன்பச் சுவை அளிக்கின்றது. வியாசர் பதில்கள் வியக்க வைக்கின்றது. மௌனத்தின் தேடல் இளம் கவிஞரின் உள்ளத்தின் பாடல் ஆகின்றது. கவிதைச் கலசம் காலத்தைப் படம் பிடிக்கின்றது. மொத்தத்தில் நீ இளம் எழுத்தாளரின் புலமைக்கும் எழுத்தின் வலிமைக்கும் உரம் சேர்க்கிறாய்.**

**இன்னும் ஊக்கம் அளிக்க சிறுகதைக்காய் இன்னுமோர் பக்கம் ஒதுக்கினால் நன்று.**

*த. அஜந்தகுமார், வதிரி*

**திக்கெட்டும் புகழ் பரப்பிய யாழ் மண்ணின் வார மலராய் மிளிரும் சங்குநாதமே உனது வாசகர் மனதை கொள்ளை கொள்ளும் உன் அற்புத வடிவமைப்புடன் வலம் வரும் உன்னை வாயார வாழ்த்துகிறேன்.**

துவாரகா,
நெல்லியடி.

வலம்புரியின் வண்ண மலரே, வாசக உள்ளங்களின் வசந்தகாலமே உன் இதழுக்காக காத் திருக்கும் பொழுதுகள் ஒவ்வொன்றும் சுகமானவை. நீ சுமந்து வரும் ஆக்கங்கள் மிக அற்புதமானவை. வாழ்க நின் பணி பரவட்டும் உன் புகழ்பாரெங்கும்.

நல்லையூர், நிசாந்திகா

*உன் ''மௌனத்தின் தேடல்கள்''*
*காணாமல்*
*எனை மரணிக்க வைக்கிறது*
*உன்னைப் பருகாமல்*
*என் ஜீவன்*
*தாகத்தால் துடிக்கிறது*
*'கவிதைக் கலசத்தைப்''*
*பாராமல்கலங்கித் தவிக்கிறேன்*
*கவிதை அனுப்புகிறேன்*
*நீ ஏன் புதிர் போடுகிறாய்*
*வியாசர் பதிலிலும்*
*விளக்கம் கேட்டுவிட்டேன்*
*உன் பதிலைச் சொல்லிவிடு*
*இல்லையேல்நான் மடிந்துவிடுவேன்*
*நீ என் கரங்களில் தவழ்வது*
*திங்களா? புதனா?*

*சுபா,*
*சண்டிலிப்பாய்*

**சங்குநாதமே உன் வனப்பு மிக்க தோற்றம் எம் மனதைக்கிறங்கடிக்கச் செய்கிறது.உன் அற்புத வடிவமைப்பில் திகழும் ஒவ்வொரு அம்சமும் வாசகர்மனதை பறிகொடுக்க வைக்கிறது. அத்துடன் வியாசர் பதில், சினிமாச்சிதறல், தொடர்கதை கஸ்தூரி திலகம் என்பன பார்ப்போரை பரவசமடைய வைக்கிறது. தொடரட்டும் உன் பணி.**

**நிலா,நீர்வையூர்.**

வாரத்தில் ஓருமுறை வந்தாலும்
வருகையே ஓரு வசந்தம்தான்!
ஆர்வம் உள்ளவர்களுக்கு
ஊக்கமளிக்கும் உன்னதபடைப்புத்தான்!
நெஞ்சத்தை வெளிப்படுத்துவது
மௌனத்தின் தேடல்தான்!
சிறுவருக்கு ஊக்கமளிப்பது
சிறுவர் அரங்கம்தான்!
பெண்களைப் பற்றிக் கூறுவது
மகளிர் உலகம்தான்!
கற்பனைகளைப் பதிப்பது
கவிதைக் கலசம்தான்!
விந்தை மிக்கது
வியாசர் பதில்கள்தான்!
அசர வைக்கிறது
அரசியல் தான்!
வியக்க வைக்கிறது
விஞ்ஞானத் துளிகள்தான்!
கல்மனதை கரைந்துவிடும்
கஸ்தூரி திலகம்தான்!
இன்னும் எத்தனையோ எத்தனைதான்
அத்தனையும் அற்புதம்தான்!

சசிதேவி,
வல்வெட்டித்துறை

# அர்த்தமுள்ள இந்து மதம்



கவிஞர் கண்ணதாசன்

'ஏழை ஏழையாகவே இருப்பது, அவன் தலையெழுத்து' என்று இந்து மதம் சொல்கிறதா?

ஏழை முயற்சி செய்து முன்னுக்கு வரக் கூடாதென்று இந்துமதம் தடுக்கிறதா?

'பணக்காரன் தேவைக்கு மேல் சொத்து வைத்திருப்பதை இந்து மதம் அனுமதிக்கிறதா?

இல்லை.

தர்மம் சரியாக விநியோகிக்கப்பட வேண்டும் என்பதே இந்து மதத்தின் சாரம்.

கடந்த நூற்றாண்டுகளில் பணக்காரர்களாக இருந்தவர்கள், சுயநலத்துக்காக ஏழ்மையைத் 'தலைவிதி' என்கிறார்கள்.

ஏழைக்கு இறைவன் கொடுத்த அளவு மற்றவர்களோடு சம அளவுதான்.

ஆனால், ஏழையின் அளவைப் பணக்காரர்கள் பங்கிட்டுக் கொண்டார்கள்.

ஏழ்மை என்பது நிரந்தரமாக இருக்குமானால், அது இறைவன் விதித்த விதியாக இருக்கலாம்.

எப்போது ஏழையும் பணக்காரனாக வாய்ப்பிருக்கிறதோ, அப்போது அந்த வாய்ப்புகள் தடுக்கப்பட்டவன்தான் ஏழையாக இருக்கிறான் என்று அர்த்தம்.

'பேராசைக்காரர்கள் மோட்சத்துக்குப் போவதில்லை' என்று இந்து மதம் கூறுகிறது.

ஒருவனது அறிவை இறைவன் நிர்ணயிக்கலாம்;ஆனால்பொருளை அவன் நிர்ணயிப்பதில்லை.

'ஏழ்மை என்பது இறைவனால் நிர்ணயிக்கப்பட்டது அல்ல' என்று இந்து மதம் அறுதியிட்டுக் கூறுகிறது.

அந்தக் கால உபன்யாசகர்கள் இது பற்றி என்ன சொன்னார்களோ, எனக்குத் தெரியாது.

ஆனால், இந்தக் காலத்தில், இந்துமதத் தத்துவங்களை லௌகீ வாழக்கைக்கு உகந்த வகையில்

## சம தர்மம்

விமர்சிக்கும் காஞ்சி ஆசார்ய சுவாமிகளே, அதனைத் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள்.

தெளிவான சமதர்மமே இந்து மதத்தின் நோக்கம் என்பதை அவர்கள் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள்.

பொருளாதார சமதர்மத்தையே அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

அவர்களது கருத்தை, அவர்களது வார்த்தைகளிலேயே அப்படியே தருகிறேன்.

இது யாரோ ஒரு துறவியின் பேச்சு என்று அப்போது படிக்காமல் இருந்தவர்கள், இப்போது படியுங்கள்.

அவர்கள் சொல்கிறார்கள்:

*''ஸாயா தோயம் வஸநம் அஸநம''*

ஸாயா என்றால் நிழல்; தோயம் என்பது ஜலம்; வஸநம் என்பது உடுத்திக் கொள்கிற வஸ்திரம்; அஸநம் என்றால் ஆகாரம்.

மனுஷர்களுடைய மானம், உயிர் இரண்டையும் காப்பாற்றிக் கொள்ள, இந்த நான்கும் மிகவும் அவசியமானவை. நிழல் கொடுப்பது இந்தப் பூமிதான். பூமியிலிருந்த மண், கல், சுண்ணாம்பு எல்லாவற்றையும் பெற்றுக் கொண்டு வீடு கட்டிக் கொள்கிறோம். பூமியிலிருந்து ஜலம் வருகிறது. ஆகாரம், பூமியிலிருந்துதான் கிடைக்கிறது. வஸ்திரமும் பூமியிலிருந்து வரும் படியான பருத்தியினால் தான் கிடைக்கிறது. முடிந்த முடிவில், நாம் 'பூமியில்தான் மறைந்து போகிறோம். நமக்குத் தேவையானவற்றை எல்லாம் பூமிதான் கொடுக்கிறது. என்றாலும், 'பூமி' யில் இருந்து கிடைக்கும் படியான பொருள்களில், நமக்கு மிகவும் குறைச்சலாக எவ்வளவு வேண்டுமோ அவ்வளவுதான் உபயோகப் படுத்திக் கொள்ள வேண்டும். மானத்தைக் காப்பாற்றிக் கொள்ள ஆடை கட்டிக் கொள்ள வேண்டும். நமக்கு ஒரு வருஷத்திற்குக் குறைந்தளவு எவ்வளவு ஆடை வேண்டுமோ அவ்வளவுதான் உபயோகப் படுத்திக் கொள்ள வேண்டும். இந்த விஷயத்தில்தான் நாம் கவனம் செலுத்தவில்லை.

ஆடை எதற்கு? மானத்தைக் காத்துக் கொள்வதற்காக. அதற்கு நல்ல கெட்டித் துணியாக, பருத்தி ஆடையாக இருந்தால் போதும். பகட்டாக இருக்கவேண்டும். என்பதற்காக மிகவிலை உயர்ந்த ஆடைகளை அணிந்து கொண்டால், பட்டுத் துணிகளை அணிந்து கொண்டால், மற்றவர்கள் கௌரவமாக நினைப்பார்கள் என்று தப்பாக எண்ணிக் கொண்டு அவ்வாறு செய்கிறோம். அதனால், மானத்தையும் மறைப்பதாக நினைக்க முடியாது. 'பாருடா எவ்வளவு இறுமாப்பு' என்றுதான் பார்க்கிறவர்களுக்குத் தோன்றும். இந்த விஷயத்தில் குடும்பம் செலவழிக்கிற பணத்தைக் கணக்கெடுத்தால், அந்தக் குடும்பத்தில் உள்ளவர்களுக்கு மானத்தைக் காத்துக் கொள்ளத் தேவைப்படும் துணி போக, பாக்கியை வைத்துக் கொண்டு, ஐந்து குடும்பங்களுக்கு வேண்டிய துணியைக்கூட சப்ளை பண்ணலாம்.

இரண்டாவது, பட்டுப்புடவை என்று வாங்குகிறார்களே தவிர, அதனால் பாவம் நிறைய வருகிறது. பட்டுப்புடைவை, பட்டு வேஷ்டி இவற்றால் எத்தனை ஜீவன்களுக்கு இம்சை ஏற்படுகிறது? செலவு அதில் அபாரமாக ஆகிறது. அஹிம்சை அஹிம்சை என்று சொல்லிக் கொண்டு மாமிசமே சாப்பிடுவது இல்லை என்று நாம் சொல்லிக் கொள்கிறோம். ஆனால் கொஞ்சம் யோசித்துப் பார்த்தால், நமக்கு இந்தப் பட்டுப் புடைவை, பட்டு வேஷ்டி இவற்றினால் வருகிற பாவம் மாமிசம் சாப்பிடுகிறவர்களுக்குக் கூட வராது. ஓர் ஆடோ இரண்டு ஆடோ அங்கே உயிரை இழக்கின்றன என்றால், இங்கே கணக்கு வழக்கு இல்லாத ஜீவன்களுக்கு இம்சை ஏற்பட்டு வருகிறது. கூடிய வரைக்கும் நாம் உடுத்திக் கொள்கிற வஸ்திரம் இம்சை இல்லாத வஸ்திரமாகவும், சாதாரண ஜனங்கள் எல்லாம் உடுத்திக் கொள்ளும் படியானதாகவும் இருக்க வேண்டும்.

மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும் என்பதற்காக, அரசாங்கத்தார் அநேக திட்டங்களைப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். நாட்டிலும் தரித்திரம் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டிருக்கிறது. வாழ்க்கைத்தரம் உயர்வது என்றால் ஒருவன் இரண்டு வேளை காப்பி சாப்பிடுவது, நான்கு வேளையாக வேண்டும்

(தொடரும்)

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் தரும் விஞ்ஞானத் துளிகள்

## அணுகுண்டின் உருவாக்கம்

இம் மாத ஆரம்பத்தில் உலகில் நடந்த இரு நிகழ்ச்சிக்ள் ஒன்றிலொன்று மிகவும் வேறுபட்டதாக இருந்தது. இந்தியாவில் அணுகுண்டு தயாரித்த விஞ்ஞானி அப்துல்கலாமிற்கு அந்நாட்டின் அதி உயர் பதவியான ஜனாதிபதி பதவி கொடுத்துக் கௌரவித்துக் கொண்டிருந்தனர். அதே நேரம் யப்பானில் 57 வருடங்களிற்கு முன்னர் வீசப்பட்ட அணுகுண்டால் பலியெடுக்கப்பட்ட இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்களிற்கு அஞ்சலி செலுத்திக் கொண்டிருந்தனர். இவ் இரு நிகழ்வுகளிற்கும் பொதுவான அணுகுண்டின் தயாரிப்பை இவ்வாரம் பார்ப்போம்.

## ஆரம்ப நிகழ்வுகள்

1934 ஆம் ஆண்டளவில் பல விஞ்ஞானிகள், அந்நேரம் அதி கூடிய அணு எண்ணைக் கொண்டிருந்த. யுரேனியத்தை விட, அணு எண் கூடிய மூலகமொன்றை உருவாக்க முயற்சி செய்து கொண்டிருந்தனர். இவ் விஞ்ஞானிகளில் குறிப்பிடத் தக்கவர்கள் இத்தாலிய விஞ்ஞானிகளான என்றிகோ பேர்மியும் (Enrico fermi) எமிலோ சேகிரேயும் (Emilo Segre) ஆகும். இவர்கள் யுரேனியம் அணுவை நியூத்திரன் களுடன் மோதடிப்பு செய்து பார்த்தார்கள். அப்போது அவர்கள் வியக்கும் வண்ணம் நான்கு கதிர்த்தொழிற்பாடுடைய மூலகங்களை விளைவாகப் பெற்றனர். இவற்றிலொன்று ஆரம்ப மாற்றீடான யுரேனியம் - 238 இலிருந்து யுரேனியம் -239 இற்கு மாறுவதால் பெறப்பட்டதெனக் கருதினர்.

$$^{238}_{92}U + ^{1}_{0}n \longrightarrow ^{239}_{92}U$$

இவ். விளைவு $^{239}_{92}U$

பின்னர் பீற்றா ( $\beta$ ) தேய்வுக்கு உட்பட்டு NP ஆக மாறியது.

$$^{239}_{92}U \longrightarrow ^{0}_{1-}e + ^{239}_{92}NP$$

பெறப்பட்ட ஏனைய கதிர்த் தொழிற்பாட்டிற்குரிய விளக்கத்தை இவ்இ[illegible] விஞ்ஞானிகளாலும் கொடுக்க முடியவில்லை.

## கருப் பிளவு (Nuclear Fission)

மேற் கூறிய பேர்மி - சேகிரே இன் பரிசோதனையை 1938 ஆம் ஆண்டு மீண்டும் செய்து பார்த்த ஜேர்மன் இரசாயனவியல் நிபுணர்களான ஒட்டோ ஹான் (Otto Hahn) ∴பிரிட்ஸ் ஸ்ராஸ்மான் (Fritz Strassman) ஆகியோர் ஏனைய விளைவுகளில் ஒன்றாக பேரியத்தின் (Barium) சமதானியொன்றைக் கண்டு அதிர்ச்சியடைந்தனர். ஹான் (Hahn) தன்னுடன் நீண்ட நாள் வேலை செய்த லிஸ் மெய்ற்னர் (Lise Meitner) என்பவரிற்கு தங்கள் பரிசோதனையின் விநோத முடிவுகளை எழுதியனுப்பி, அவரின் ஆலோசனையைக் கேட்டார். லிஸ் மெய்ற்னர் ஒரு ஆஸ்திரிய (Astrian) பௌதிகர். இவர் ஹான் உடன் பேர்லினில் (Berlin) ஒன்றாக வேலை செய்தவர். அவர் ஒரு யூதராக இருந்ததால், நாசிகள் (Nazis) ஆஸ்திரியாவை 1938ஆம் ஆண்டு கைப்பற்றிய போது, சுவீடனுக்குத் தப்பிச் சென்றிருந்தார். இவர் ஹான் இனது பரிசோதனை முடிவுகளை ஆராய்ந்த போது, பேரியம் அணுக்கள், யுரேனியம் கருவின் அரை மடங்கு பருமனை மாத்திரம் கொண்டிருப்பதை அவதானித்தார். யுரேனியத்தின் கருக்கள் இவ்வாறு துண்டுகளாகப் பிரிக்கப்படலாமா? அவர் சில கணிப்பீடுகள் செய்து பார்த்த பின் யுரேனியம் கரு உண்மையிலேயே பிரிவதை உறுதி செய்து கொண்டார்.

கலாநிதி.நா.சிவயோகன்
பௌதிகவியல் துறை
யாழ். பல்கலைக்கழகம்.

அவ் வருட கிறிஸ்மஸ் விடுமுறைக்கு அவரிடம் வந்த அவரின் மருமகன் ஒட்டோ பிறிஸ் (Otto Frisch) உடன் இப்புதிய கண்டுபிடிப்பு பற்றிக் கலந்து ஆராய்ந்தார். உண்மையிலேயே கருப் பிளவு (Nuclear Fission) என்ற சொற்பதத்தை பின்னர் பிறிஸ் (Frisch) தான் அறிமுகம் செய்து வைத்தார். அந்நேரம் பிறிஸ்கோ பென்ககன் பல்கலைக் கழகத்தில் (University of Copenhagen) நெய்ல்ஸ் போர் (Niels Bohr) உடன்வேலை செய்து கொண்டிருந்தார். அவர் டென்மாக் (Denmark) திரும்பிச் சென்ற போது இக் கருப்பிளவுத் தாக்கம் பற்றிய செய்தியை போரிடம் (Bohr) கூறினார். அந்நேரம் போர் அமெரிக்காவில் நடந்த பௌதிகவியல் மகாநாடு ஒன்றிற்கு போக இருந்தார். விளைவு அம் மகாநாட்டில் எல்லா மூலைகளிலும் நடந்த பிரதான விவாதம் இப்புதிய தாக்கம் பற்றியதாக இருந்தது.

அதே காலகட்டத்தில் என்றிகோ பேர்மிக்கு 1938 ஆம் ஆண்டிற்கான நோபல் பரிசு பௌதிகத்தில் வழங்கப்பட்டது. பேர்மியின் மனைவி லாரா (Laura) ஒரு யூதராக இருந்ததாலும், அந் நேரம் இத்தாலியை ஆட்சி செய்த சர்வாதிகாரி முசோலினி ஹிட்லரின் சகாவாக இருந்தாலும், பேர்மி ஸ்ரொக் கோமில் (Stockholm) நோபல் பரிசை ஏற்றுக் கொண்டு, அங்கிருந்தே உடனடியாக தனது மனைவி, பிள்ளையுடன் அமெரிக்காவிற்கு தப்பி ஓடினார். அப் போது தான் அமெரிக்கா ஜேர்மனியில் கண்டு பிடிக்கப்பட்ட கருப்பிளவு பற்றிய செய்தியை முதன் முதலில் பேர்மியூடாகப் பெற்றுக் கொண்டது.

## கருச் சங்கிலித் தாக்கம் (Nuclear Chain Reaction)

மேற் கூறப்பட்ட கருப் பிளவானது ஒரு செய்முறைச் சங்கிலித் தாக்கமாக இருக்கலாமென உணர்ந்தவர்களில் முதன்மையானவர் லியோ சைலாட் (Leo Szilard) ஆகும். சைலாட்டும் ஹங்கேரியில் (Hungary) பிறந்து ஜேர்மனியில் கல்வி கற்றவர். அவரும் ஒரு யூதராக இருந்ததால் 1937 ஆம் ஆண்டு அமெரிக்காவிற்கு அகதியாகச் சென்றிருந்தார். பிளவின் போது வெளிவிடப்படும் நியூத்திரன்கள் மீண்டும் யுரேனியம் கருக்களின் பிளவைத் தூண்டுமெனவும், அதன் மூலம் ஒரு சங்கிலித் தாக்கத்தை உருவாக்க முடியும் எனவும் அவர் கண்டு பிடித்தார். மேலும் யுரேனியம் பிளவின் போது, பாரிய அளவு சக்தி வெளிவிடப் படுவதால், இப்பிளவுச் செய்கை முறை பாரிய வெடி தகு விசையுள்ள குண்டாக (Bomb) உருவாக்கப் படலாம் எனவும் அவர் கண்டு பிடித்தார்.

இப் பாரிய வெடிதகு குண்டால் உருவாக்கக் கூடிய அழிவுகளை உணர்ந்த சைலாட், இக் கண்டு பிடிப்பின் முக்கியத்துவத்தை ஜனாதிபதி பிராங்லின் டீ றூஸ்வெஸ்ற் (franklin D.Roosevelt) இற்கு அறிவிக்குமாறு ஜன்ஸ்டீனை (Einstein) வற்புறுத்தினார்.

அமெரிக்க அரசாங்கம் இவ் அணுசக்தி பற்றி ஆராய்வதற்கு ''மன்ஹற்றன் முற்கோள்'' (Manhattan Project) என அழைக்கப்பட்ட பாரிய முற்கோள் திட்டத்தை உடனடியாக ஆரம்பித்தது. மிகவும் அருமையாக கிடைக்கும் யுரேனியம் - 235 மட்டும் பிளவுபடக்கூடியதாக இருந்ததால், யுரேனியம் அதிகளவு சேகரிக்க வேண்டியிருந்தது. அத்துடன் விளைவாக கிடைத்த சமதானிகளும் வேறாக்கியெடுக்க வேண்டியிருந்தது. நியூத்திரன்கள் யுரேனியம் கருவுடன் மோதுவதற்குரிய நிகழ்தகவை அதிகரிப்பதற்காக கிராபைட் (graphite) இனை உபயோகித்து அதன் வேகத்தை குறைக்க வேண்டியிருந்தது.

சிக்காக்கோ பல்கலைக் கழகத்தில் (University of ChiCago) பேர்மியும் அவரது சகாக்களும் முதன் முதலில் பேணிய கருத்தாக்கத்தை (Sustained nuclear Reaction) 1942 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 2ஆம் திகதி கண்டு பிடித்தனர்.

இவ்வாரப் புதிர் 12

ஒரு குடுவையில் அமிலம் இருக்கிறது, இன்னோர் குடுவையில் அதே எடையுள்ள நீர் இருக்கிறது. முதல் குடுவையிலிருந்து 20 கிராம் அமிலம் இரண்டாவது குடுவையில் ஊற்றப்படுகிறது. பின்னர் இரண்டாவது குடுவையிலிருக்கும் திரவத்திலிருந்து மூன்றில் இரு பங்கு முதலாவதுகுடுவையில் ஊற்றப்படுகிறது. இப்போது இரண்டாவது குடுவையில் இருந்ததைக் காட்டிலும் நான்கு மடங்கு அதிகமான திரவம் முதலாவது குடுவையில் இருக்கிறது. ஆரம்பத்தில் இருந்த அமிலம் எவ்வளவு? நீர் எவ்வளவு?

சரியான விடையைக் கூப்பனில் எழுதி 04.09.2002 இதற்கு முன்னர்

பத்திராதிபர், யாழ்.விஞ்ஞான சங்கம்(A)
மே/பா.விலங்கியல் துறை,
யாழ். பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும்.

சரியான விடை எழுதும் 3 அதிர்ஷ்டசாலிகளுக்கு தலா 100 ரூபா வழங்கப்படும்.

*புதிர் இல.11*
*சரியான விடை : 03*

*சரியான விடை எழுதி அனுப்பியோரில் பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள்.*

**1.கந்தையா ரஜீவன்**
**யா.மல்லாகம், மகா வித்தியாலயம்,**
**மல்லாகம்.**

**2. சிவகுமாரன் சயந்தன்,**
**யா.யாழ்ப்பாணக் கல்லூரி,**
**வட்டுக்கோட்டை**

**3.கிரிசாந்தி செல்வரட்ணம்,**
**யா.மல்லாகம் மகா வித்தியாலயம்**
**மல்லாகம்.**

புதிர் 11 றகான பரிசுப் பணத்தை அன்பளிப்புச் செய்வோர்,

**நெல்லியடி சனசமூக நிலையம்**
நெல்லியடி,
கரவெட்டி.

**குறிப்பு: இவர்கள் தமது பரிசுப் பணத்தினை வார நாட்கள் தோறும் யாழ். பல்கலைக்கழகம் விஞ்ஞான பீடாதிபதி அலுவலகத்தில் காலை 10.00 மணி முதல் மாலை 4.30 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.**

**யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்**
**புதிர் இல. 12**

**சரியான விடை** :-............................
**முழுப்பெயர்** :-............................
**முகவரி** :-............................
............................
**கையொப்பம்** :-............................

# அண்ணல் காந்தியின் கஸ்தூரி திலகம்

அன்பின் வடிவமாக, கருணையின் உருவமாக, சாந்தத்தின் சின்னமாகத் திகழ்ந்த உத்தமியைக் கை விலங்கிட்டு கொலைக் குற்றவாளிபோல் இழுத்துச் சென்று, 'சி' வகுப்பில் அடைத்து இழிவுபடுத்தினார்கள் அந்தக் கல் நெஞ்சம் படைத்தவர்கள். கணவனையும், மனைவியையும் பிரித்து வைத்தனர் சிறுமதி படைத்த அந்தச் சீமைக்காரர்கள். அன்னை சபர்மதி சிறையில் வாடினார். அண்ணலோ எரவாடா சிறையில் தவம் கிடந்தார்.

சிறைக்கூடத்தைச் சிரித்த முகத்துடன் தான் ஏற்றுக் கொண்டார் கஸ்தூரிபா. சத்தியநெறியில் தளராத உறுதியும், கணவர் சென்ற பாதையில் குன்றாத நம்பிக்கையும் கொண்டவருக்கு வெஞ்சிறைவேதனை அளிக்க வில்லை; விளையாட்டாகத்தான் இருந்தது. அங்கும் வீண் பொழுது கழிக்க வில்லை அவர். ராட்டையில் நூல் நூற்றார். காலையிலும் மாலையிலும் தவறாது பிரார்த்தனை செலுத்தினார். கீதையையும், ராமாயணத்தையும் படிக்கச் சொல்லிக் கேட்டார். தாமே எழுத்துக் கூட்டிப் படித்தும் சுவைத்தார். ஆங்கிலம் தெரிந்தவர்களிடம் ஏ.பி.ஸி.டி கற்றுக் கொண்டார். ஆங்கில அறிவில்லாமலே அறுபது வயதைக் கடந்துவிட்டாலும், கணவருக்கு எழுதும் கடிதத்தின் விலாசத்தைத் தம் கையாலேயே எழுத வேண்டும் என்ற ஓர் அற்ப ஆசை அவருக்கு! காந்தியிடமிருந்து அவருக்குக் கடிதம் வரும். அதை யாராவது படித்துக் காட்டுவார்கள். ஒவ்வொரு வரியும் அவர் உள்ளத்தைச் சுண்டியிழுக்கும். அவருடன் நேரில் பேசுவது போல ஒரு பிரமை ஏற்படும்! அன்றைக்கே அதற்குப் பதில் எழுதி விடுவார். குஜராத்தி எழுத்துக்களை குழந்தைகள் எழுதுவது போல் எழுத்துக்கு எழுத்து இடம் விட்டுத் தனித்தனியாக எழுதுவார். அதைக் காந்தியும் மிகுந்த பிரயாசைப்பட்டுப் படித்துப் புரிந்து கொண்டு உள்ளம் குளிர்வார். புதுமணத் தம்பதி போல் 'இவர்கள் கடிதங்களைப் பரிமாறிக் கொள்வதைப் பார்த்து உடனிருந்த கைதிகள் உள்ளம் நெகிழ்ந்து ஆனந்தக் கண்ணீர் உகுப்பார்கள்.

யாராவது பத்திரிகை படித்துக் கொண்டிருந்தால், அவர் அருகில் போய், 'ஏதாவது செய்தி உண்டா?' என்று கஸ்தூரிபா கேட்டால் ''பாபுவைப் பற்றி ஏதாவது செய்தி உண்டா?'' என்பதுதான் அதன் அர்த்தம். மற்ற அரசியல் விஷயங்களைப் பற்றி அவருக்கு அக்கறையேயில்லை. 'காந்தி உடல் நிலை எப்படியிருக்கிறது? அவர் எப்போது விடுதலை பெறுவார்? உண்ணாவிரதம் ஏதாவது மேற்கொள்ளப் போகிறாரா?' என்று தெரிந்து கொள்ளத் துடிப்பார். காந்தியின் புகைப் படம் வந்தால், அதை மீண்டும் மீண்டும் பார்த்து ரசிப்பார்.

ஒரு நாள் அன்னையின் தலையில் இடிவிழுந்தாற் போல் அந்தச் செய்தி வந்தது 'காந்தி எரவாடா சிறையில் சாகும் வரை உண்ணா விரதம் இருக்கப் போகிறார்! இந்து சமூகத்திலிருந்து ஹரிஜனங்களைப் பிரிக்கச் சர்க்கார் செய்யும் சூழ்ச்சியை எதிர்த்து உயிரையே பணயம் வைக்கப் போகிறார்' என்று அறிந்து கஸ்தூரிபா கதி கலங்கிப் போனார்.

''வல்லபாய் பட்டேலும், மகாதேவ் தேசாயும், சரோஜினி தேவியும் உடன் இருந்து என்ன பயன்? 'உண்ணா விரதம் இருக்காதீர்கள்' என்று சொல்லி அவரைத் தடுக்க முடியவில்லையே'' என்று ஆற்றாமை தாளாமல் அங்கலாய்த்துக் கொண்டார்.



உண்ணா விரதம் துவங்கி இரண்டு நாட்கள் ஆகிவிட்டன. காந்தி இம் முறை மிகவும் பிடிவாதமாக இருந்தார். வழக்கமாக அருந்தும் தண்ணீரைக் கூட விலக்கி விட்டார். 'அவருக்குத் தலை சுற்றியது; வயிறு குமட்டியது. ரத்த அழுத்தம் வேறு ஏறிக் கொண்டே போகிறது' என்று பத்திரிகையில் வந்த செய்தியை ஒருவர் படித்துச் சொன்னதும் கஸ்தூரிபாவின் உடல் நடுங்கிற்று. கணவர் அருகில் இருக்க வேண்டும் என்று மனம் படபடத்தது. 'சர்க்காருக்கு எப்படி மனுப்போடுவது?' சொந்த நலனுக்காக ஆட்சியாளர் காலில் விழுவதா? அதைக் கணவர்தான் ஏற்பாரா?' இருதலைக் கொள்ளி எறும்பு போல் திண்டாடினார் கஸ்தூரிபா.

நாடாள்வோர் இதயத்திலும் சற்றுக் கருணை சுரந்தது. கஸ்தூரிபாவை எரவாடா சிறைக்கு மாற்றினார்கள். கவலை தோய்ந்த முகத்துடன் தம் எதிரில் நின்ற மனைவியைக் கண்டதும் காந்திக்கு ஒரு புதுத்தெம்பு பிறந்தது.

அருகில் வந்த 'பா'வைக் கையைப் பற்றி அன்புடன் இழுத்தார்.

''இதெல்லாம் என்ன? விடுங்கள்.''

''உன்னிடம் சொல்லாமல் உண்ணாவிரதம் துவங்கி விட்டேன் என்று என்மீது கோபமா கஸ்தூரி...? ஐயோ பாவம். சிறையில் ரொம்ப சிரமப்பட்டாயா? நீ சரியாகச் சாபிடுவதில்லையா? உன் கன்னங்களெல்லாம் ஒட்டி உலர்ந்து இருககின்றனவே...''

''நான் எப்படி வேண்டுமானாலும் இருந்து விட்டுப் போகிறேன்: நீங்கள் முதலில் உண்ணாவிரதத்தை நிறுத்தி விட்டு மறு பேச்சு பேசுங்கள்...''

'தக்க காரணமின்றி கணவர் உண்ணாவிரதம் மேற்கொள்ள மாட்டார். தக்க காரணமின்றி அதை கைவிடவும் மாட்டார்' என்று கஸ்தூரிபாவுக்குத் தெரியும். இருந்தாலும் மனைவிக்கிருந்த உரிமையால், இருவருக்கிடையே வளர்ந்து விட்ட நேசத்தால் நிலைத்து விட்ட பாசத்தால் அப்படிப் பேசினார்.

காந்தி சிரித்துக் கொண்டார்.

ஏழு நாட்கள் யார் யாரோ வந்தார்கள். ஏதேதோ பேசினார்கள். ஒரு சமரசம் ஏற்பட்டது. பூனா உடன்பாடு பிறந்தது. உண்ணாவிரதமும் நின்றது.

கஸ்தூரிபாவின் கையிலிருந்து ஆரஞ்சுப் பழரசத்தை வாங்கிக் குடித்தார் காந்தி. அருகில் இருந்த கவியரசர் தாகூருக்கு நெஞ்சம் குளிர்ந்தது.

கஸ்தூரிபாவை அழைத்துப் போக சிறை அதிகாரி வந்துவிட்டார். கடைசி நாள் கணவருக்குத் தம் கையால் உணவு தயாரித்து அளிக்க வேண்டும் என்ற ஆசை கஸ்தூரிபாவுக்கு. காந்தியிடம் விருப்பத்தைத் தெரிவித்தார்.

''வேண்டாம். அதிகாரியை அதிக நேரம் காக்கவைக்கக் கூடாது. நீ உடனே போவதுதான் நல்லது'' என்று அவருக்கே உரிய கண்டிப்புடன் கூறி விட்டார் காந்தி. வேறு வழிஇல்லாமல் துணி மூட்டையைக் கட்டிக் கொண்டு விடைபெற்றுக் கொண்டார் கஸ்தூரிபா.

''நான் போய் வருகிறேன். சீக்கிரம் வெளியே வந்து விடுங்கள். மறுபடியும் உண்ணாவிரதம் எதுவும் துவக்கி விடாதீர்கள். உங்கள் காலில் விழுந்து கேட்டுக் கொள்கிறேன்...' என்று சொல்லி, கணவர் காலைத் தொட்டு வணங்கினார். காந்தி பரிவுடன் அவரைத் தட்டிக் கொடுத்து விடையளித்து அனுப்பினார். அருகில் இருந்தவர்கள் கன்னங்கள் நனைந்தன.

எட்டு மாதங்கள் ஓடிவிட்டன. சபர்மதியிலிருந்த கஸ்தூரிபா எரவாடா சிறையில் இருந்த கணவரைக் குறித்து கவலைப்பட்டுக் கொண்டிருந்தார். இரண்டு நாட்களாக அவர் உணவே உட்கொள்ளவில்லை. எப்படி உட்கொள்ளுவார்? காந்தி மீண்டும் ஓர் உண்ணாவிரதத்தைத் துவக்கி இருந்தாரே! மக்கள் தூய்மை பெறுவதற்காக, தம்மை வருத்திக் கொள்ளும் இருபத்தியொரு நாட்கள் உண்ணாநோன்பு மேற்கொண்டு விட்டார். கணவர் பட்டினியிருக்கும்போது மனைவிக்கு உணவு வேண்டியிருக்குமா? ''நான் என்ன செய்வேன்? இப்படி அடுத்து அடுத்துப் பட்டினியிருந்தால் இவர் உடம்பு தாங்குமா? சொன்னாலும் கேட்க மாட்டேன் என்கிறாரே. கடவுளே. இவர் உயிருக்கு ஓர் ஆபத்தும் வராமல் காத்தருள வேண்டும்'' என்று அந்தக் கற்புக் கரசி கடவுளிடம் அடைக்கலம் புகுந்து அமைதியை நாடினாள்.காந்தி உயிருக்கு ஆபத்து நேரிட்டால் விபரீதமாகிவிடும் என்று அஞ்சிய அரசாங்கம் அவரை உடனே விடுதலை செய்து விட்டது. அன்னை கஸ்தூரி வந்தார். கண் துஞ்சாமல், உண வருந்தாமல் மெய்வருத்தம் பாராமல் கருமமே கண்ணாக கணவருக்குப் பணிவிடைகள் செய்து, அவர் ஏற்ற நோன்புக்கு உற்ற துணையாக இருந்து உதவி புரிந்தார். அவருடைய உடலும் உள்ளமும் நொந்துபோய் இருந்த போதுதான், காந்தியின் உண்ணாவிரதம் முடிந்த சில நாட்களுக்கெல்லாம், பூனா 'பர்ணகுடி' மாளிகையில் தேவதாசுக்கும் லட்சுமிக்கும் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. பல தலைவர்களின் முன்னிலையில் வைதீகச் சடங்குகளுடன், 'ஜாம் ஜாம்' என்று நடந்தேறிய திருமணத்தில், மணமேடைக்கருகில் மன நிறைவு பெற்ற மங்கள விளக்காகப் பொங்கிவந்த மகிழ்ச்சியில் பூரித்த முகப்பொலிவுடன், பட்ட துனபததையெலலாம ஒரு கணம மறந்து. பெருமையும் பெருமிதமும் பளிச்சிட, கண்கள் பனித்திட அமர்ந்திருந்தார் அன்னை கஸ்தூரி.

கஸ்தூரிபாவின் கடைசி மகன் தேவதாஸின் திருமணம் நடைபெற்று மூன்று மாதங்கள் கூட ஆகவில்லை. இல்லறம் புகுந்த மணமக்கள், மணவாழ்க்கையில் அப்போதுதான் காலடி எடுத்து வைத்திருந்தார்கள். அதற்குள் காந்தியும், கஸ்தூரிபாவும் மீண்டும் கைது செய்யப்பட்டனர். முன்போல் சிறையில் ஹரிஜனத் தொண்டு செய்ய வாய்ப்பளிக்கப்படாததை எதிர்த்து காந்தி மற்றொருமுறை 'சாகும் வரை உண்ணாவிரதம்' மேற்கொண்டார். மீண்டும்பழைய கதைதான். சபர்மதி சிறையிலிருந்த அன்னை உணவை விலக்கி விட்டார், உறக்கம் வராமல் அவதிப்பட்டார். உள்ளம் நொந்து வாடினார்.

**பரணீதரன்**

இறக்கைகள் இருந்து, அதிகாரிகளும் இரக்கம் காட்டியிருந்தால் எரவாடா சிறைக்குப் பறந்து போயிருப்பார்!

ஆன்மீக சக்தியால் அண்ணல் அடிக்கடி உண்ணாவிரதம் இருந்தாரே தவிர, அவர் மேற்கொண்ட கடினமான தவத்திற்கு உடல் வலிமை இடம் கொடுக்கவில்லை. இரண்டாவது நாளே எலும்பும் தோலுமாக மாறிவிட்டார் மகாத்மா. இரத்த அழுத்தம் ஏறிக்கொண்டே போயிற்று. மூன்றாவது நாள் நிலைமை மோசமாகி விட்டது.

(தொடரும்)

## சிந்தனையாளரின் சுவையான அனுபவங்கள்

### இராம ராஜ்யம்

டாக்டர் ராதாகிருஷ்ணன், ராஜ்ய சபைத்தலைவராக இருந்த போது இந்தியாவிலிருந்து ஏராளமான குரங்குகள் வெளிநாடுகளுக்கு அனுப்பப் படுவது பற்றி விவாதம் நடந்தது. ஒரு உறுப்பினர் கேட்டார்.

''இந்தியாவிலுள்ள குரங்குகள் வெளிநாடு போய் விட்டால் இங்கு ராம ராஜ்யம் எப்படி ஏற்படும்?''

''கவலைப்பட வேண்டாம். இன்னும் வேண்டிய குரங்குகள் இங்கே உள்ளன'' என்றார் மந்திரி.

''இந்த சபையில் அல்ல'' என்றார் ராதாகிருஷ்ணன்.''

### ஏற்ற இடம்

வெண்டல் பிலிப்ஸ் நீக்ரோக்களின் உரிமைக்காகப் பாடுபட்டவர். ஒரு பாதிரிக்கு அவருடைய கொள்கை பிடிக்கவில்லை. அவரைக் கேலி செய்ய நினைத்தார்.

''இங்கே உங்கள் கொள்கையைப் பிரசாரம் செய்து என்ன பிரயோசனம்? நீக்ரோக்கள் வசிக்குமிடத்தில் போய் பேசுவதுதானே?'' என்றார்.

''நரகத்தில் துடிப்பவர்களைக் கரையேற்றத்தானே நீங்கள் பாடுபடுகி றீர்கள்?'' என்று பிலிப்ஸ் பாதிரியாரைக் கேட்டார்.

''ஆமாம்,'' என்றார். பாதிரி பெருமையாக.

''அப்படியானால் நீங்கள் நரகத்துக்குத்தானே போக வேண்டும்; இங்கே என்ன வேலை?''

### யார் யாருக்குச் சொத்து

கம்யூனிஸ்ட் இயக்கத்தின் மாபெரும் தலைவராக இருந்த அமரர் ப.ஜீவானந்தம் அவர்களின் சாதாரண குடிசை வீட்டுக்கு முதலமைச்சராக இருந்த காமராஜர் திடீரென சென்றார்.

வீடு இருந்த நிலையைக் கண்டதும் முதல்வர் காமராஜரின் மனம் வேதனைப் பட்டது.

''வீட்டை இப்படி வைத்திருக்கிறீர்களே? கூடிய விரைவில் ஒரு நல்ல வீட்டுக்கு ஏற்பாடு செய்கிறேன்'' என்றார் காமராஜர்.

ஜீவா மறுத்து விட்டார்.

''எனக்கு இருக்கும் இந்த வீடுகூட இல்லாதவர்கள் ஆயிரக் கணக்கில் இருக்கிறார்கள். நான் மட்டும் சலுகை பெறுவது நியாயமாக இருக்க முடியுமா?'' என்று பதிலளித்தார் ஜீவா.




### உலகின் மிகவும் வயதான தாத்தா

இப்போது உலகின் மிகவும் வயதான மனிதராக கின்னஸ் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டவர். ஜப்பானைச் சேர்ந்த யூகிசி ஜுகான்சி என்ற மனிதராவார். இவர் தென்மேற்கு ஜப்பான் நகரமான ஓகோரியில் 1889ம் ஆண்டு பிறந்தவர். இப்போது 113 வயதாக இருக்கும் இவரையே வயதானவராக கின்னஸ் ஏற்றுக் கொண்டுள்ளது.

### இதுதான் தேசப் பற்று

'இந்தியாவின் 56ஆவது சுதந்திர தினம் 15 ஆகஸ்ட் 2002 இல் நாடு பூராகவும் கொண்டாடப்பட்டது. இதில் ஆடிப்பாடி மிகவும் கோலகலமாக நடிகர்கள் பலரும் நாட்டு மக்களை சந்தோசப்படுத்தினார்கள். ஆனால் நடிகர் கமலஹாசன் தன் இறப்புக்குப் பின் தனது உடல் உறுப்புக்களை சென்னை பல் கலைக் கழக மருத்துவபீடத்திற்கு மாணவர்களின் கல்விக்காக வழங்குவதாக அறிவித்து மருத்துவ பீடத்தில் நடந்த நிகழ்வில் அதற்கான உறுதிப் பத்திரத்தில் கையொப்பமிட்டதுடன் அவரின் மூத்த மகளான வினாஹாசன் சாட்சிக் கையொப்பமிட்டு அதற்கு ஒத்துழைத்தார். இவ்வாறான நடிகர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள்? என்று இப்போது மக்கள் தங்களு க்குள் தாங்களே பேசிக்கொள்கிறார்கள். இருந்தாலும் இதன்மூலம் சினிமாவில் சிறந்த இடத்தில் உள்ள நடிகர் என்பதை விட ஓர் தேசப்பற்றுமிக்க மிக்க மனிதன் என்பதை காட்டி மக்களிடையே பெருமதிப்பை தேடிக்கொண்டு விட்டார் என்பதே உண்மை.

### நட்சத்திர விருது முகம்மது அலிக்கு

ஹொலிவூட்டின் மிக உயர்ந்த விருதான நட்சத்திர விருதை மூன்று தடவை உலக சம்பியன் பட்டம் வென்ற முகம்மது அலி பெற்றுக் கொண்டார். இவரின் அறுபதாவது பிறந்த நாளில் இந்த விருது லொஸ் ஏஞ்சலில் வைத்து வழங்கப்பட்டது. இவர் 18 வயதில் ஒலிம்பிக்கில் தங்கப்பதக்கம் வென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. கறுப்பு இனத்தவரான இவர் அமெரிக்காவால் அலட்சியப்படுத்தப்பட்டவேளை இவர் தன்னை முஸ்ஸீமாக மாற்றி கேசியஸ் கிளே என்ற தனது பெயரை முகம்மது அலி என மாற்றிக் கொண்டார். இவருக்கு ஆண்குழந்தைகள் இல்லாததால் இவருக்குப் பின் யார் என்பது கேள்வியாகியுள்ளது. முகம்மது அலியின் சாதனையை திரைப்படமாக மாற்றுகிறார் இயக்குநர் மைக்கேல்மான்.

### அதிக எடையுள்ள மல்யுத்த வீரர்

உலக மல்யுத்த வீரர்களில் அதிக உடல் எடை கொண்டவர் அமெரிக்காவை சேர்ந்தச் இம்மானுவேல். இவரின் எடை சுமார் 350 கிலோகிராம் ஆகும்.

### கடன்களை வசூலிக்க

பொதுவாக கடைகளில் சாமான்களை வாங்கிக் கொண்டு ஊர்க்காரர்கள் சிலர் கடன் என்பார்கள். இந்தக் கடன் அறவிட முடியாததாக போவதுண்டு. இதற்கு ஊர்க்கடைக்காரர் ஒருவர் புதுவழி கண்டு பிடித்திருக்கிறார். தன்னிடம் பல நாள் ஆகியும் கடனைத் தராதோரின் பெயர்களை பளிச் என்று பலகையில் எழுதி வெளியே மாட்டி விட்டார். உடனே பலன் கிடைத்தது. கடன்காரரர்கள் ஓடி வந்து பணம் தந்தார்கள். பெயரை அழித்து விடும்படி கேட்டுக்கொண் டார்கள். நீங்களும் பின்பற்றலாமே.

**N.புலேந்திரன்**
**ஏழாலை**

# மௌனத்தின் தேடல்கள்

### ஈகை புரிவாய்!

ஆதரவற்று உள்ளேன்
ஆண்டவனே என்னை
இப்புவியில் நீக்கி
ஈகை புரிவாயே!

*கு. சிவகுமார்,*
*சுன்னாகம்.*

### காத்திருப்பு !

மரணத்தின் வருகைக்காய்
காத்திருக்கும் - இந்த
பழுத்த உயிரும்
பிறக்கும் சமாதானத்தை
பார்த்திட அருள் தர வேண்டும்
இறைவா....!

*J.தனேஸ்,*
*நல்லூர்.*

### இனியாவது!

கடந்து விட்ட காலம்
கண்ணீரோடு கரைந்து விட்டகாலம்
கண் உறங்கி
கல்லறை போகும் நேரம்
கனிந்திருக்கு காலம்
கடவுளே
இனியாவது தமிழன்
கண்ணீரை மறப்பானா.....?

*நெடு.மதியன்,*
*வவுனியா.*

### வரம்!

இறைவனை மட்டுமே கும்பிட்டு
பழகிய உன் கைகள் - இன்று
கொள்ளி வைக்கவேனும் ஒரு
பிள்ளையை விட்டுவிட வேண்டுமென
வேதனையோடு
வரம் கேட்கின்றதோ தாயே!

க. கமலினி,
கரவெட்டி.

### தலையெழுத்து !

பத்துத் திங்கள் தவமிருந்து
பாரினிலே பெற்ற
பிள்ளைகள் பத்தும்
பரதேசம் போய்க் – கண்
பாராமல் சுகித்திருக்க
நான் மட்டும் இங்கிருந்து
நாய் படாப் பாடுபட
நாயகன் ஏன்
எழுதி வைச்சான்?

*அருந்தா,*
*முடமாவடி.*

### எதிர்பார்ப்பு!

கணவனோ காலனிடம்
பிள்ளைகளோ பிற நாட்டில்
உறவுகளோ எட்டத்தில்
இத்தாயோ ஏக்கத்தில்
எதிர்பார்ப்போ மரணத்தில்.

*கு. சிவகுமார்,*
*புத்தூர் சோமஸ்கந்தா.*

### வேராக!

வேராய் இருந்து விருட்சம்
தாங்கிய நீ இன்று
விழுதுகளை இழந்து
வீழ்ந்து கிடக்கிறாயா? வேண்டாம்!
உன் வேண்டுதல் பலித்திடும்
அப்போது – உன்
விழுதுகளும் விருட்சம் தாங்கும்
வேராக மாறிடும்.

*பூ.சாவித்திரி,*
*இராமநாதன்*
*நுண்கலைப் பீடம்*

### ஓரிடம் தா...?

இறைவா!
இம்மண்ணில் தமிழராய்
அல்லல் பட்டு வாழ்தலை விட
கைகூப்பிக் கேட்கிறேன்
உன்னிடம்
சொர்க்கத்திலாவது
ஓரிடம் தா!

*N.ஜெனன்,*
*B.A.தம்பிலேன்.*

### சமாதானம் நிலைபெற!

தள்ளாத வயதினிலே
தளராத மனதுடனே
மலர்ந்திருக்கும் சமாதானம்
நிலை பெற்றிட நீயும்
வேண்டுகிறாயோ.

*சி.சிவஜன்,*
*யா.மல்லாகம்*
*மகாவித்தியாலயம்.*

### சமாதானம் !

மரணத்தின் வாசலில் படுத்திருக்கும்
தாய் உள்ளம் கூட
நாளை நாட்டில்
நம் பிஞ்சுகள் வாழ
சமாதானம் மலர வேண்டும்
என்று தியானிக்கின்றதோ?

*க.கனிமொழியன்,*
*கலட்டி.*

### ஏழைத்தாய்!

ஒட்டிய உடலுடனும்
கசங்கிய கந்தலுடனும்
இரு கரம் கூப்பி நீ
இறைஞ்சுவது யாரை நோக்கி
இறைவனை நோக்கியா? அல்லது
இந் நாட்டின் தலைவர்களை நோக்கியா?

*R. சங்கீதா,*
*கொடிகாமம்.*

### துணை ஏது!

சொந்தங்கள் ஆயிரம் இருந்தென்ன
மரணத்தின் பின் கூட யாரும் வருவதில்லை
எனக்கோ!
எண்ணிரண்டு குழந்தைகள் பெற்றும்
எவையும் அருகிலில்லை – என்
மரணம் வரையாவது கூட வர.

*க. பூங்கோதை,*
*கொடிகாமம்.*

### தீர்த்திடுக!

அழுவதற்காகவே
அமைந்த
இவ் வாழ்வில்
கண்ணீர் தான் எதற்கு
தீர்த்திடுக!
அழுது!

இ.ஸ்வஸ்திகா,
யாழ்ப்பாணம்.

### அழைத்து விடு!

பாழ்பட்ட உலகம் இதில்
பழசாகிப் போய்விட்ட
இந்த யாக்கை படுக்கையில்
இருந்து பரிதவிக்கிறது இறைவா
இனி ஏன் எனக்கு வாழ்க்கை
அழைத்துவிடு என்னை.

*கை. சர்மிளா,*
*கொக்குவில்.*

### சேர்த்து விடு!

காலம் முழுவதும்
கஷ்டப்படுத்திக் கடைசியில்
கால்வயிறு கஞ்சி கூட
ஊற்றாத கயவர்களை
காணாமல் கண்மூட
கடவுளே என்னைக்
காலனிடம் கடுகவே சேர்த்துவிடு.

*நயினை முத்து.*

### எடுத்துக் கொள் இறைவா!

இனப்போரின் கொடுமையால்
அனைத்தையும் இழந்த நான் என்
உயிரை இன்னும் இழக்கவில்லை
அதனையும் எடுத்துக் கொள்
இறைவா!

*இ.ஜெயசுதா,*
*யாழ்.பல்கலைக்கழகம்.*

### யாருமே இல்லையா?

சொத்து சுகமில்லை
சொந்த பந்தமில்லை
ஆதரவற்று அநாதையாய்
பெரியவருக்கு
ஆறுதல் அளிக்க யாருமே
இல்லையா?

*K. சுரேகா,*
*கொக்குவில்.*

### இறை வேண்டுதல்!

கடவுளைக் காணும் வயதினிலே
பய பக்தியுடனே
இறை வேண்டுதல் ஒன்று
அடுத்த ஜென்மத்தில்
வேண்டாம்
மனிதப் பிறவி என்று.

*ஜோ.ஜெஸ்ரின்,*
*கொழும்புத்துறை.*



### வேண்டாம்!

கொள்ளிவைக்கக் கூடப் பிள்ளையில்லை
எள்ளிநகையாடுகிறது இவ்வுலகம்
இனியுமா இவ்வுலகில் வாழ வேண்டும்
வேண்டாம் இறைவா என்னை
உன்னிடம் சேர்த்துவிடு.

*சி.கைலாயநாதன்,*
*கொக்குவில்.*

### வாழ்க்கை!

பாட்டியே உனக்கு வயது போய் விட்டது
அதை நினைத்தா யோசித்துக் கொண்டிருக்கிறாய்
கவலைப்படாதே பாட்டியே
இறைவன் ஒருவன் இருக்கிறான்
அவன் உன்னைக் கைவிடமாட்டார்
உனது வாழ்க்கை தொடரும்.

*அ.கலைமகள்,*
*வெற்றிலைக்கேணி.*

### அருகில் இல்லை!

உன் பிள்ளைகள் வெளிநாடு செல்லும் போது - நீ
விமான நிலையம் வரை சென்று வழியனுப்பினாய் - ஆனால்
நீ இப்போ இந்த உலகையே விட்டு போகும் நிலையில் - உன்னை
வழியனுப்பி கொள்ளிவைக்க உன் பிள்ளைகள் - இன்று
உன் அருகில் இல்லாத காரணத்தால் - துணைக்கு
ஆண்டவனை அழைக்கின்றாயோ....?

*பரணிபாதுசன்,*
*நல்லூர்.*

### நிரந்தர சமாதானம்!

முதுமையின் சின்னமே
உயிர் பிரியும் போதும் – உன்
உறவுகளின் உயர்வுகளுக்காய்
உந்தன் இஷ்ட தெய்வத்தை
இறைஞ்சிக் கேட்பது எதுவோ
ஓ....... உன் நாட்டில்
நிரந்தர சமாதானம்
நிலை பெற வேண்டும் என்றோ?

*வி.மயூரதாஸ்,*
*வராத்துப்பளை.*

### முதுமை!

முதுமையின் இரகசியம்
இளமையறியுமா...?

N.தாஸ், நீர்வையூர்.

### கடவுள் துணை!

இலங்கையை விட்டுச் சென்ற
பாச மகன் இடைவழியில்
அன்பு மகள் கனடாவில்
நான் மட்டும் இங்கே
படுக்கையில்
பார்ப்பாரற்று.

*க. யாழினி,*
*கரவெட்டி.*

### அழைப்பு!

இறைவா உன்
அழைப்பை எதிர்பார்த்து
தினமும் காத்திருக்கின்றேன்
எப்போது அழைக்கின்றாய்?
அழைத்து விடு விரைவாய்.

*இ.சிவா,*
*யாழ்ப்பாணம்.*

### கடைசி நேரத்தில்!

கரம் கூப்பி - நீங்கள்
கடவுளை தியானிப்பது
கடைசி நேரத்தில் தானோ...?

*எஸ்.சந்தியா,*
*யாழ்.பல்கலைக்கழகம்.*

### வரம் கொடு!

என் வாழ்வில் வரும்
அந்த பொன்னாள்
என் இனத்தின் விடியல்
பிறக்கும் அந்தத் திருநாள்
அந்த ஒரு நாள் மட்டும்
உயிர் வாழ வரம் கொடு
இறைவா!

*ஜெ. வாணி,*
*சங்கத்தானை.*

### உள்ளம்!

உடல் தளர்ந்த வேளையிலும்
உள்ளம் தளரவில்லை.

*தமிழிதயம், தென் மட்டுவில்.*

### முடியவில்லை!

மானிடனே!
மரணிக்கும் வயதிலும் கூட
இவ்வுலகத்தில் வாழ்வதற்கு
இறைவனிடம் மன்றாடுகின்றாயா? – இல்லை
எதிரியின் அடிமை வாழ்விலிருந்து
விடுதலை பெற விடை கேட்கின்றாயா?
உன் நிலைமை எதுவென என்மனதால்
ஊகித்து உணர முடியவில்லை.

*த.தர்ஷன்,*
*உடுவில்.*

### இதுதான் இயற்கை!

பழம் ஒன்று பழுத்து விட்டால்
அது கீழே விழும்
முதுமைக்கு சாவு வந்து விட்டால்
அது இறைவனை நோக்கும்.


*இ.வசிகரன், அரியாலை.*

### நேயங்களை நேசித்து!

மனிதரை மதித்தது என் காலம்
நேயங்களை மறந்து
மனிதன் மனிதனை மிதிப்பது
இக் காலம்
இவ் இளஞ்சந்ததியின் வாழ்வில்
சமரசம் தோன்றிட வேண்டும்
கண்மூடு முன்னே அதை நான்
கண்டிட வேண்டும்.

*விசமன்,*
*கல்வியூர்.*

## மௌனத்தின் தேடல்கள் – 27



அன்பின் வாசகர்களே, உங்கள் எண்ணத்தில் தோன்றும் உன்னத வெளிப்பாடுகளை மிகச்சிறிய கவிதைகளாக்கி தபால் அட்டையில் சங்குநாதத்திற்கு அனுப்பிவையுங்கள்.

முடிவுத்திகதி :– 02.09.2002

அனுப்ப வேண்டிய முகவரி:– மௌனத்தின் தேடல்கள் – 27
சங்குநாதம்,
15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

# கவிதைக் கலசம்




## நீ மட்டும்..!

உயிரே!
இயற்கை கூட
தன்னை
மாற்றாத போது
நீ மட்டும்
மாறியது
எப்படி.......!

## தமிழ்ப் பண்பாடு காத்திடுவீர்





இங்கு காணமல் போனவன்
தமிழன் மட்டுமல்ல
அவன் பண்பாடும் தான்
நாகரிகத் தேரேறி நம்
தமிழருலாவரும் போது – அதில்
நசிபட்டுப் போகிறது நம் தமிழ்ப் பண்பாடு
புதுமைக்குள் புதுமையென்று புலம்புபவர்களால்
புண்ணாகிப் போகிறது தமிழரெம் பண்பாடு

ஐரோப்பிய வீதியெங்கும்
அரை மீற்றர் துணியோடலையலாம்
அங்கு மிங்குமாய் ஆடையைக் கிழித்து வீட்டு
அதுதான் ''பாஷன்'' என்று கூறலாம்
அருந்தமிழ்ப் பண்பாடு வளருமிங்கு
அவ் ஆடைகள் எதற்கு?

ஆகாது தமிழா! ஆகாது நின்செய்கை
ஆங்கில தேசம் ஏற்கும் வாழ்வை
ஆங்கில தேசத்தில் வைத்துக் கொள் – இது
தமிழர் தேசம் இங்கெதற்காக இவைகள்
பைந்தமிழ்ப் பண்பாடு மணக்கு மாடைகளைப்
பார்த்து நெடுங்கால மாச்சே!

தேசம் தீயில் வேகும் போது
வேஷம் என்ன போடுகின்றாய்
பண்பாட்டுச் சீரழிவு
ஓர் இனத்தின் அழிவன்றோ
பாரெங்கும் தமிழ் ஓங்கிடவே
தமிழ்ப் பண்பாடு காத்திடுவீரே!

அகியோபி,
வதிரி.

## தவித்திருக்கும்!

உன்னைப் பற்றிய
கனாக்களில்
ஓர் ஊஞ்சலைப்
பின்னிப் போட்டுக்
காத்திருக்கின்றேன்
நினைவு நதியின்
கரையோரம்....
உன் வரவுக்காக
ராகங்களை
அழுதேன்
நீ சட்டென்று
மறுத்திருந்தாலும்
பரவாயில்லை
ஊஞ்சலைக்
கலைத்திருப்பேன்
நானும்
கலைந்திருப்பேன்
ஆனால்
எதையோ
சொல்லத் துடிக்கும்
விழிகளை
ஒளித்துக் கொண்டு
ஏனிந்த மௌனராகம்.?

க.தர்மினி, கச்சேரி.

## சிரித்து வாழ வேண்டும்!



சகியே!
சிரிக்கச் சிரிக்க என்னுடன்
பேசினாய்.
சிரிப்பிற்கு அர்த்தம் புரியாத நான்
உன்னைக் காதலித்தேன்
இப்போ, சொல்கிறாய்!
'' சிரித்து வாழ வேண்டும்
பிறர் சிரிக்க வாழ்ந்திடாதே யென்று''

ராகுல்,
யாழ்ப்பாணம்.

## தா இறைவா...!

கல்மனம் உடைத்து
கனிவுள்ளம் படைக்க
உன் அருள் தா இறைவா!

பாவங்கள் அகற்றி
சாபங்கள் தீர
சக்தியைத் தா இறைவா!

அல்லும் பகலும்
அமைதிக்காய் ஏங்கும் எம்
உள்ளத்தைப் பார் இறைவா
நல் உள்ளங்கள் பிறக்க
நல்வாழ்வினைத் தொடங்க
நலிவுற்ற எம் மக்கள் வாழ
நிலையான அமைதியை – எம்
நாட்டிற்கு தா இறைவா.

அ.வசந்தன்

## உனக்குள் உள்ள உன்னை !





முயலாமையை முதுகேற்றியவனுக்குத் தான்
இயலாமை யென்பது இன்பமாயிருக்கும்
முடியாமைக்கு முயன்றவரை முடிவு கொடு
விடிகாலைக்கு இயன்ற வரை வழியை வீடு

முடியாதென்றவன் கண்ணுக்கெல்லாம்
சிறுகல்லுமவன் முன் மலையாய் தெரியும்
முன்னேறத் துடிக்கின்ற மனிதர்க்கெல்லாம்
பெருமலையும் சிறுதுரும்பாய்த் துலங்கும்

நாளை வருமென்பதும் தானாய்த்
கோழைகள் கொள்ளும் கொள்கை
வேளையீதுவென அதற்கு வேலை கொடுத்திட
நாளை தோளில் மாலைகள் சேரும்

நிந்தனை பற்றியே சிந்தனை யென்றால்
சிகரம் பற்றி சிரிப்பது எப்போ?வீதி வீதி என்பதிலே
விசுவாசங் கொண்டிருந்தால் முந்திச் சென்ற
தோல்விகளை தோற்கடிப்பதெப்போ?

என்னிடத்தி லெனக்குள்ளே ஒன்று மில்லை யென்ற
எண்ணத்தை நீக்கிடவே இல்லையென்பதில்லை
உனக்குள்ளே ஒளிந்துள்ள உன்னை நீயே யுசுப்பு
அடைபட்ட கதவுகளும் தன்னாலே திறக்கும்

ஜே.எம்.ரி.றொட்றிக்கோ,
கொக்குவில்.

## சிலுவைப் பா(ட்)டு

பூக்கள் நிறைந்த பூவனம்
- இருந்தும்
என் கண்கள் தரிசிப்பது
முட்களை மட்டுமே!
என் பாதம் ஸ்பரிசிப்பதும்
அவற்றையே
யேசுவின் முட்கிரீடம் போல
உன் பாரச்சுமைகளை
இறக்கி வைக்க முடியவில்லை ஓ...!
நான் சிலுவையில்
அறையப்பட்டிருக்கிறேன்
மனிதங்கள் சிலுவை சுமக்கும்
மனிதாபிமானங்கள் அறையப்படும்
மரணித்துப் போன மனங்களின்
மகத்தான [illegible]த்தில் ஓ...!
நான் சிலுவையில்
அறையப்பட்டிருக்கிறேன்
நியாயங்களை நிராகரிக்கும்
நீதிபதிகள்
நிமிர்ந்து நடக்கும் நியாயசாலைகள்
நிறைந்த
நிலவுலகில் நான் மட்டும்
உழுத்துப் போன
உண்மைகளை நம்பி ஓ......
நான் சிலுவையில்
அறையப்பட்டிருக்கிறேன்.





பூ.சாவித்திரி,
இரா.நுண்கலைப்பீடம்.

## வெண்புறாவே வா!

ஓ சமாதானமே!
நீ சமஸ்தானத்துக்கு வருவாயா?
இல்லை, சத்தமிட்டு விட்டு
சரிந்து மடிந்து விடுவாயா?
காத்திருப்புகளும் ஏமாற்றங்களும்
கதைகதையாய் காவியமாய்
கண்டு பழகிய வரலாற்றில்
நம்பிக்கையோடு ஒரு காத்திருப்பு
நம்பிக்கை நிறை வேறுமா?

சு.ராம்குமார்,
கரவெட்டி.

## கல்லறைக்குத் தான்...!



வாடி வீழ்ந்து விடுவோம்
என்று தெரிந்தும்
சில பூக்கள்
பூக்கின்றன
கல்லறைதான் முடிவு
என்று தெரிந்த பின்பும்
சில காதல்கள்
மலர்கின்றன.

செ.றமேஷ்,
கரவெட்டி.

## பல காரம்

பாரினில் உண்டு
பல காரம்!
பாவினில் வடிப்பேன்
சில காரம்!!

நாட்டினில் வழங்கும்
சட்ட விதிகளை
செற்படுத்திடவே
சட்டங்கள் மூலம்
தொடர்புடையவர்க்கு
வழங்கும் காரம்
அதிகாரம்

அதிகாரங்களைத்
தனதாக்கிக் கொண்டு
தன்னிச்சைப்படியே
செயற்பட முனைந்திட
உருவாகும் காரம்
சர்வாதிகாரம்!

எதனையும்
அதனுடன்
தொடர்புள்ளவரின்
ஒப்புதலின்றிச்
செய்யும் போதினில்
தோன்றும் காரம்
பலாத்காரம்!

எதனைச் செய்தாலும்
தொடர்புடையவரின்
ஒப்புதல் பெறும் காரம்
அங்கீகாரம்!

'நான்' என்னும்
முனைப்பினால்
வளரும் காரம்
அகங்காரம்!

- முருகு -

## நாம் நாமாக வாழ வேண்டும்

நாம் வேதனைப்பட்டபோது
சோதனை போட்டீர்கள்
விக்கி விரக்தியுற்ற போது
நளினம் செய்தீர்கள்
விம்மி வெடித்த போது
வார்த்தைகளைக் கொட்டினீர்கள்
நாம் நிம்மதி தேடினோம்
நீங்கள் செவ்வி கண்டீர்கள்
சந்நிதி நாடினோம்
சந்தேகம் கொண்டீர்கள்
சிரித்தோம்
ஏசினீர்கள்
இரசித்தோம்
குசுகுசுத்தீர்கள்
நடித்தோம்
நல்லதென்றீர்கள்
ஆனால்
நடிப்பதில் எமக்கு விருப்பமில்லை
எம்மை நாமாக இருக்க விடுங்கள்
நாம் நாமாக வாழ வேண்டும்.

அ.மீனா,
சாவகச்சேரி.

## வீரத்தாய்



இன்பப்
பொருளல்ல
~ பெண்கள்
தெய்வ சக்தியடா
புவியிலே பூமாதேவி
~ அவள்
அசைவினிலே பத்திர காளி

உற்பத்தி இயந்திர மென்று
~ அவளை
நினைக்கும் காளையரே
வேலிகள் பல தாண்டி
~ அவள்
வீரமுரசு ஒலிப்பது
கேட்கலையோ?...
பொறுமையின் சின்னமென்றோ
~ அவளை
சித்திரவதை செய்கின்றீர்
உலகாளும் சக்தியவள்
~ ஆதி
பராசக்தியவள்.

பூவைத்து தூப தீபமிட்டு
~ அவளை
வணங்கிடத் தேவையில்லை
உண்மைகள் உறவாட
~ அவள்
மனிதத்தை நேசிக்க
முடியலையோ?...

வாழ்வை வளம்படுத்த
எண்ணி ~ அவள்
வாழ்வை துன்பமாக்காதீர்
கற்பக தருவும் அவள்
~ உலகின்
வீரத் தாயுமவள்.

யாழவள்,
யாழ்.பல்கலைக்கழகம்.

## மன்னித்துக் கொள்...!





அக்கணமே என்னுள்
எல்லாமே சிதைந்து
நெருப்பாய்
தீய்ந்து போவதும்
உனக்குத் தெரியுமா?
எனது
நாவு
அள்ளிக் கொட்டிய
சுடு தணல்களால்
உனது
நெஞ்சு
வாழும் நினைவை
இழந்து வீட்டதாக
நீ வடித்த
கண்ணீருக்கு
என் அன்பே
ஏழுதரமல்ல
எழுபதுதரம்
என்னை
மன்னித்துக் கொள்.

ஒரு தாயைச்
சுற்றிச் சுற்றி
குறும்பு செய்யும்
குழந்தை போல்
நானும்
உன்னுடன்


அன்பே
உனக்கு
சினக்கிறதா?
நான்
ஒரு
பைத்தியக்காரன்
துன்புறுத்துவதும்
நினைத்து
துயருறுவதும்

ம.கொன்சன்,
உரும்பிராய்.

## உனக்குத் தெரியுமா?



நான்
விழி மூடும் போதெல்லாம்
மனதில் இருக்கும் - நீ
விழித்துக் கொள்வது
உனக்குத் தெரியுமா?
நீ என்னை
நினைக்க கூட
வேண்டாம்
ஆனால்
நான் வாழ்வதே
உன் நினைவுகளின்
நிழலில் தான்
என்பதாவது
உனக்குத் தெரியுமா?



J.செந்தூரன்

## வேண்டுதல்



என் கண்களில்
கலந்து
என் இதயத்தில்
புகுந்து
என்
நினைவுகளோடு
கரைந்து
என் உயிரோடு
உயிராகிவிட்டு,
இறுதியில்,
முகவரி கூடத்
தந்துவீடாமல்
சென்றுவிட்ட
என்னவன்,

இறைவனே,
எனது
வாழ்வினை
மிக
விரைவிலேயே
எடுத்துவிட்டு,
சொர்க்கத்திற்கு
என்னை
அனுப்பிவிடு,
ஏனெனில்,
எனக்குத்
தெரியாமலே

இல்லை, இல்லை
என் உயிர்
அங்கேதான்
இருக்கக் கூடும்.

பா.பிரியா,
இருபாலை.

## வெறுப்பு

என்னை வெறுத்தேன்
அம்மாவை வெறுத்தேன்
உடன் பிறப்புக்களை வெறுத்தேன்
உற்ற நட்பினையும் வெறுத்தேன்
அயலவரை வெறுத்தேன்
ஆண்டவரை வெறுத்தேன்
ஏன்?
நீ என்னை வெறுத்ததனால்.

K.தீபன்,
பருத்தித்துறை.

## பிரிவு

கரையும் நதியும்
கை கோர்த்து
நடக்கின்றன...
இடியும் மின்னலும்
ஒன்றாகத் தான்
பிறக்கின்றன...
ஆனாலும்

கரையை விட்டு
மின்னலும் பிரிந்து
செல்வது
போல
அன்பு கொண்ட
அனைவருமே
பிரிந்து செல்வது தான்
இயற்கையின் நியதி!

ச.அனுஷா,
நீர்வேலி.

# துன்பம் நேர்கையில் 00000


இராசையா இறந்து ஒரு மாதம் விரைவில் உருண்டோடியது. அவருடைய மகன் இளம் டாக்டர் ஜீவா. சுவரில் மாட்டியிருந்த பெற்றோரின் மாலையுடன் கூடிய உருவப்படங்களை கண் கொட்டது பார்த்துக் கொண்டிருந்தான். கண்கள் குளமாயின. தாய் கமலம் அடியும் உதையும் வாங்குவதற்கென்றே இவ்வுலகில் பிறப்பெடுத்த ஓர் ஜீவன். பின் தங்கையின் உருவப் படத்தைப் பார்த்தான். தந்தையின் வெறியாட்டத்துக்கு பலியான குழந்தை அது. ஜீவாவுக்கு அழுகையைக் கட்டுப்படுத்த முடியவில்லை. தன்னைப் போல எத்தனை ஜீவாக்கள் இவ்வாறு வேதனைப் படுகிறார்களோ? என்று எண்ணங்களைச் சுழலவிட்ட ஜீவாவின் சிந்தனை கடந்த கால வாழ்க்கையில் சென்று நின்று விட்டது.

**சிறுகதை**

நான்கு அங்கத்தவர்களைக் கொண்ட சிறிய ஏழைக் குடும்பம். தந்தை வேலைக்குப் போவார் ஆனால் வீட்டில் காசு கொடுப்பதில்லை. சில வேளைகளில் பட்டினி இருக்க வேண்டிய நிலை வரும். தாய் தான் சாப்பிடா விட்டாலும் பிள்ளைகளின் அரைவயிறாவது நிரப்பி விடுவாள். இராசையா குடித்து விட்டு இரவில் நேரம் கழிய வருவார். வந்ததும் வீட்டில் கலாட்டாவாக இருக்கும். கையில் கிடைப்பவை எல்லாம் நிலத்தில் உருளும். கமலத்திற்கு கண்மண் தெரியாமல் அடி. அவள் பாவம் வாயில்லாப் பூச்சி. அடியை வாங்கி வாங்கி ஏழு ஆண்டுகளாக அவளுக்கு பழகி விட்டது. ஜீவாவுக்கு அறிவு தெரிந்த நாள் முதல் தினமும் அந்த வேதனையை அனுபவித்து வந்தான். அவனுடைய தங்கை பாரதி அவனிலும் ஐந்து வயது இளையவள். தந்தை வீட்டினுள் வந்ததும் ஒரு மூலையில் ஒட்டிக் கொண்டு மலங்க மலங்க விழிப்பாள்.

ஜீவாவுக்கு ஆறுவயது நிரம்பியதும் அவனைப் பாடசாலையில் சேர்ப்பதற்காக கணவனிடம் கேட்ட கமலத்துக்கு கன்னத்தில் விழுந்தது ஓர் அடி. ''இதென்ன மனிசன், பிள்ளை படிப்பதற்கு கூட காசு தரமாட்டேன் குதே. நான் படிக்காததால் இப்போது அனுபவிக்கிறேன். என் பிள்ளைகளுக்கும் இந்நிலை ஏற் பட விடக் கூடாது. அவர்களைப் படிக்க வைக்க வேணும். என எண்ணி வீடுவீடாக சென்று வீட்டு வேலைகளைச் செய்து சிறிது பணம் சம்பாதிப்பாள். ஆனால் அப்பணம் ஜீவாவை பள்ளியில் சேர்த்து படிப்பிக்க போதுமானதாக இல்லை. ஏழை சிறுவர்களுக்கு பண உதவி செய்து வரும் பாதிரியார் அவளது எண்ணத்தில் தோன்றினார். உடனே அவரிடம் சென்று விடயத்தைக் கூற அவரும் பண உதவி செய்வதாக கூறி அவ்வாறே செய்தார்.

ஒரு நாள் மாலை, இராசையா தள்ளாடிபடி குடிசைக்கு வந்து சேர்ந்தார். வரும் போதே, ''ஏ...ய்!



கமலம்? உனக்கு அவ்வளவு திமிராடி? யாரோ ஒருத்தனிட்ட பல்லைக் காட்டி காசு வாங்கிறாயாமே?'' என்று கத்திக் கொண்டு போக ஜீவா பெருங் கோபத்துடன், ''அதைக் ,கேட்க நீங்க யாரு?'' என்று கேட்க ஜீவாவின் முதுகை கமலத்தின் கை பதம் பார்த்தது. இராசையாவின் நிலையோ வேறு. அங்கு தான் வைத்ததே சட்டம் என நினைத்திருந்த இராசையா குட்டிப்பயல் எதிர்த்து கதைத்ததும் ஆடிப் போய் விட்டார். அவரது கோபம் பன் மடங்கானது. மனைவியைப் பார்த்து, ''ஏண்டி நீ வாயை மூடிக் கொண்டு அவனை நல்லா கதைக்க பழக்கி வைத்திருக்கிறியோ?'' என்று கத்திக் கொண்டு கமலத்தின் தலை மயிரைப் பிடித்திழுத்து உதையையும் அடியையும் கொடுத்து விட்டுச் சென்றவர் மூன்று நாட்களாக வீட்டிற்கே வரவில்லை.

அன்று கமலம் பலத்த காயங்களுக்கு உள்ளாகியிருந்தாள். ஜீவா அழுதழுது தாயிடம், ''அம்மா. என்னால தானே உனக்கு இத்தனை வேதனையும். இனி நான் பாடசாலைக்கு போகவில்லை'' என்று கூற கமலம் ஜீவாவை அணைத்தபடி இல்லை தம்பி, நீங்க இருவரும் நல்லா படிக்க வேணும். கஷ்டப்பட்ட பிள்ளைகளுக்கு உதவ வேணும் அது தான் என்ட ஆசை. அதை நீங்க தான் நிறைவேற்ற வேணும்'' என்று கூற ஜீவாவின் மனம் தெளிவும் உறுதியும் பெற்றது.

பாடசாலையில் சக மாணவர்கள் ஜீவாவை 'குடிகாரனின் மகன்' என்று கேலி செய்வார்கள். அவன் அதைப் பொருட்படுத்தாது கல்வியிலேயே கண்ணாய் இருந்தான். வகுப்பில் முதல் நிலையில் வருவான். ஜீவா மூன்றாம் ஆண்டில் படித்துக் கொண்டிருந்த போதுதான் அந்த சம்பவங்கள் நடந்தன.

அன்று இராசையா அளவுக்கதிகமாக குடித்திருந்தார். வீட்டில் கிடந்த சாமான்களை எல்லாம் எடுத்து தாறுமாறாக வீசினார். அச்சத்தினால் நித்திரையால் விழித்தெழுந்த 'பாரதி அழ ஆரம்பித்தாள். ஆத்திரமடைந்த இராசையா கையில் கிடைத்ததை எடுத்து ''சனியனே! கத்தாதே வாயைமூடு'' என்று கத்தி அம்மூன்று வயது குழந்தையின் தலையில் ஒரு போடு போட்டார். பாரதி இருந்த இடத்திலேயே சுருண்டு விழுந்தாள். ''ஐயோ! பாரதீ...'' என்று கத்திக் கொண்டே கமலம் மூர்ச்சையானாள். ஜீவா அதிர்ச்சிக்குள்ளானான். தண்ணீரை எடுத்து தாய்க்கு தெளிக்க மயக்கம் தெளிந்த கமலம் பாரதியை உலுக்கிப் பார்த்து விட்டு அழலானாள். ஜீவா மௌனமாக சென்று தாயினருகில் இருந்து அவளைத் தேற்ற முயன்றான். பாரதியின் மரணச்சடங்கு முடிந்த பிறகும் தாய் பித்துப் பிடித்தவள் போல எங்கேயோ வெறித்துப் பார்த்துக் கொண்டு இருப்பதைக் காண ஜீவாவுக்கு அச்சமாக இருந்தது.

இரண்டொரு நாளின் பின் பாடசாலை செல்லத் தொடங்கினான். பள்ளியால் வீட்டுக்கு விரைந்த போது தன் குடிசையைச் சுற்றி அயலவர்கள் நிற்பதைக் கண்ட ஜீவா ஓட்டமும் நடையுமாக வந்த போது சிலர் அவனுக்கு தைரியம் சொன்னார்கள். எல்லோரையும் விலத்தி வீட்டினுள் ஓடினான். அங்கு ..... அவனுக்கு உலகமே சுற்றியது. நினைவு இழந்து விழுந்து விட்டான். சிறிய நேரத்தில் விழித்ததும் வெள்ளை சீலையால் மூடப்பட்டிருந்த தாயின் உடலை மீண்டும் மீண்டும் பார்த்தான். தன்னை அநாதையாக்கி சென்ற தாயின் உடல் மீது விழுந்து கதறி அழுதான். அக்காட்சியை கண்ட எல்லோரது கண்களிலும் கண்ணீர் பெருகியது. ''அம்மா நீயேன் என்னை தனியே விட்டிட்டு தங்கச்சிக்கு துணையாக போயிட்டியே நான் இனி யாரை ''அம்மா...'' என்றழைப்பேன்? இதுக்குத்தானா என்னை இன்று வலுக்கட்டயமாக பள்ளிக்கூடம் அனுப்பினாய்? என்னையும் கூட்டிப் போயிருக்கலாமே? அதற்கென்ன நானும் இப்போதே வருகிறேன்'' என கதறிக் கொண்டு கிணற்றை நோக்கி ஓடினான். இதனை கவனித்த சிலர் அவனைத் தடுத்து புத்திமதிகள் சொன்னார்கள். கரைதேட முடியாத வாழ்வின் வெறுமையில் கலங்கரை விளக்காக தாயின் வாக்குறுதி பிரகாசித்தது. இது வாழ்வின் திருப்பு முனையானது. பாதிரியாரின் உருவம் நினைவுக்கு வந்தது.

**வி.டர்மினி**

அவரை நாடினான். அவரும் மனமுவந்து தன்னுடனேயே வைத்திருக்க ஒப்புக் கொண்டார். பாதிரியாருடனேயே அவருக்கு ஒத்தாசையாக இருந்து கொண்டு பாடசாலைக்கு செல்வான். இறுதியில் பல்கலைக்கழகத்தில் மருத்துவ துறைக்கு தெரிவானான்.

ஒரு நாள் ஜீவா தெருவில் சென்ற போது யாரோ தன்னை அழைப்பதை கேட்டு சுற்றிலும் பார்த்தான். ஒருவர் தன்னை நோக்கி வருவதைக் கண்டான். அவனருகில் வந்தவர் ''ஜீவா உனக்கு என்னை தெரியவில்லையா. நான் தான் உன் அப்பா'' என்று கூறியதுமே ஜீவாவின் கண்களில் தீப்பொறி பறந்தது. ''அம்மாவையும் தங்கச்சியையும் கொன்று விட்டீர்கள். நான் தான் பாக்கி. அதையும் தீர்க்க தருணம் பார்க் கிறீரோ? ''என்று சீறியதற்கு ''இல்லை ஜீவா நான் இப்ப திருந்திட்டன். என்னை நம்பு'' என்று கெஞ்ச ''கண்கெட்ட பின் சூரிய நமஸ்காரம் தேவையில்லை. உம்மை நான் நம்பமாட்டேன்'' என்று கூறி கொண்டே ஜீவா தன் வழி சென்று விட்டான்.

சிறிது காலத்தில் இராசையாவின் ஈரல் பாதிக்கப் பட்டது. ஜீவா பயிற்சி பெறும் வைத்தியசாலையிலேயே அவரும் அனுமதிக்கப்பட்டார். பாதிரியாரின் வற்புறுத்தலின் பேரில் தந்தையை பார்த்து வர சம்மதித்தான். இருவரும் அங்கு சென்ற போது இராசையாவின் நிலை மோசமடைந்திருந்தது. ஜீவாவை கண்டதும் மகிழ்ச்சியுடன், ''இப்படி வாப்பா'' என்று கூப்பிட்டார். ஜீவா இறுகிய முகத்துடன் சற்று தூரத்திலேயே நின்றான். பாதிரியாரின் கண்ணசைவுக்கு மதிப்பு அளித்து அருகில் சென்ற ஜீவாவின் கையைப் பற்றினார். ஜீவா கையை சட்டென்று இழுத்துக் கொண்டான். இராசையா, ''தம்பி, என்னை மன்னிச்சிடப்பா. அந்த நாளில் வீட்டுக் கஷ்டமும் வேலைக்கு போறதால களைச்ச உடம்பின் கஷ்டமும் தெரியாமல் இருக்க குடிக்கத் தொடங்கினான். ஆனா மீள நினைச்சாலும் முடியல. குடிச்சிட்டு வந்து எல்லாரையும் தொல்லைப்படுத்தினன். பாரதி இறந்த பின் குடிப்பதில்லை எண்டு முடிவெடுத்தன். அதற்கிடையில் கமலமும் போயிட்டாள்.'' என்று அழுதார். தானே மீண்டும் பெருங்கஷ்டப்பட்டு தொடர்ந்தார். இதைக் கண்ட பாதிரியார், ''இப்ப என்ன அவசரம்? ஆறுதலாய் கதைப்பம்' என்று கூற அப்படியொரு சந்தர்ப்பம் இனி வராது. நான் சாக முன்னமே ஜீவாவோட கதைக்க விரும்புகிறேன். ஜீவா என்ன மன்னிச்சுடப்பா. மன்னிச்சிட்டன் என்று சொல்லப்பா'' என்று கேட்டுக் கொண்டிருக்கும் போதே அவரது உயிர் போய்விட்டது. இதனை அவதானித்த ஜீவா கையைப் பற்றி நாடித்துடிப்பை பார்த்தான். அது நின்று விட்டதை உணர்ந்து ஓடிச்சென்று பெரிய வைத்தியரிடம் அறிவித்தான். பாதிரியார் அவனிடம், ஜீவா உன் தந்தைக்கு நீ செய்ய வேண்டிய இறுதி கடமைகள் இருக்கின்றன'' என்று கூற இடைமறித்த ஜீவா, ''என் தாய் தங்கைக்கு கொள்ளி வைத்த கையால் இவனுக்கு கொள்ளி வைக்க மாட்டேன். அது மட்டும் என்னால முடியாது'' என்று பிடிவாதமாக மறுத்து விட்டான்.

தன் சுயநினைவே இல்லாமல் சிந்தனையில் ஆழ்ந்திருந்த ஜீவாவை பாதிரியாரின் குரல் நிஜ உலகிற்கு கொண்டு வந்தது. திடுக்கிட்டு எழுந்தான். பாதிரியாரும் ''என்ன ஜீவா? என்ன நடந்தது? அழுதாயா?'' என்று பரிவோடு வினாவ அவன் மீண்டும் கண் கலங்கினான். அவர் ஊகித்துக் கொண்டு ''மகனே! நான் இருக்கும் வரை நீ அநாதை இல்லை. தைரியமாக இரு. ஆண் பிள்ளை அழுகிற இலட்சணத்தைப் பார்'' என்று அன்போடு கடிந்து கொண்டார்.

பின் இருவரும் தாம் கட்ட ஆரம்பித்திருந்த அநாதை சிறுவர் இல்லத்தை பார்க்க புறப்பட்டனர். ஜீவாவுக்கு என்றுமில்லாத மன நிறைவு அன்று ஏற்பட்டது.

* * *

# சுமையான உறவுகள்

இரண்டு நாட்களாக மூர்த்தியின் தந்தை ஷண்முகம் மனம் நிம்மதி இன்றித் தவித்தார். தான் படும் துன்பங்களை எண்ணி எண்ணியே அவர் வருத்தமும் அதிகமாயின. நன்கு வயது போய் எழுந்து நடமாட உறுதியற்றவராக அவர் காணப்பட்டர். பிரிந்த சாய்மனைக் கதிரையில் சாய்ந்திருந்த ஷண்முகத்திற்கு வயதின் தளர்ச்சியினால் தாகம் நாவை வறட்ட புகைச்சல் வயிற்றைக் கிளற கொஞ்சம் தேனீர் குடித்தால் நன்றாக இருக்கும் என நினைத்தவர் தனது சங்கடத்தைத் தீர்க்க வேறு வழியில்லாமல் அறைக்குள் நின்ற பேர்த்தியை ''இஞ்சை வாடா வாணி'' என்றழைக்க ''என்ன கிழடு இதாலை பெரிய தொல்லையாப் போச்சு எப்ப பார்த்தாலும் அதை எடு இதை எடு என்றபடிதான். இப்ப என்னாலை வர முடியாது. நான் சட்டை அயன் பண்ணுறன்'' என்று அறைக்குள் நின்று சத்தம் போட்டாள் வாணி. அப்போது அவரின் மருமகள் மங்களம் அந்தப் பக்கமாக வர ''பிள்ளை கொஞ்சம் சுடுதண்ணி தாறியே நெஞ்செரிக்குது கண்ணையும் சாதுவா இருட்டுக் கட்டுது. இரண்டு நாளாக சோறும் சாப்பிடேல்லை'' என்று முழுமையாக கூறி முடிக்குமுன் ''ம்.. ம்.. தொடங்கி விட்டார். அறங்கொட்ட அதுதரேலை இதுதரேலை என்று. இனி உங்கடமோன் வாற நேரமாச்சு நான் பழஞ்சோறு தந்தனான். அதுதான் நெஞ்செரிக்குது என்று உங்கட பல்லவியைப் பாடி என் தலையிலை இடியேற விழுத்தாமல் இரு தேத் தண்ணி கொண்டு வாறேன்'' என்று பேசி விட்டு ''எல்லாத் தலையிடியும் சுமைகளும் எனக்குத்தானே என்று புறுபுறுத்தவாறு உள்ளே சென்று மறைந்தாள் மங்களம்.

எல்லாவிதத்திலும் அதிகாரம் காட்டும் அன்பில்லாத மருமகள், அலட்சியம் செய்யும் பேரப்பிள்ளைகள். மனைவியின் சொல்லுக்கு பெட்டிப்பாம்பாய் அடங்கி தலையாட்டும், தந்தை மேல் அக்கறையில்லாமல் திரியும் மகன் என அந்த வீட்டின் நடவடிக்கைகள் ஒன்றும் அவருக்கு புதிதல்ல. இருந்தாலும் ஷண்முகத்தின் கண்களில் கண்ணீர்த்துளிகள் பளிக்க மறைந்து விட்ட தனது மனைவி செல்லாச்சியின் நினைவலைகள் உத்தரவின்றி உட்புகுந்து கொண்டன.'' ம்.. அவள் இருந்தாள் இப்படியெல்லாம் நடக்குமா? அந்த நேரத்தில் அவள் எனக்கு ஒன்றென்றால் எப்படித்துடித்துப் போவாள். எனக்கு ஒன்றுக்கு ஆறு ஆண்பிள்ளைகள் இருந்தும் என்ன பிரயோசனம். அவர்களை வளர்க்க நானும் செல்லாச்சியும் கொஞ்சப்பாடே பட்டம். என்ர உழைப்போடு சேர்ந்து பாவம் சொல்லாச்சியும் நெருப்போடு நெருப்பாக தானும் வெந்து அப்பம் சுட்டு வீடு வீடாக வித்து அந்தப் பணத்தில் தான் கண்ட கனவை நனவாக்க அவள் பட்டபாடு எங்கை இவர்களுக்குப் புரியப் போகுது. அவள் நினைத்த மாதிரி எல்லாப் பிள்ளைகளையும் படிப்பிச்சு நல்ல உத்தியோகத்தில் அமர்த்தி விட்ட அந்தச் சீமாட்டிக்குக் கொள்ளி வைக்கக் கூட ஒரு பிள்ளை வந்தார்களா? அவர்களின் கொழும்பு வாழ்க்கை பெற்றவர்களை மறக்கும் அளவுக்கு மாற்றி விட்டது. என்றெண்ணி வேதனைப்பட்டு கண்ணீர் வடித்தவர் முன் தொப்பென்று தேனீர் கிண்ணத்தை வைத்தாள் மருமகள். மங்களம் ''ம்.. என்ன வேதாளம்' மாதிரி எந்த நேரமும் கண்ணீர் வடிப்பு. என்ர மனிசனின்ரை உழைப்பும் கையில் மடியில நிக்கு தேயில்லை. இப்ப ஏன்.. அழுகிறாய்? இப்ப என்ன சொல்லிப் போட்டேன் என்று சாலக் கண்ணீர் வடிக்கிறாய்'' என்ற மருமகளின் அதட்டலுக்கு ஷண்முகத்தால் ஈடு கொடுக்க முடியாமைக்கு காரணம் அவரின் முதுமையே. அவளின் அதட்டலுக்கு ஏதோ ஒன்றை கூறவந்தவர்'' இல்லை பிள்ளை கொழும்பில இருக்கிற பிள்ளைகளை நினைச்சன்'' என இழுத்தவாறு உண்மையை மறைக்கத் தெரியாது உண்மையை கூறி விடவே

''ஓ''! கொழும்பில இருக்கிற பிள்ளைகளை நினைச்சு பாசம் பொங்கிக் கொண்டு வந்திட்டுதோ. அவர்கள் உன்னை பாக்கிற கடுமையில கண்ணீர் வேறை வருகுதோ இவ்வளவு காலமாச்சு பெத்த தகப்பன் எண்டு வந்து பார்த்தார்களோ. ஒரு பெத்த பிதா இருக்கெண்டு காசை களஞ்சை அனுப்பியவையோ அல்லது சுகம் விசாரித்து ஒரு கடதாசி போடினமோ. எல்லாம் கடைத் தம்பி மூர்த்தி பார்ப்பான் என்று தாங்கள் தப்பிக் கொண்டு எங்கட தலையில உன்னை கட்டி விட்டுக் கிடக்கு. இந்த லட்சணத்தில் அவையள் மேல பாசம் கொட்டுதோ. கண்ணீர் வேறை வருகுதோ. எல்லாத்துக்கும் அவர் வரட்டும்'' என தலையை அசைத்து தனது புகைச்சல்களை எல்லாம் கொட்டித்தீர்த்தாள் மருமகள் மங்களம்.

இவ்வாறு ஒரு நாய்க்கு கொடுக்கும் மதிப்பைக் கூட ஷண்முகம் அவ்வீட்டில் பெற்றிருக்கவில்லை. அவரை ஒரு செல்லாக் காசாகவும் தங்களுக்கு உபத்திரவம் தரும் பொருளாகவும் பிள்ளைகளும், மருமகளும் மதித்தார்கள். மங்களத்தின் உள்ளத்தில் தனது மாமனாரை எப்படியாயினும் வெளியேற்ற வேண்டும் என்ற எண்ணமே மேலோங்கி நின்றது. மாலை நேரமாகியது மூர்த்தியும் வீடு வந்து சேர்ந்தான். மங்களம் மூர்த்தியுடன் பேசத் தொடங்கினாள். ''இஞ்சேருங்கோப்பா... எங்கட மூத்தவனும் மெடிசின் படிக்கிறான். எங்கட பிள்ளை கௌரியும் சினேகிதப் பிள்ளைகளை வீட்டுக்கு கூட்டி வர முடியாமல் இருக்கு என்று அழுகுதுகள்'' என்று சொல்லி முடிக்க முன் ஒன்றும் விளங்ககாதவனாய் முந்தினான் மூர்த்தி ''என்னப்பா... சொல்லுறீர் ..என்றவனைத் தொடர்ந்து மங்களம் தொடர்ந்தாள். ''அதுதானப்பா.. இவர் மாமாவின்ர மலசலங்கள் வீட்டில் ஒரே மணமாகக் கிடக்கு. இனி உந்த மனிசன் ஓரமாக ஒதுங்கிப் போய் படுக்கச் சொன்னாலும் கேட்காது. முன்னுக்கு முன்னுக்கு வந்திருந்து கொண்டு முத்தமெல்லாம் துப்பிக் கொண்டிருக்கிறார். இந்த நிலையில் எங்கட பிள்ளைகளின்ரை கௌரவம் என்ன ஆகும். என்று யோசித்துப் பாருங்கோவன்'' ''சரியடியப்பா.. அதுக்கு இப்ப என்ன செய்யிறது'' ''அதுதானப்பா முதியோர் இல்லத்தில் கொண்டு போய் விடுவம். கிழமைக்கு

**சி.சுமதி**

இரண்டு தடவை போய்ப் பாப்பம்'' என்ற மங்களத்தின் திட்டத்திற்கு தலையாட்டிப் பொம்மையாய் தலையசைத் தான் மூர்த்தி

வாழ்க்கையில் கஷ்டப்பட்டு முன்னுக்கு வந்து பிள்ளைகளையும் சிறப்பாக வளர்த்து நல்ல நிலைக்கு கொண்டு வந்த ஷண்முகத்திற்கு இப்படியான ஒரு நிலை ஏற்படுமென்று அவர் கனவிலும் நினைக்கவில்லை. இப்படி ஆறு ஆண்களைப் பெற்ற நேரம் ஒருபெண் பிளளையைப் பெற்றிருந்தால் அந்த நிழலில் ஆறியிருப்பேன் என அவரின் மனம் அங்கலாய்க்க மனச்சுமையோடு பெருமூச்சுடன் வயோதிபர் இல்லம் செல்ல ஆயத்தமானார் ஷண்முகம்.





## குழந்தைகளை

*(சென்ற வாரத் தொடர்ச்சி)*

*பசிக்கும் போது சாப்பிடட்டும்*

நாம் சாப்பிடும் நேரங்களில் குழந்தைகளும் சாப்பிட வேண்டும் என்று நினைப்பதால் தான் நாம் அவர்களை வற்புறுத்துகிறோம். பசித்தால் அதைத் தாங்கிக் கொண்டு எந்தக் குழந்தையும் சாப்பிடாமல் இருக்காது! நம் வற்புறுத்தல் அவர்களுக்கு சாப்பிடும் பழக்கத்தைவிட உணவை வெறுக்கும் பழக்கத்தையே உண்டாக்கும். இதைத் தவிர்க்க குழந்தைகள்





### சாப்பிட வைப்பது எப்படி...?

விரும்பிக் கேட்கும் போது உணவு கொடுத்தால் அவர்களுக்கு உணவைக் கண்டால் ஓட வேண்டும் என்ற நினைப்பு மாறிவிடும்.

*ஷ்ஷ்ஷ் !!தெரியாமலே போகட்டும்*

பல சமயங்களில் சத்தான உணவு வகைகள் குழந்தைகளுக்குப் பிடிக்காமல் போகலாம். அதற்காக அவற்றை ஒதுக்கிவிட வேண்டாம். மிகச் சிறிய துண்டுகளாக நறுக்கி / துருவி அல்லது நன்றாக அரைத்து / மசித்து அவர்களுக்குப் பிடித்த உணவுடன் கலந்துவிடலாம். இவற்றைக் குறைவான அள்வில் சேர்ப்பது நல்லது.

மேலே உள்ள குறிப்புகளை பின்பற்றினால் ஒரே நாளில் அல்லது வாரத்தில் குழந்தைகள் மாறிவிடுவார்கள் என்று எண்ண வேண்டாம். தொடர்ந்து பின்பற்றுங்கள். ஒரு மாதத்தில் நீங்களே மாற்றத்தைப் பார்க்கலாம்.

## அவல் பாயாசம்

தேவையான பொருட்கள்

| | |
|---|---|
| அவல் | 35 கிராம் |
| சீனி | 200 கிராம் |
| பால் | 1 கப் |
| முந்திரி | 25 கிராம் |
| ஏலக்காய் | 7 |



செய்முறை

- நெய்யை விட்டு, அவலை சிவக்க வறுத்து எடுத்துக் கொள்ளவும்.
- அரைலீட்டர் நீரில் அவலைப் போட்டு, நன்றாக வேக வைக்கவும்.
- அவல் நன்கு வெந்த பின், சீனியைப் போட்டு நன்றாக கரைய விடவும்.
- சீனி கரைந்து சேர்ந்த பின், அடுப்பிலிருந்து இறக்கிப் பாலை சேர்க்கவும். ஏலக்காய், போட்டுக் கிளறி விடவும்.


## அலுவலகத்தில் தேவை உறுதி

அடக்கம், அமைதி, பொறு மை போன்ற குணங்களை காலங் காலமாக நம் முன்னோர்கள் பெண்களின் மனதில் வேரூன்றச் செய்துள்ளார்கள். அடங்கிப்போவது என்பது பெண்களுக்கே உரிய ஒரு குணம் என்று எண்ணப்படுகிறது. இந்த நவீன யுகத்தில் ஆண்கள் மட்டுமே செய்ய முடியும் என்று எண்ணப்பட்ட பல சவாலான தொழில் நுணுக்கமிக்க வேலைகளை இன்று பெண்களும் ஆண்களோடு தோளோடு தோள் சேர்ந்து செய்ய ஆரம்பித்து விட்ட நிலையில், பெண்கள் தங்கள் உரிமைகளை நிலை நாட்டுவதில் உறுதியாக இருப்பதே இன்றைய காலத்தின் கட்டாயமாகிவிட்டது.

உறுதியாக இருப்பது என்பது சண்டை போடுவது அல்ல. ஆனால் பல சமயங்களில் இந்த இரு வேறு வார்த்தைகளுக்கும் சரியான அர்த்தம் தெரியாததால் பலர் நீங்கள் உறுதியாகப் பேசும் போதும் உங்களை சண்டைக்காரர் என்றும் கூறலாம்.

உறுதியாகப் பேசும் போது நீங்கள் நேர்மையானவர் உங்கள் உரிமையை நிலை நாட்ட விரும்புவர் என்பதையும் அதே சமயம் மற்றவர்களின் உரிமையை நீங்கள் பறிக்க முயற்சிக்கவில்லை என்பதையும் உங்கள் பேச்சு உணர்த்த வேண்டும்.


ஏன் நாம் உறுதியாக இருக்க வேண்டும்? மற்றவர்கள் சொல்வதை எல்லாம் அப்படியே ஏற்றுக் கொள்ளும் பலரைப் போல் நாமும் நடந்து கொண்டால், நாம் பலராலும் விரும்பப்படுபவராக இருக்கலாம். அது எளிதானதும் கூட. "உறுதியாக இருப்பது என்பது எதிலும் உங்களின் தனிப்பட்ட நம்பிக்கையை வெளிப்படுத்துவதாகும். நீங்கள் உறுதியாக இருக்கவில்லை என்றால் உங்களுக்குக் கிடைக்க வேண்டிய பல வாய்ப்பு கள் உங்களுக்கு கிடைக்காமல் போகலாம். மற்றவர்கள் உங்களை எளிதாகவும் சாதாரணமாகவும் எடுத்துக் கொள்ளலாம். நீங்கள் ஏதாவது ஒரு பிரச்சினையில் இருந்தால், நீங்கள் உறுதியாக இருந்தால் மட்டுமே மற்றவரின் கவனத்தை உங்களால் ஈர்க்க முடியும்."



பெரும்பாலான நேரங்களில் நாம் உறுதியாக இருக்கத் தயங்குகிறோம். காரணம் அதிகாரி வருத்தப்படுவார் அல்லது தொழில் பிரச்சினைகள் ஏற்படும் என்று பயப்படுகிறோம். ஆனால் உண்மை என்னவென்றால், நீங்கள் உறுதி யாக இருப்பதன் மூலம் உங்கள் அதிகாரிக்கு உதவுகிறீர்கள். மற்றவர்களும் உங்கள் பிரச் சினை என்ன உங்கள் எதிர்பார்ப் புகள் என்ன என்பதை அறி[illegible]து கொள்ள உதவுகிறீர்கள். கடைசி யில், நீங்கள் பணிபுரியும் நிறுவனத்தின் நன்மைக்காகவும், சில விஷயங்கள் சரியான முறையில் அமைவதற்கும் நீங்கள் உறுதியாக இருப்பது அவசியமாகிறது. மேலும், உங்களுக்கு மகிழ்ச்சியை தருவதுடன் உங்களை மற்றவர் சரியாகப் புரிந்து கொள்ளவும் உதவுகிறது.

*K. சுபேதா.*

## திருடர்கள் தொல்லையா...?



வீட்டில் இருக்கும் பொழுதோ, வெளியே போகும் பொழுதோ வீட்டில் உள்ள பொருட்கள் திருட்டுப் போகாமல் எப்படிக் காப்பாற்றுவது என்பது நம் மனதில் ஒரு பெரிய கேள்விக்குறியாக உள்ளது. வீட்டைத் திருடர்களிடமிருந்து காக்க ஒரே வழி தான் உள்ளது. அது நாம் சாமர்த்தியமாக இருப்பது தான். பணம், நகை, பத்திரங்கள் போன்ற விலை உயர்ந்த பொருட் களை வீட்டில் வைப்பதைத் தவிர்த்து வங்கி போன்ற பத்திரமான இடத்தில் வைப்பது நல்லது.

டி.வி. நகை என்று எது வாங்கினாலும் அதை அக்கம் பக்கத்தில் அனைவரிடமும் கூறிப் பெருமைப்படுவதை தவிர்ப்பது நல்லது.

கதவுகளையும், ஜன்னல்களையும் சரியான நிலையில் வைக்கவும். உடைந்த கண்ணாடிகளையும், பழுதான கதவுகளையும் உடனடியாக மாற்றவும்.

புதிய வீட்டிற்கு மாறியவுடன் பூட்டுகளை மாற்றவும். வீட்டில் தனியாக இருக்கும் போது கதவுகளைப் பூட்டி வைக்கவும்.

*வீட்டிலிருக்கும் போது கவனிக்க வேண்டியவை :*

யார் வெளியே கதவைத் தட்டுகிறார்கள் என்பதை உறுதி செய்து கொண்ட பின் கதவைத் திறக்கவும்.

வீட்டில் உள்ள பொருட்களை பழுது பார்க்க வருபவர்கள் மற்றும் இதர பொருட்களை விற்க வருபவர்களின் பெயர், நிறுவனம் ஆகியவை சரி பார்த்துக் கொண்டு வீட்டின் உள்ளே விடவும்.

தொலைபேசியில் முன் பின் தெரியாதவர்களிடம் வீட்டில் உள்ளவர்களைப் பற்றிய தகவல்களை கூறுவதைத் தவிர்க்கவும்.

வெளியூர் செல்ல வேண்டும் என்றாலே அனைவருக்கும் ஏற்படும் பொதுவான பயம் திருட்டு என்பதுதான். இந்தப்பயத்தை விரட்ட சரியான வீட்டுப் பாதுகாப்பு முறைகளால் தான் முடியும்.

*வீட்டை விட்டு செல்லும் போது*

ஒன்று அல்லது இரண்டு விளக்குகளை எரிய விட்டு செல்லவும். வீட்டில் யாரையும் தங்க வைக்க முடியவில்லை என்றால் திருடர்களிடமிருந்து வீட்டிற்கு பாதுகாப்புத் தரும் எச்சரிக்கை மணியை பொருத்துவது நல்லது.

எல்லாவற்றையும் விட முக்கியமானது உங்கள் அக்கம் பக்கத்தாரோடு நட்போடு இருப்பதுதான். அவர்கள் தான் உங்களுக்கு எந்தசமயத்திலும் உடனடியாக உதவ க்கூடியவர்கள்.

## அழகு என்றால் என்ன...?

அழகு என்பது பார்ப்பவர் கண்களில் உள்ளது என்பது எவ்வளவு உண்மையோ அதே போல் நம் மனதிலும் உள்ளது. நம்மை நாம் அழகானவராக எண்ணுவது தான் அழகாக தோன்றுவதின் முதல் படி. அதிக எடை இதற்கு முக்கியமான எதிரியாகும். எங்கு பார்த்தாலும் எடை குறைப்பு பற்றிய பேச்சு, விளம்பரங்கள், டீ.வியும், திரைப் படங்களும் தினமும் உயரமான, எடை குறைவுள்ள மாடல்களையும், நடிகர்களையும் பார்த்துப் பார்த்து, ஒல்லியாக இருப்பதே அழகு என்ற எண்ணம் நம் மனதில் வேரூன்றி விட்டது.





முதலில் உங்கள் உடலை நேசிக்கக் கற்றுக் கொள்ளுங்கள். ஆரோக்கியமான உணவு, ஓய்வு, தூக்கம், உடல் பயிற்சி இவைகளால் உங்கள் உடல் நலன் கூடும். அத்தோடு உங்கள் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும்.

கீழே உள்ள குறிப்புகளை பின்பற்றி ஆரோக்கியமான, அழகாக உள்ள உணர்வை, பெறலாம்.

*உடலின் பராமரிப்பு:–* நமது உடல் கூறு அதிசயமான உள்ளங்களை உள்ளடக்கியது. இதை நல்ல முறையில், பேணிக் காப்பது நம் கடமையாகும்.

*உடலுக்கு சலுகைகள்:–* உடலுக்கு அவ்வப் போது சலுகைகள் அவசியம். மஸ்ஸாஜ் செய்து கொள்வது, புதிய உடை வாங்குவது இது போன்ற சலுகைகளில் உங்களுக்கு தன்னம்பிக்கையும், உங்கள் உடலைப் பற்றிய நல்ல உணர்வும் ஏற்படும்.

*உங்கள் தேவை:–* உங்களுக்கு வாழ்வில் எது தேவை என்று முடிவெடுத்துக் கொள்ளுங்கள். மேற்கத்திய நாடுகளில் பெண்கள் தங்கள் அழகையும், உடலையும் பாதுகாப்பதில் தான் அதிகமான நேரத்தை செலவிடுகின்றனர்.

*உங்கள் பழக்கங்கள்:–* கண்ணாடி முன் நின்று 100 முறை உங்கள் மூக்கைப் பார்ப்பதற்கு பதிலாக வேறு வேலைகளில் கவனத்தை செலுத்தவும். உங்கள் மூக்கு மட்டுமே நீங்கள் என்ற எண்ணத்தை முதலில் விடவும்.

(தொடரும்....)

# மரண விளையாட்டு

## தொடர்கதை

## அங்கம் 23

## மாயவன்

பின்னர் வரிசையாக ஒவ்வொருவராக கயிற்றில் சறுக்கினார்கள். பொறிகளைத் தாண்டி போய் குதித்தார்கள். தொடர்ந்து நடக்க ஆரம்பித்தார்கள். காடு மெல்ல மெல்ல குறைய ஆரம்பித்தது. திடீரென்று எட்வேட் கத்தினான். ''அரவிந்த் கண்ணி வெடியின் மேல் கால் வைத்து விட்டேன்.க்குயிக் எல்லோரும் விலகிப் போங்கள். அருகில் நின்றால் காயப்பட்டு விடுவீர்கள்''


அரவிந்த், ''எட்வேட் ரிலாக்ஸ் அவசரப்படாதே அப்படியே அசையாமல் நில்'' என்று கூறியவன் தொடர்ந்தும் எட்வேட்டை நெருங்கி அவனின் தோளில் உள்ள கூடாரத் துணி, கைகளில் மாட்டியிருந்த நைலோன் கயிறு சுருள், மற்றும் கன்களும், கத்திகள், தோட்டா பெல்ற்றுகள், கைக் குண்டுகள் எல்லாவற்றையும் கழற்றி மற்றவர்களிடம் கொடுத்து விட்டு கயிற்றினை எடுத்து மரத்தின் மீது எறிந்து கப்பிபோல் போட்டு ஒரு முனையை அர்ஜுன், விஜய் ஆகியோரிடம் கொடுத்து விட்டு மறு முனையை எடுத்து எட்வேட்டைக் குண்டுக் கட்டாகக் காட்டினான். 'அர்ஜுன் நான் இவன் பூட்சின் அடிப்பாகத்தைக் கத்தியால் வெட்டுகிறேன். ரம்யா இங்கே வா. நான் பூட்ஸை வெட்டும் போது நீ இந்தக் கல்லை மெல்ல மெல்ல நகர்த்திக் கண்ணி வெடியின் மேல் பொருத்தியுள்ள பூட்ஸின் பாகத்தின் மீது கொண்டு வா. நான் ரெடி என்றதும் அர்ஜுன், விஜய் நீங்கள் இருவரும் கயிற்றை இழுங்கள். ரம்யா நீ கல்லை நகர்த்தி விட்டுப் பாய்ந்து குப்புறப் படுத்து விடு'' என்றான்.

அரவிந்த் தன் கையில் இருந்த கத்தியை கூர் பார்த்தான். ரம்யா தன் தோளில் இருந்த பெட்டிகளையும் கைகளில் இருந்த கன்கள், கத்திகளைப் ப்ரியாவிடம் கொடுத்து விட்டு எட்வேட்டை நோக்கி வந்தாள்.

அரவிந்த் மண்டியிட்டு அமர்ந்து எட்வேட்டின் பூட்ஸின் அடிப்பாகத்தை மெல்ல மெல்ல வெட்ட ஆரம்பித்தான். எட்வேட்டோ உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு நின்றான். அரவிந்த் பூட்ஸின் அடிப்பாகத்தை வெட்ட வெட்ட ரம்யா அருகிலிருந்த கல்லை மெல்ல மெல்ல நகர்த்திக் கொண்டேயிருந்தாள். அர்ஜுன், விஜய் இருவரும் கயிற்றை இழுப்பதற்குத் தயார்ராக இருந்தனர். ப்ரியா உட்பட மீதிப் பேர் நடப்பவற்றை மிரட்சியாய் வேடிக்கை பார்ப்பது போல பார்த்து கொண்டிருந்தனர்.

பூட்ஸின் முக்கால்வாசியளவை அறுத்து முடித்த அரவிந்த் 'உம் எல்லோரும் ரெடியாகுங்கள்' என எல்லோரையும் உஷார் படுத்தி விட்டு மீதிப் பகுதியை அறுக்கும் வேகத்திற்கு அமைந்தாற் போல் ரம்யா கல்லை நகர்த்திக் கொண்டோயிருந்தாள். அரவிந்த் பூட்ஸை அறுத்து முடித்தமை, ரம்யா கல்லை நகர்த்தி வெட்டப்பட்ட பூட்ஸினை ஆக்கிரமிக்கச் செய்தமை, விஜய், அர்ஜுன் கயிற்றை இழுத்தமையால் எட்வேட் மேலே சென்றமை, அரவிந்த், ரம்யா இருவரும் பாய்ந்து குப்புறப்படுத்தமை போன்றன ஒரே கணப பொழுதில் நடந்து முடிந்த அந்தக் கணப்பொழு திலேயே 'டமார்' என்ற காதைச் செவிடாக்கும் சப்தத்துடன் கண்ணிவெடி வெடித்துக் கல்லானது சிறிய சிறிய துகள்களாக மாறி கல்மாரி பொழிந்தமையும் நடந்தது.

சிறிது நேரத்தின் பின்னர் கயிற்றை மெல்ல மெல்ல தளர்த்த எட்வேட் கீழே இறங்கினான். இறங்கியவனின் முகத்தில் அச்சம், படபடப்பு, ஆறுதல், தன்னைக் காப்பாற்றிய நன்றியுணர்வு ஆகியன ஒருங்கே சங்கமித்துப் படர்ந்திருந்தன. வியர்வை ஆறாய்



ஓடியது. ''எட்வேட் இனிப் பயமில்லை உற்சாகமாயிரு'' என்ற அரவிந்தின் குரல் கேட்டு இவ்வுலகிற்கு வந்தவன் சற்று உற்சாகத்துடன் தள தளத்த குரலில் ''தாங்யூ அரவிந்த் தாங்யூ வெரி மச்'' என்று நன்றிப் பெருக்குடன் கூறி முடிக்கவும். ''எட்வேட் இதற்கெல்லாம் போய் தாங்ஸ் சொல்லிக் கொண்டிருந்தால் எப்படி இதனைப் போல் இன்னும் எவ்வளவு ஆபத்துக்கள் காத்திருக்கின்றனவோ தெரியாது. அவற்றில் என்னென்ன விளைவுகள் ஏற்படும் என்றும் தெரியாது'' என்று கூறியவன் தொடர்ந்தும் நேரத்தை வீணாக்க விரும்பாமல் 'உம் இன்னமும் சற்று நேரம் ஓய்வெடுத்து எம்மை மீள ஒழுங்கமைத்துக் கொண்டு புறப்படுவோம்'' என்றவாறு அருகில் தாழ்ந்து படர்ந்திருந்த மரக்கிளையின் மேல் அமர்ந்தான். மதிய நேரமாதலால் இந்நேரத்தைஉணவு உண்ணப் பயன்படுத்திக் கொண்டார்கள். எல்லோரும் வட்டமாக அமர்ந்து உணவுண்டு கொண்டு சந்தோஷமாகச் சம்பாஷித்துக் கொண்டிருந்தனர்

* * *

ராம்தாஸின் ஆயுதத்தளம். மெத்து மெத்துக் குஷனில் ராம்தாஸ் அவனைச் சூழ சில முக்கிய புள்ளிகள் கைகளைப் பின்புறமாகக் கட்டியபடி நின்று கொண்டிருந்தார்கள். அரண்மனை ..... பரந்து வியாபித்திருந்தது. அந்த மாளிகையின் மேற்பகுதி பாழடைந்திருப்பதைப் போல் தெரிகிறது. இம்மாளிகை தான் ராம்தாஸின் ஆயுதத்தளம் என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை. மயான அமைதி நிலவிய அம் மண்டபத்தில் அம்மௌனத்தைக் கிழித்துக் கொண்டு ராம்தாஸின் கரகரத்த குரல் வெளிப்பட்டது. எமக்கு மன்னரிடமிருந்து தகவல் வந்து 24 மணித்தியாலத்திற்கு மேலாகி விட்டது. ஆனால் அந்த டிடெக்டிவ் நாயையும் அவன் சகாக்களையும் இன்னும் காணவில்லை. எங்குதான் போய்த் தொலைந்திருப்பானோ தெரியாது. நீங்கள் ஒரு இடமும் விடாமல் நன்றாகத் தேடினீர்களா?

''ஆம் தலைவரே காட்டுப்புறத்தையும் அதற்கப்பால் உள்ள மலைப்பகுதியையும் அக்கு அக்காகஅலசி விட்டோம். ஒரே நேரத்தில்தரை வழியாகவும், வான் வழியாகவும் தேடுதல் வேட்டையைநடத்தி விட்டோம். அவர்களைக் காணவில்லை. அவர்கள் வந்ததற்கான அடையாளங்கள் எவையும் தென்படக்கூட இல்லை. என்றான் ஒரு தீவிரவாதி.

ராம்தாஸ் சற்று நேரம் யோசித்து விட்டு எலக்ரிக்சொக் ஏற்பட்டது போல் உஷாராகியபடி ''நேற்று அல்லது நேற்று முன் தினம் விமானம் அல்லது ஹெலிகொப்டர்'' ஏதாவது சென்றதை ராடரில் அவதானித்தீர்களா?

சிறிது நேரம் அவர்களுடைய மௌனம் நிலவியைத் தொடர்ந்து ஒரு தீவிரவாதி ''எஸ் பாஸ் நேற்று அதிகாலை இரண்டு மணியளவில் ஒரு விமானம் போனதை ராடரில் பார்த்தேன்'' என்றதுதான் தாமதம் அனைவரினது விழிகளும் அவன் மேல் குவிந்தன. எப்பக்கம் நோக்கி அவ் விமானம் சென்றது?'' என்றான் ராம்தாஸ்.

''சரியாகத் தெரியவில்லை. பெரும்பாலும் பாகிஸ்தான் பக்கமாக இருக்கலாம்'' என்றவன் அதே தீவிரவாதி. ''எவ்வளவு நேரத்தில் அவ் விமானம் திரும்பி வந்தது என்று தெரியுமா?

''சுமார் 45 நிமிடமளவில் திரும்பி வந்திருக்கும்'' அந்த டிடெக்டிவ் நாய் எம்மையெல்லாம் நன்றாக ஏமாற்றி விட்டான். நாம் தான் அவனை இங்கு முதலில் எதிர்பார்த்து வரவேற்புடன் காத்திருந்தோம். ஆனால் அவனோ எம் தலைவரின் அரண்மனையை முதலில் தகர்க்கப் போய்க் கொண்டிருக்கிறான் போலவிருக்கிறது'' என்ற ஆக்ரோஷமான குரலுடன் கத்தியவாறு எழுந்தான் ராம்தாஸ்.

* * *

அரவிந்த் மலையிலிருந்து இறங்கும் போது கண்களைக் குறுகிப் பார்த்தான். ஓரிடத்தில் இரு காவலாளிகள் காவலுக்கு நிற்பது தெரிந்தது. இடுப்பில் இருந்து கிரீஸ் எனும் மலேசியக் கத்தியை உருவினான். மானைப் பிடிக்கப் பதுங்கும் புலியாய்ப் பதுங்கிப் பதுங்கி ஒவ்வொரு பாறையாக இறங்கினான்.

ஹொய்ய் எனக் கூவி முதலாமவனின் கழுத்தில் கத்தியை வீசினான். வீசிய விநாடி மரிக்கும் முன் தலை துண்டிக்கப்பட்டு வீழ்ந்தது. இளநீர் செதுக்கலில் நீர் முகத்தில் பீய்ச்சியடிப்பது போல் இரத்தம் அரவிந்த் மேல் பாய்ந்தது.

தலையில்லாத உடலை எட்டி உதைத்து தாக்கவரும் இரண்டாமவனின் நடு நெஞ்சில் ம்ஹக்கும் முழுதாய்செருகினான். கத்தியை.... ஹை என வாங்கி வாய் திறந்து பயங்கரமாய் ஒரு பார்வை பார்த்தவாறு சரிந்தான். தொடர்ந்தும் இறங்கியவர்கள் தரைப்பகுதியை அடைந்தார்கள். தூரத்தே உற்றுப் பார்த்தவன் அதிர்ந்தான்.

மண் மூட்டைகளின் பின் பதுங்கியிருந்த தீவிரவாதிகள் மிஷன்கன்களுடன் சாத்தான்களாய் எழுந்தவர்களின் கைகளிலிருந்த மிஷின்கன்கள் தோட்டாக்களைக் கக்கின. ட்ரட், ட்ரட், ட்ரட், ட்ரட் என ஏழெட்டு மிஷின்கன்கள் இடைவிடாது இயங்க நால்வரும் விலகி விலகிச் சிதறினர். ரம்யா தோளிலிருந்து வில்லை எடுத்து அம்பில் வெடி குண்டைப் பொருத்தி அதனை வில்லில் பொருத்தி மிஷின்கன்கள் மூலம் சுட்ட வண்ணம் இருந்தவர்களை நோக்கி அம்பைச் செலுத்தினாள்.

ஆயிரம் டெசிபல் சத்தத்துடன், வர்ண தீபவொளி அவ்விடத்தில் தோன்றி ஒருவர் மீதியில்லாமல் எண்மரும் சிதறிப் பலியாகினர்.

அரவிந்த்தினது திசைக்கு எதிர்த் திசையில் அர்ஜுன் முன்னேறினான். சிகிரெட், 75 வகை கன்னை நீட்டியபடி பதுங்கிப் பதுங்கி முன்னேறினான். இவனைத் தொடர்ந்து ப்ரியா, ரஞ்சித், எட்வேட், அபிநாத் ஆகியோர் மூவ் பண்ணினர்.

வயர்லெஸ் சாதனத்தை வைத்துக் கொண்டு ஒரு தனி ரென்ரில் தனியொருவனாக இருந்தான். தீவிரவாதிகளில் ஒருவன். அர்ஜுன் ப்ரியாவை அனுப்பினான். அவனைக் கவனிப்பதற்கு.

ப்ரியா 2ml சிறிஞ்சில் அதி சக்தி வாய்ந்த மயக்க மருந்தை உறிஞ்சியெடுத்தாள்.அகல பிளாஸ்திரி ஒன்றை வெட்டி எடுத்துத் தயாரானாள். தன் பின்புறம் காலடி சத்தம் எழ எதிரி வீரன் திரும்பிய அதே விநாடி ப்ரியா ஒளிவேகமாய் பிளாஸ்திரியை அவன் வாயில் ப்சரசக் என ஒட்டியவள் சிறிஞ்சைக் குத்தி உருவினாள். 1-2-3-4-5-6-7- மயங்கினான் தீவிரவாதி.

நிமிர்ந்தவளின் பின் தலையில் துப்பாக்கி பிடியால் விழுந்த அடியினால் நினை விழுந்தாள்.

* * *

அரவிந்த், ரம்யா, விஜய் ஜெகன் ஆகியோர் நாலாபுறமும் முன்னேறினர். முக்கிய இடங்களில் ரைம் பொம்மை, செற் பண்ணி பொருத்தினார்கள். ரம்யா தன் பின்னால் வரும் தீவிரவாதியைக் கவனியாது தொடர்ந்தும் நடக்க பின்னந் தலையில் துப்பாக்கியின் உலோக முனை உராய அதிர்ந்தாள். ''ஏய் பொண்ணு, ஏதாவது சாகசம் செய்ய நினைத்தாய். உன் உயிர் உனக்கு சொந்தமில்லாமல் போய்விடும். எனவே பேசாமல் நட'' என்றான்.

நிலையை யோசித்தவள் பேசாமல் நடந்தாள். கன்னை நீட்டியபடி வந்த குறுக்கும் நெடுக்குமாய் நடந்து கொண்டிருந்த தீவிரவாதி ஒருவனை நோக்கிக் கண்ணிமைக்கும் நேரத்தில் பாய்ந்து பட்டென்று அவன் கழுத்தை முறித்த அரவிந்த் தொடர்ந்து நடந்தான்.

விஜய் கட்டடத்தின் மேலே நின்ற இரு தீவிரவாதிகளைக் கண்டு சினெப்பரை எடுத்து ப்ளஸ் குறி சரியாக நெஞ்சில் பொருந்தத் தக்கதாக கச்சரி செய்து ட்ரிக்கை அழுத்தினான். எங்கிருந்தோ வந்த தோட்டா நடு நெஞ்சில் பாயச் சரிந்தவனை அருகில் இருந்த மற்ற எதிராளி பார்த்துத் திடுக்கிட்டு ஸ்டென்களை எடுத்துச் சுற்றும் முற்றும் பார்க்க விஜய்கத்தியை எடுத்து வீசினான்.

(தொடரும்)



# கம்பியூட்டர்க் கல்வி



## இன்ரநெற்றும் குழந்தைகளும்



குழந்தைகளுக்குப் பின்வரும் விதிமுறைகளைக் கடைப்பிடிக்கக் கற்றுக் கொடுங்கள். பின்வரும் விதிகளை நன்கு தெரியக் கூடியதாக ஒரு மட்டையில் எழுதி கம்பியூட்டரின் மீது வைக்கலாம்.

* நான் பெற்றோரின் அனுமதியின்றி என்னைப் பற்றிய தகவல்களையோ, எங்கள் குடும்ப அங்கத்தவர்களின் தகவல்களையோ யாருக்கும் இன்ரநெற்றில் தெரிவிக்கமாட்டேன்.

* என்னைச் சங்கடப்படுத்தும், சகல இன்ரநெற் சம்பவங்களையும் உடனுக்குடன் பெற்றோர்களுக்குத் தெரியப்படுத்துவேன்.

* எனது இன்ரநெற் நண்பர்களைப் பெற்றோரின் அனு மதியின்றி நேரில் சந்திக்க ஒழுங்கு செய்ய மாட்டேன். அவ்வாறு சந்திப்பதானால் எனது பெற்றோருடன் பொது இடமொன்றில் சந்திக்க ஒழுங்கு செய்வேன்.

* என்னுடைய படங்களைப் பெற்றோர் அனுமதியின்றி இன்ரநெற்றினூடாக அனுப்ப மாட்டேன்.

* எனது பெற்றோர்கள் வகுத்த விதிமுறைக்கு இணங்க எனது இன்ரநெற் உபயோகத்தினை மேற்கொண்டு எனது அறிவை ஆரோக்கியமான முறையில் வளர்த்துக் கொள்வேன்.

பெற்றோர்களே, உங்கள் குழந்தைகளை சரியான முறையில் வழிநடாத்துவதன் மூலம் இன்ரநெற் உலகின் அதிக பட்ச நன்மைகளை அவர்களுக்குப் பெற்றுக் கொடுங்கள்.

### குழந்தைக்ளுக்கான Web Search Engines

* Yahooligans (http://www.yahooligans.com) இது yahoo இனுடைய குழந்தைகளுக்கான Search Engine ஆகும்.

* Safety Net (http://personal.lycos.com/safetynet/safetynet.asp) இது Lycos இனுடைய குழந்தைகளுக்கான Search Engine ஆகும். Lycos Server இலுள்ள Option ஒன்றைத் தெரிவு செய்வதன் மூலம், Server இலுள்ள filter புரோக்கிராமானது பாதுகாப்பான Web பக்கங்களைத் தேடித் தருகின்றது. இதைப் பயன் படுத்துவதற்கு பெற்றோர்கள் Lycos Server இல் தங்களைப் பதிவு செய்து Password ஒன்றினைப் பெறுதல் வேண்டும். இந்த Password ஐ பயன்படுத்தி Filter ஐ On/Off செய்து கொள்ளலாம்.

* Ask Jeeves (Http://www.ajkids.com) இதுவும் குழந்தைகளுக்கான வடிகட்டப்பட்ட ஒரு Search Engine ஆகும். இதில் ஒரு கேள்வியைக் கேட்பதன் மூலம் அக் கேள்விகளுக்கான விடை அடங்கிய web பக்கங்களைப் பெறலாம்.

### பெற்றோர்களுக்கான Web பக்கங்கள்

இந்தப் பக்கங்கள் ஏராளமான நல்ல தகவல்களைப் பெற்றோர்களுக்கும், இளம் தாய்மார்களுக்கும் வழங்குகின்றன. குழந்தை வளர்ப்பிற்கான ஆலோசனைகள், மருத்துவ ஆலோசனைகள், கர்ப்பிணிப் பெண்களுக்கான ஆலோசனைகள் என பல தரப்பட்ட தகவல்கள் இவற்றில் உள்ளன.

* http://www.parentsoup.com/
*http://www.parentsplace.com/
*http://www.parenttime.com
*http://www.family.com
*http://www.babycenter.com
*http://www.family yeducat ion. com

# ஆகஸ்ட் மாதம் இலங்கை விளையாட்டிற்கோர் இனிய மாதம்

ஆகஸ்ட் மாதத்தின் மத்திய காலப் பகுதி இலங்கையின் உயர்தரம்மிக்க விளையாட்டுத் துறையைப் பொறுத்த மட்டில் உண்மையிலேயே ஒரு வசந்தகாலம்தான். சர்வதேசரீதியில் இலங்கைத் தேசத்தின் பெருமையை எடுத்தியம்ப வைத்த கிரிக்கெட் ஆட்டத்திலும் சரி, ஆசிய மெய்வன்மைப் போட்டிகளிலும் சரி இலங்கையின் வீர, வீராங்கனைகளின் எழுச்சி அபாரமானது; அவதானிக்கப்பட வேண்டியது. தேசிய விளையாட்டுக்களாகக் கருதப்பட்டுப் பேணப்பட்டதனாலோ அன்றேல் தாம் தொடர்ந்து காட்டிய அளப்பரிய சாதனைகளால் ஒரு விளையாட்டைத் தத்தெடுத்து வளர்த்ததனாலோ குறிப்பிட்ட சில நாடுகள் குறித்த சில விளையாட்டுகளில் கொடி கட்டிப் பறந்ததும், பறந்து வருவதும் தெரிந்ததே. அவ்வாறான ஒரு சிறப்புப் பாக்கியம் இந்நாட்டிற்குக்கிடையாது என்பதும் யதார்த்தமே.

இருந்தபோதும், '96 வில்ஸ் உலகக்கிண்ணப் போட்டிகளின் பின்பு கிரிக்கெட்டில் இலங்கையின் ஆதிக்கம் மேலோங்கத் தொடங்கியது. அவ்வாறே அண்மைய காலங்களில் மெய்வன்மைப் போட்டிகளில் குறிப்பாகத் தட நிகழ்வுகளில் இந்த இந்து சமுத்திரத்தின் நித்திலம் பட்டொளி வீசிப் பிரகாசிக்க ஆரம்பித்துள்ளது. மேற்படி துறைகளில் பிரபலம் பெற்றுமிளிரும் பிறநாடுகளுடையதைப் போன்ற அதி நவீன வசதிகள் இல்லாத போதிலும், இலங்கை வீரர்களின் இத்தகைய முன்னேற்றம் போற்றுதற்குரியதாகும். இந்நிலையில் இடை நடுவே சற்றுத் தொய்ந்து போயிருந்த மெய்வன்மையும் துடுப்பாட்டமும் கடந்த சிலவாரங்களாகக் காட்டிய பெறுபேறுகள், மூன்றரை வருடங்களிற்குப் பிறகாவது ''பாபா' திரைக்கு வந்தது போல் (!) இந்நாட்டின் விளையாட்டுத்துறைக்கு ஓர் இனிய ரொனிக்தான்.

### ஆசிய மெய்வன்மைப் போட்டிகள்

ஆகஸ்ட் 8 முதல் 12 வரை சுகததாஸா அரங்கத்தில் இடம்பெற்ற 14வது ஆசிய மெய்வன்மைப் போட்டிகளின் மூலம் இப்பிராந்தியத்தில் தடகளத் துறையில் தாமும் சளைத்தவர்களல்ல என்பதை இலங்கை வீரர்கள் நிரூபித்திருக்கின்றனர். சொந்த நாட்டு இரசிகர்கள் மத்தியில், குறிப்பாக மூன்று தங்கம் அடங்கலாக ஆறு பதக்கங்களை வெற்றி கொண்டதுடன் பலம் மிக்க ஏனைய நாடுகளிற்கு அதிர்ச்சிகளையும் ஏற்படுத்தியுள்ளனர். அதிலும் குறிப்பாக ஆண்களிற்கான 4x400 மீற்றர் அஞ்சலோட்டத்தில் ஆரம்பத்திலிருந்து இறுதி வரை எவ்வித சலனமுமின்றி - கட்டுக் கோப்புடன் இலங்கையணியினர் ஓடி முடித்தது பார்வையாளர்களை மட்டு மன்றி வெளிநாட்டு விமர்சகர்களையும் பெரிதும் கவர்ந்தது.

பெண்கள் பிரிவைப் பொறுத்தவரை போட்டிகளின் தொடக்கத்திலேயே எதிர்பார்க்கப்பட்டது போல் இலங்கையின் ''இமேஜை'' அவர் காப்பாற்றினார். ஆம்! படையப்பா நீலாம்பரி - பாட்ஷாவின் ஆட்டோவில் பாபாவைத் தேடி மிரட்டியது போல, சர்ச்சைகளின் மத்தியிலும் சாதிப்பதற்காய் ஓடிய சுசந்திகா மறுபடி ஒருமுறை கலக்கினார். அரசியல் வாதிகளிலிருந்து அரசாங்க அதிகாரிகள் வரை ஆடிய ஆட்டத்தையெல்லாம் சிட்னி ஒலிம்பிக்ஸில் ஓடிய ஓட்டம் மூலம் சரிப்படுத்தியவர் இங்கும் இரு தங்கப்பதக்கங்களைச் சுவீகரித்தார். ஆனாலும் அவர் கூட வெகு நிதானத்தில் இருக்கவில்லை. 11.08. செக்கன்களில் சீறியபோதும் 100 மீற்றரில் நான்காவதாகவே வர முடிந்ததுடன் 200 மீற்றர் தெரிவுச் சுற்றில் தவறிழைத்ததும் சேர்ந்து சமீபத்திய பொது நலவாயப் போட்டிகளில் மிகவும் சோர்ந்து போயிருந்தார். இருப்பினும் அவரிற்கேயுரிய அந்த உத்வேகத்துடன் களமிறங்கி, இலங்கையின் ''தங்க மங்கை'' தானே என்பதை வெற்றிகரமாக வெளிப்படுத்தி விட்டார்.



''தங்கமங்கை'' சுஸந்திகா

மறுபுறம் ஸ்ரீயானி குலவன்சே இம்முறை ''மாட்டிக்'' கொண்டார். தகுதிகாண் போட்டிகள் நிகழ்த்தப்பட்டதில் ஏற்பட்ட குழப்பம், ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்பட வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு மட்டுமன்றி ஒரு நிச்சயமான தங்கப் பதக்க வாய்ப்பையும் வெள்ளிப் பதக்கத்துடன் திருப்தி பெறவேண்டிய நிலைக்குத் தள்ளியது. பெண்களிற்கான 100m தடை தாண்டல் ஓட்டத்தில் இவரின் அனுபவமும் ஆற்றலும் அநாவசியமாக விரயமாகி விட்டது போலவே தென்படுகின்றது. எப்படியோ, எதிர்பார்ப்பினைபூரணமாகப் பூர்த்தி செய்யா விட்டாலும் இலங்கையின் ஒட்டு மொத்த பதக்கப் பட்டியலிற்கு அவரின் பங்களிப்பும் வலுச்சேர்த்திருக்கின்றது.

ஒருவாறு இம்முறை ஆசிய மெய்வன்மைப் போட்டியை வெற்றிகரமாக நடாத்தி வெற்றிகளும் பெற்றிருந்தாலும் இன்னும் சில முன்னேற்றங்களிற்கு இடமுண்டு என்பதும் மறுக்கப்பட முடியாததே ''ஆசைக்கும் ஓர் அளவுண்டு'' என முணுமுணுப்பவர்கள் கவனிக்க வேண்டிய விடயம் ஒன்றுள்ளது. இன்னும் சில வாரங்களில் ஆரம்பமாகவுள்ள பூசான் ஆசிய விளையாட்டுக்களைக் கருத்திற்கொண்டு பல நாடுகள் தமது முன்னணி மெய்வல்லுநர்களை இந்தப் போட்டிகளிற்கு. அனுப்பாது விட்டிருந்தன. அப்படியான நாடுகளில் முக்கியமான சீனா 10 தங்கங்களை ஜெயித்து முதலிடத்தைப் பெறுகின்றதென்றால்.... சற்றுச் சிந்திக்க வேண்டியே இருக்கின்றது. தனியே சுஸந்திகா ஜெயசிங்கவை மட்டும் வைத்து இலங்கையின் மெய்வன்மையைத் தரம் போட விழைவது அன்ட்டி ஃபிளவரை வைத்து சிம்பாப்வே கிரிக்கெட்டை எடை போடுவது போலாகிவிடும்!

ஆகவே, சுகத்திலகரட்ண, தமயந்தி தர்ஷா போன்ற வளம் மிக்க தனிநபர்கள் மேலும் ஊக்குவிக்கப்படுவதுடன் புதிய இளம் வீரர்களை இனங்கண்டு முன்னேற்றினால்தான், உலக அளவிற்கேன்? சார்க் பிரதேசத்திலாவது இலங்கை ஒரு சவால் மிக்க நாடாக (மெய்வன்மையில்) ப் பரிணமிக்க முடியும். ஏனெனில் நம் பக்கத்து நாட்டுக்காரர் பொதுநலவாயப் போட்டியில் பதக்கங்களாய் அள்ளி நான்காவதாய் வந்து விட்டார். ஜாக்கிரதை!

* * *

### மொரோக்கோ கிண்ணம் 2002

தொடர்ந்து நீண்ட ஒரு இடைவெளிக்குப் பின் சொந்த மண்ணில் வெல்ல முடியாச் சிங்கங்களாய் இருந்தவர்கள் இங்கிலாந்திற்குப் பறந்தனர். டெஸ்ற் தொடரில் மட்டுமன்றி நட்வெஸ்ற் முத்தரப்பு ஒருநாள் போட்டிகளிலும் நடுங்கினர். பந்துவீச்சு, களத்தடுப்பு, துடுப்பாட்டம் எல்லாவற்றிலுமே வெடவெடத்து ஒடுங்கினர். போகின்ற போக்கைப் பார்த்தால் கிரிக்கெட் உலகில் இலங்கையின் பெருமை ''கதம் கதம் தான்'' (முடிந்தது முடிந்தது தான் எல்லாம் ''பா பா''வின் ஆசீர்வாதம்!) என்று நினைக்கத் தோன்றுமளவிற்கு நிலைமை இருந்தது. ஏதோ பங்களாதேஸையாவது ''பொங்க வைத்து'' அனுப்புவோமென ஆடிய போதும் பெரியளவில் எவரும் அதைக் கண்டு கொள்ளவில்லை. இந்நிலையில் தான் ஒருநாள் போட்டிகளில் தலை சிறந்த அணிகளில் ஒன்றான தென்னாபிரிக்காவுடனும் இன்னுமொரு தரம்மிக்க அணியான பாகிஸ்தானுடனும் பொருதிப் பார்க்க இலங்கையணி புறப்பட்டது.

Icc டெஸ்ற் கிண்ணத்தைக் கைப்பற்றிய கையோடு அடுத்து நடந்த ஒரு நாள் தொடரிலும் தென்னாபிரிக்காவைத் துவம்சம் செய்த ஆஸ்திரேலியாவையே 2-1 என்ற நிலையில் தோற்கடித்துத் தோளுயர்த்தி நின்றது பாகிஸ்தான். அதே சமயம் ஆஸ்திரேலியாவில் வைத்தே ஆஸ்திரேலிய அணியையும் நியூசிலாந்தையும் சமாளித்து கார்ல்ட்டன்& யுனைட்டட் முக்கோணக்கிண்ணத்தைக் கைப்பற்றி தென்னாபிரிக்கா உறுதியாக இருந்தது. இப்படியான



வெற்றிச் சூரியன் சனத்தின் பக்கம்!

பின்னணிகளுடன் பார்த்தால் பங்களாதேஸினை 3-0 என வென்றது தான் இலங்கையின் சமீபத்தைய சாதனையாக விளங்கியது. பிறகென்ன, மறுபடியும் ''மூக்கைச் சிந்திக் கொண்டு'' திரும்ப வேண்டிய பரிதாபம் தான் சனத்தின் கூட்டணிக்கு ஏற்படப் போகின்றதெனவே பலரும் எதிர்பார்த்தனர்.

ஆனாலும் இலங்கையணி ஒரு திட்டத்துடன்- மனத்திடத்துடன் ஆடத் தொடங்கியது. சமகாலக் கிரிக்கெட் பயிற்றுநர்களில் சாணக்கியம் மிருந்தவராக விளங்கும் டேவ்வட்மோரின் வழிப்படுத்தலில் இலங்கை வீரர்கள் ஓர் இலக்குடன் ஆடியது புலனாகியது. இங்கிலாந்திலேற்பட்ட தொடர் தோல்விகள் அணியின் திறமைக்குச் சவாலாக அமைந்தது மட்டுமன்றி நெருங்கிக் கொண்டிருக்கும் உலகக் கோப்பையை நோக்கிய பயணத்திற்கும் உகந்ததாக அமையப் போவதில்லை என்பதை உணர்ந்து மிக விரைவாகவே இலங்கையணி சுதாகரித்துக் கொண்டதுதான் இங்கு கவனிக்கப்பட வேண்டிய முக்கிய அம்சமாகும். நீண்ட காலத்திற்குப் பின் அணியின் ஒவ்வொரு வீரரும் தன் பங்கிற்குரிய பணியைச்செவ்வனே நிறை வேற்ற



இந்த நிலை என்றும் தொடருமோ......?

முயற்சித்ததும் முன்னேற்றம் மிக்க ஒரு நடவடிக்கையாகும்.

இவையெல்லாவற்றிலும் மேலாக, ''வந்தேனா, வெளுத்தேனா, போனேனா!'' என விளையாடும் அணித்தலைவர், தான் அண்மைக்காலமாகப் பிரயோகித்து வந்த நிதானித்து அடித்தாடும் பாங்கினை இத்தொடர்பூராகவும் வெற்றிகரமாக அரங்கேற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. வலிமையும், இளமையும் மிக்க மத்திய வரிசைத் துடுப்பாட்டத்தில் அரவிந்தவின் அனுபவமும் இணைந்துள்ளமை தேவையானதே. இருந்த போதும் சிறிது காலமாக இடைவெளி விழுந்துள்ள மஹேல, ஆர்னல்ட் ஆகியோரின் முழுத்திறமைகளும் வெளிப்படும் பட்சத்தில் மேலும் சிறப்பாக இருக்குமென்பதில் ஐயமில்லை. ஆசிய அணிகளிலேயே களத்தடுப்பில்களை கட்ட வல்லது எனக் கருதப்பட்ட இலங்கையணி மறுபடியும் அத்துறையில் ஆரோக்கியமான நிலையை அடைந்திருக்கின்றது.

**க.சேந்தன்**


பந்து வீச்சைப் பொறுத்தவரை அனுபவம் உள்ள சமிந்த வாஸிற்கும் ஆற்றல் மிக்க பெர்னான்டோவிற்கும் ஈடுகொடுக்கவல்ல மூன்றாவது வேகப் பந்து வீச்சாளர் என்ற நம்பிக்கையை புலஸ்தி குணரட்ண நிறையவே ஏற்படுத்தியுள்ளார். விதி விலக்காகப் பாகிஸ்தானின் சில வீரர்களைத் தவிர, உபகண்டத்தின் வேகப்பந்து வீச்சாளர்களிடம் பற்றாக் குறையாகவுள்ள **seam - movement** இவரிடம் தென்படுவது அனுகூலமான விடயமாகும். வேகப் பந்தாளர்களின் தாகந்தீர்க்க வல்ல தென்னாபிரிக்க ஆடுகளங்களில், உலகக்கிண்ண மோதல்களிற்கான முக்கிய ஆயுதமாக இவரைக் கையாளுவது அணியின் நிர்வாகத்திலேயே தங்கியுள்ளது. முரளி இருக்கும் வரை இலங்கையின் சுழற்பந்து வீச்சில் தொய்வு ஏற்படப் போவதில்லை. அதே கணம் **leg - spin** வீச்சுக்களுடன் அதிரடியும் அநாயசமுமிக்க துடுப்பாட்டத் திறனும் இயல்பாகவேகளத்தடுப்பிலுள்ள அதீத ஆற்றலும் ஒன்று சேர விளங்கும் சந்தனாவும் அடிக்கடி தன்னை அவதானிக்க வைத்த வண்ணமிருக்கின்றார்.

எப்படி இருந்தபோதும் எதிர்வரும் உலகக் கிண்ணத்திற்கான மாதிரி அணியொன்றில் முக்கிய இடம் பிடிக்கப் போகும் மித வேகப் பந்து வீச்சாற்றலுடன் கூடிய ஒரு மத்தியவரிசைத் துடுப்பாட்ட வீரர், அதாவது ஒரு பூரணத்துவமான சகலதுறை வீரரை இலங்கையணி இன்னமும் சரியாக இனங்காணவில்லை. குமார்சங்கக்கார எனும் விக்கெட்காப்பாளரில் ஒரு மேலதிகத் துடுப்பாட்ட வீரரும் இணைந்திருப்பதால் (இப்படியான ஒரு அவசியம் வேண்டி இந்தியா படும்பாடு... பாவம் ட்ராவிட்!) மேற்படி ஆல் - ரவுண்டர் அணியில் இணைவதன் மூலம் நம்பிக்கைமிக்க துடுப்பாட்ட வரிசையை இலக்கம் 7 வரை நீட்டிக்கலாம். ஆகவே இந்த வெற்றிடத்தை நிரப்பப் பொருத்தமிகு வீரரை இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை இனங்கண்டு கொள்வது கட்டாயமான ஒன்றாகும்.

ஓர் உத்வேகத்துடன் ஆடி இலங்கையணி மொரோக்கோ கிண்ணத்தைக் கைப்பற்றிய போதும் அத் தொடரில் வேறுசில அவதானிப்புக்களும் கிடைக்கப் பெற்றன. அதாவது தற்காலக் கிரிக்கெட் உலகினைத் தனியொரு அணி மட்டும் ஆதிக்கஞ் செலுத்த முடியாது என்பது அவற்றுள் முக்கியமானதாகும். ஆக. ''ராவல் பிண்டி எக்ஸ்பிரஸ்'' (அக்தர்) மட்டும் பிரேக் - டவுண் ஆகியதே தவிரமற்றப்படி பாகிஸ்தான் முழுவலிமையுடனேயே இருந்தது. அவ்வாறே தென்னாபிரிக்கவும் பலத்த எதிர்பார்ப்பிற்குரிய அணியாகவே விளங்கியது. இப்படியான நிலையிலும் இலங்கை சாம்பியனாகியிருப்பது கிரிக்கெட் உலகில் - அதிலும் ஒரு நாள் ஆட்டத்தில் ஒரு நிலையற்ற தன்மை உருவாகியிருப்பதைக் கோடிகாட்டுகின்றது. இம்மாற்றம் அணிகளிற்கிடையேயான நம்பிக்கை மிக்க போட்டியை அதிகப்படுத்துவதுடன் ஒருநாள் போட்டிகளை மேலும் சுவாரஸ்யம் மிக்கனவாகவும் மாற்றி விடும்.

நிற்க, ஆசிய மெய்வன்மை மற்றும் மொரோக்கோ கிரிக்கெட் கிண்ணம் இரண்டிலும் வெளிப்படுத் தப்பட்டுள்ள பெறுபேறுகள் இலங்கை விளையாட்டு துறைக்கோர் இன்ப எழுச்சியாகும் என்பதில் ஐயமில்லை. இதே உற்சாகத்துடன் விளையாடினால் கொழும்பில் இடம் பெறவுள்ள **Icc** கிண்ணத்தையும் ... அதுசரி, **Icc** சுற்றுப் போட்டி தொடர்பாக ஏதோ சர்ச்சையாமே? அதைப்பற்றி அடுத்த வாரம் பார்ப்போம்.

### ஜோக்



''புழுக்கம் தாங்கலையாம். அதான் நீதிபதி, வக்கீல் எல்லோரும் கோட்டை விட்டு விட்டு வெறும் பெனியனோட இருக்கிறாங்கள்''



# சிறுவர் அரங்கம்

## படம் பார் பாடம் படி






இங்கிலாந்தின் தென்பகுதி நகரமான சஸ்ஸெக்ஸ் நகரில் எடுக்கப்பட்டது இப்புகைப்படம். 88 வயதான லேஸ்டிஸி சில்ஸ் கின்னஸ் புத்தகத்தில் இடம் பெறுவதற்காக விமானத்தின் இறக்கையில் நின்று சாகசம் நிகழ்த்தினார்.



நியூயோர்க்கின் ஹிக்ஸ் விலி நகரில் கற்களால் வடிவமைக்கப்பட்ட நாயின் உருவச் சிலைகளுக்கு பல விதமான வண்ணங்கள் தீட்டப்பட்டுள்ளன. இந்தச்சிலைகளை அமெரிக்காவில் பல்வேறு நகரங்களுக்கும் கொண்டு செல்லத் திட்டமிடப்பட்டுள்ளது.



அலாஸ்காவின் நஸ் தீக் வாசிலா என்ற இடத்தில் உள்ள வயலில் இது போன்ற பெரிய வடிவிலான 'ஆச்சரிய' முட்டைக் கோஸ் விளைந்துள்ளது.

என்ன சிறுவர்களே! ஆச்சரியமாக இருக்கிறதா?


*மீண்டும் சந்திப்போம்....*



செ. றீகன்,
மானிப்பாய் மெமோறியல்
ஆங்கிலப் பாடசாலை.



சி.திவாகரன்,
கொக்குவில் இந்துக் கல்லூரி.



யோ.ஜசிந்தா,
கம்பர்மலை.

## நிறந்தீட்டுவோம் வாருங்கள்



அன்புக் குழந்தைகளே! விதம் விதமாக உங்களிற்கு வர்ணம் தீட்ட ஆசை தானே? இதோ இங்கு தரப்பட்டிருக்கும் படத்தில் உங்கள் கைவண்ணத்தைக் காட்டுங்கள் பார்க்கலாம். என்ன நீங்கள் நிறந்தீட்டத் தயார்தானே?



வலம்புரியின் ஆதரவுடன் நடத்தப்பட்ட மூத்த பத்திரிகையாளர் அமரர் செல்லத்துரை ஞாபகார்த்தச் சிறுவர் பாடல் போட்டியில் பரிசு பெற்ற கவிதை இங்கு பிரசுரிக்கப்படுகின்றது.

## நாங்கள் வாழும் தேசம்!

தம்பி கொஞ்சம் நில்லு
தங்கை நீயும் கேளு
அம்மா, அப்பா சொல்லை
அழகாய் கேட்டு வாழ்வீர்

பெற்றோர் சொல்லுக் கேட்டால்
பெரியோர் மதிப்பரன்றோ
கற்றாரைக் கனம் பண்ணல்
கடமை ஏற்றுக் கொள்வீர்

நாங்கள் வாழும் தேசம்
நாலாய் சிதறிப் போச்சு
தாங்கள் பிடித்த ஒன்றே
தான்பெரிதென்ப தாலே

யுத்த மேகம் சூழ்ந்து
யுக்தி கலங்கிப் போச்சு
சத்தம் கேட்டுக் காதுச்
சவ்வும் வெடித்துப் போச்சு

போகும் பாதை தன்னில்
பார்த்துப்போக வேண்டும்
ஆகும் மிதிவெடி ஒன்றால்
அருமைக் காலும் போகும்

வளரும் போதில் ஆளும்
வளர அறிவும் வேண்டும்
கிளரும் நாகரிகம்
கெடுதல் என்பதறிவீர்.

*த. பரமலிங்கம், வண்ணை.*

## ஆசிரியர்கள்

அன்புடனும், பண்புடனும் நமக்குப் பெற்றோராய் இருந்து பாடம் சொல்லித் தருபவர்கள் ஆசிரியர்கள். இவர்கள் கடவுளுக்கு ஒப்பானவர்கள். கனிவும் இரக்கமும் உடையவர்கள். நாம் ஆசிரியருக்கு மதிப்பு கொடுத்து நல்ல பிள்ளைகளாக வாழ்வோம்.

*த.சர்மிகா,*
*செட்டிக்குளம்*
*மகாவித்தியாலயம்.*

## சிந்தனைத் துளிகள்

❄ இலட்சியத்திற்காக உயிரை விடு உயிருக்காக இலட்சியத்தை விட்டு விடாதே.

❄ நீ மறக்க வேண்டியவை இரண்டு
நீ பிறருக்கு செய்த உதவி, பிறர் உனக்குச் செய்த தீமை

❄ உன்னை ஒருவர் புரிந்து கொள்ள வில்லை என்று கவலைப் படாதே உன்னைப் புரிந்து கொள்ளாத வரை நீ புரிந்து கொள்.

❄ ஒரு பொருள் உனக்கு கிடைக்காது என்று தெரிந்தும் அதன் பின் சுற்றாதே காரணம் காலம் பொன்னானது.

❄ நீ நல்ல பெயர் வாங்க சில வருடங்கள் கூட ஆகலாம். கெட்ட பெயர் வாங்க சில நிமிடங்கள் போதும்.

*சி. வேணி,*
*மூளாய்.*

## உத்தமர் குணம்!

வேடன் ஒருவன் காட்டிற்கு வேட்டையாடுவதற்காகப் போனான். அந்த நேரத்தில் புலி ஒன்று அவனைத் துரத்தத் தொடங்கியது. புலியைக் கண்டு பயந்த வேடன் மிக வேகமாக ஓடத் தொடங்கினான். ஆனாலும் புலி அவனை விடுவதாக இல்லை.

ஓடிக்களைத்த வேடன் பக்கத்தில் உயரமாக வளர்ந்திருந்த மரமொன்றில் ஏறி உயரமான கிளையில் ஒளிந்து கொண்டான். "அப்பாடா" என்று பெருமூச்சுடன் அண்ணாந்து பார்த்தவன் அதிர்ச்சியடைந்தான். அவன் தலைக்கு மேலே இன்னொரு கிளையிலே ஒரு கரடிக்குட்டி இருந்தது.

அப்போது வேடனைத் துரத்தி வந்த புலி அந்த மரத்தடியை வந்தடைந்தது. அந்த வேடனைப் பிடிப்பதற்கு அது தந்திரம் செய்தது. "கரடியாரே! உன்னுடன் இந்த மரத்திலிருக்கும் வேடனைப் பிடித்து கீழே தள்ளிவிடும். இவன் மிருகங்களை வேட்டையாடுபவன். அதனால் இவன் எம் இரண்டு பேரிற்குமே விரோதி' என்றது புலி.

இதைக் கேட்ட கரடி "எப்போது இந்த வேடன் நான் இருக்கும் மரத்திற்கு வந்தானோ அப்போதே அவன் என்னிடம் அடைக்கலமானவன். அடைக்கல



மாக வந்தவனைக் கீழே தள்ளி விடுவது பாவம். நான் இதனைச் செய்ய மாட்டேன்" என்று கூறியது கரடி.

இதனைக் கேட்ட புலி பொறுமையுடன் பல மணி நேரம் கீழே காத்திருந்தது. கரடியும் தூங்கி விட்டது. அப்போது தருணம் பார்த்த புலி வேடனைப் பார்த்து "வேடனே! நீ தூங்கிக் கொண்டிருக்கும் கரடியை கீழே தள்ளி விடு!நான் உன்னை எதுவும் செய்யாது விட்டு விடுகிறேன். என்றது.

வேடன் யோசித்துப் பார்த்தான். எப்படியோ தான் தப்பினால் போதும் என்று நினைத்துக் கரடியைக் கீழே தள்ளப் போனான். அப்போது சத்தம் கேட்டு விழித்துக் கொண்ட கரடி நிலைமையைப் புரிந்து கொண்டு அடுத்த கிளைக்குத் தாவி அமர்ந்து கொண்டது.

புலி மறுபடியும் பேச ஆரம்பித்தது. கரடியாரே! வேடனைப் பார்த்தாயா? கொஞ்சம் கூட நன்றியில்லாமல் உன்னைத் தள்ளப் பார்த்தானே! நீ வீணாக அவன் மீது இரக்கம் காட்டாது அவனைக் கீழே தள்ளிவிடு" என்றது.

கரடியோ, "புலியாரே! நல்லவர்கள் தமககுச் செய்யும் தீமைகளை எப்போதும் பொருட்படுத்த மாட்டார்கள். மற்றவர்கள் தீமை செய்கிறார்கள் என்பதற்காக நானும் அதையே செய்ய மாட்டேன்" என்று கூறியது.

இதனைக் கேட்ட வேடன் வெட்கித்தலை குனிந்தான்.

**சிறுவர்களே! கதையைப் படித்தீர்களா? நீங்களும் மற்றவர்களிடத்தில் இரக்கம் காட்டுங்கள். ஆனால் ஏமாந்து விடாதீர்கள். துன்பம் தருபவர்களுக்கு நன்மைகள் செய்து அனைவரின் உள்ளங்களையும் வெல்லுங்கள்.**

*தொகுப்பு:- சுஜா*

## இலக்கியம்



உலகத்தில் எத்தனையோ வகையான மனிதர்கள் இருக்கிறார்கள்! ஷேக்ஸ்பியரின் நாடகங்களைப் படியுங்கள் தெரிந்து கொள்ளலாம். மனித உணர்ச்சிகளையும், மனப் போராட்டங்களையும் சித்தரிப்பதில் அவருக்கிணை அவரே தான். புகழுரை கேட்டு அறிவு மயங்கும் மன்னன் லியர், குழப்பமான மனப் போராட்டத்தின் சின்னமாக விளங்கும் ஹாம்லெட், சந்தேகத்தால் வேதனைப்படும் ஒதெல்லோ, காதல் போயின் சாதலுக்குச் சான்றாக விளங்கும் ரோமியோ- ஜூலியட், கற்பரசி டெஸ்டிமோனா, வஞ்சக அயோகா, பணப்பேய் ஷைலக், தன்னம்பிக்கையின் சின்னமான சீசர்....... இப்படிச் சொல்லிக் கொண்டே போனால் பட்டியல் விரியும். காலம், நாடு, மொழி ஆகிய எல்லாவற்றையும் தாண்டி உயர்ந்து நிற்கும் இலக்கிய இமயம் ஷேக்ஸ்பியர்.

*தொகுப்பு:- நீர்வை மணி.*

## சென்றவார விவேகப் புதிருக்கான விடைகள்

| | | |
|---|---|---|
| 32 | 4. | 24 |
| 12 | 20 | 28 |
| 16 | 36 | 8 . |

*தெ.ஹர்சன்,*
*யா.மத்தியகல்லூரி.*

## சின்ன செய்தி

பூமிக் கோளத்தில் நிலப்பகுதி 29.2 சதவீதம் தான். நீர்ப்பகுதி 79.8 சதவீதம் ஆகும். அதாவது, 361 மில்லியன் சதுரகிலோ மீட்டர் அளவில் கடல் இருக்கிறது.

## இவ்வார கணிதப்புதிர்

| | | |
|---|---|---|
| | | |
| | 5 | |
| | | |

கூட்டும் போது 15 கூட்டுத் தொகையாக வர வேண்டும். ஒரு எண் ஒரு தடவை மாத்திரமே பயன்படுத்த வேண்டும். முயன்று பாருங்கள்.

*(விடை மறு இதழில்)*

*ந.சஞ்சேயன்,*
*யா.சாவகச்சேரி இந்துக் கல்லூரி.*

## இவரைத் தெரியுமா — பரிசுப் போட்டி இல: — 26



படத்தில் இருப்பவர் யார் தெரியுமா?

ஒளிமயமான நடிகை இவர். இவரைத் தெரிந்தால் உங்கள் விடைகளை எழுதி எதிர் வரும் 04 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:-

'இவரைத் தெரியுமா போட்டி இல:- 26'
"சங்குநாதம்"
இல.15,வெள்ளாந்தெரு,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

குறிப்பு:-
சரியான விடை எழுதும் மூன்று போட்டியாளர்கள் குலுக்கல் முறை மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசு வழங்கப்படும். பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள் தமக்கான பரிசுகளை 'வலம்புரி' காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளவும்.

**இவரைத் தெரியுமா பரிசுப் போட்டி இல: — 26**

படத்தில் உள்ளவரின் பெயர் :-..................................

அனுப்புபவரின் முழுப் பெயர் :-..................................

அனுப்புபவரின் முகவரி :-..................................
..................................
..................................

### இவரைத்தெரியுமா பரிசுப்போட்டி இல உ௫
### சரியான விடை





நடிகர் அஜித்

**இவரைத்தெரியுமா பரிசுப்போட்டி இல. 25 இல் பங்குபற்றி பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகளின் பெயர் விபரம்:**

**முதற்பரிசு :—** நா. வசீகரன்
இல. 42, கண்ணபுரம்,
நாவாந்துறை,
யாழ்ப்பாணம்.

**இரண்டாம்பரிசு:—** செ. சிறீகௌரி
உடுப்பிட்டி வீதி,
தொண்டைமானாறு.


**மூன்றாம்பரிசு:—** ம. துவாரகீசன்
383/3 நாவலர் வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

**சரியான விடைகளை எழுதிப் பாராட்டுப்பெறும் அதிர்ஷ்டசாலிகளின் பெயர் விபரம்:-**

*க. இரஞ்சினி யாழ்ப்பாணம்., ஆ. அன்பரசி வவுனியா. ஏ.கபீர்த்தன் யாழ்ப்பாணம். த. அரவிந்தன் கோண்டாவில்., எஸ். சஞ்சிராஜ் யாழ்ப்பாணம், ஆ.நருமதா கரவெட்டி, மு.கிருசாந் வறணி, கை.குணரட்ணம் சுன்னாகம், பெ. பிரியதர்சினி சித்தன்கேணி, வி. செல்வநாயகம்நீர்வேலி.*

## யோகம் பற்றி அறிந்து கொள்வோம்

### பத்மாசனம்



இடது காலை வலது தொடையிலும், வலது காலை இடது தொடை மீதும் மாற்றி போடவும். கால் மூட்டுகள் இரண்டும் தரையை தொட வேண்டும். குதிக்கால்கள் இரண்டும் வயிற்றின் அடிப்பாகத்தைத் தொடும் படியாக அமைக்கவும். முதுகு எலும்பை நேராக நிமிர்த்தி கம்பீரமாக உட்கார வேண்டும். இரண்டு கைகளையும், சின் முத்திரையுடன் படத்தில் காட்டியபடி வைத்து கண் பார்வையை மூக்கின் நுனியில் செலுத்தவும்.

சில பேர்களுக்கு இவ்வாசனம் இலகுவில் வராது, ஒவ்வொரு காலாக தொடையில் போட்டுப் பழகவும். நாளடைவில் வந்துவிடும்.

ஆரம்பக் கட்டத்தில் சில வினாடிகள் இருந்தால் போதுமானது. வலி இருந்தால் உடன் ஆசனத்தை கலைத்துவிட வேண்டும். நாள் செல்ல வலி வராது வெகுநேரம் இருக்கலாம். 1 முதல் 3 நிமிடம் இருக்கலாம். மேஜை சாப்பாடு உள்ளவர்களுக்கு இவ்வாசனம் இலகுவில் வராது. ஒரு வேளையாவது தரையில் சாதாரணமாக உட்கார்ந்து சாப்பிட்டால் இவ்வாசனம் இலகுவில் வந்துவிடும்.

***பலன்கள் :***

அடிவயிற்றுப் பகுதிக்கு இரத்த ஓட்டம் அதிகமாகும். நன்றாக பசி எடுக்கும். வாதநோய் தீரும். வழிபாடு, ஜபம், தவம், மன ஒருமைப்பாடு இவற்றிற்கு சிறந்தது. நாடி சுத்தி, பிராணயாமம் இந்நிலையில் இருந்து கொண்டு செய்தல் நலம்.

(தொடரும்.....)







கா. மகிலன்
வயது :- 10
CMS ஒழுங்கை,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.
தொலைக்காட்சி, கிரிக்கெட்.



எஸ். எஸ். ராஜ்குமார்
வயது: -17 -
நவாலி அட்டகிரி,
குடியிருப்பு - 01,
மானிப்பாய்.
கவிதை, கதைப் புத்தகம்,
விளையாட்டு, வரைதல்.



ம. துளசிதாசன்
வயது :- 11
383/3, நாவலர் வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைக்காட்சி பார்த்தல்,
பத்திரிகை வாசித்தல்,
பேனா நட்பு.




ச.சத்தியலிங்கம்
சேச்லேன்,
திருநெல்வேலி -கிழக்கு,
யாழ்ப்பாணம்.
பத்திரிகை,கணனி வேலை
செய்தல், புல்லாங்குழல்.



கா. கேசாயினி
வயது:- 08
CMS ஒழுங்கை,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.
தொலைக்காட்சி, முத்திரை
சேகரிப்பு, கரம்போட்.

# குறுக்கெழுத்துப் போட்டி

## இல. 27



*அனுப்ப வேண்டிய முகவரி*

**குறுக்கெழுத்துப் போட்டி இல -27**
*'சங்குநாதம்'*,
*இல:- 15, வெள்ளாந்தெரு,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.*

பெயர் :- ..........................................................
விலாசம் :- ..........................................................
..........................................................
..........................................................

..............✂ இங்கே வெட்டுக..........................................

### இடமிருந்து வலம்

(1) ஞான முதிர்ச்சி (4) அக்கறை (5) திருவாட்டி (7) நரி (8) சரீரம்

### மேலிருந்து கீழ்

(1) ஊறு (2) உலக இயக்கத்திற்கு இவை அவசியம் (3) கடுஞ்சொல் (5) கட்டடப் பொருள்களிலொன்று (6) உடலுறுப்புகளிலொன்று (7) நளனைப் பிடித்த கிரகம்

**குறுக்கெழுத்துப்போட்டி இல.26 இன் விடைகள்**

**இடமிருந்து வலம்**

**1.அடி வானம் 4. யாழ் 5. மட்டம் 6. அகம் 7. தரை 9. தோணி 11. குழி 12. தொன்று**

**மேலிருந்து கீழ்**

**1. அசமந்தம் 2. வாட்டம் 3.பாழ் 4.யாசகம் 5. பிணி 9. தோழி 10. ஏறு**

**பரிசு பெற்றோர் பெயர் விபரம்**

**முதற் பரிசு :~** க. வத்ஷலா,
மூளாய் வீதி,
வட்டுக்கோட்டை.

**இரண்டாம் பரிசு :~** கே. அரசேஸ்வரன்,
கலைமகள் வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.

**மூன்றாம் பரிசு :~** ஞா. நளினி,
'துவாரகை',
கைதடி மேற்கு,
கைதடி.

**போட்டியில் கலந்து கொண்டு பாராட்டுப் பெறும் அதிர்ஷ்டசாலிகளின் பெயர் விபரம்.**

*பா. செல்வராணி வட்டுக்கோட்டை, இ.வினு யாழ்ப்பாணம், நா.மாலா யாழ்ப்பாணம், வி.செல்வநாயகம் நீர்வேலி, ஆறுமுகம் கிளிநொச்சி, சி.துஷ்யந்தி யாழ்ப்பாணம்,ப.சிவசூரியர் சங்கானை, கந்தவனம் முள்ளியவளை,கே. இராஜகோபால் வட்டுக்கோட்டை, க. சிவசம்பு வவுனியா.*

குறிப்பு:~
குறுக்கெழுத்துப் போட்டிக்கு விடைகள் அனுப்பும் போது கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "குறுக்கெழுத்துப் போட்டி இல.27" எனத் தவறாது குறிப்பிடவும். அனுப்ப வேண்டிய முடிவுத்திகதி 04-09-2002. பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள் தமக்கான பரிசுகளை 'வலம்புரி' காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளவும்.

| | |
|---|---|
| முதற் பரிசு:- | 150.00 |
| இரண்டாம் பரிசு:- | 100.00 |
| மூன்றாம் பரிசு:- | 50.00 |




# ஸ்ரீகாந் - சினேகா நடிக்கும் "பார்த்திபன் கனவு"



மூன்றாம்பிறை, பகல் கனவு, கிழக்குவாசல், இதயம் ஆகிய வெற்றி படங்களை வழங்கிய ஜி. தியாகராஜனின் சத்யஜோதி பிலிம்ஸ் 5 ஆண்டு இடைவெளிக்கு பிறகு மீண்டும் புதிய படம் தயாரிக்கிறது. ஆங்கில பெயர்களை அதிகம் பயன்படுத்தும் தமிழ்த் திரையுலகில் அதற்கு மாறாக தமிழில் 'பார்த்திபன் கனவு' என புதிய படத்திற்கு பெயரிடப்பட்டுள்ளது.

நினைத்தது நிறைவேறாமல் போவதே வாழ்க்கையின் சுவாரசியம். ஆனால் நினைத்தது எல்லாம் நிறைவேறும் ஒரு சுவாரஸ்யக் காதல் கதையாக இப்படம் உருவாகிறது. இதன் கதை, திரைக்கதை, வசனம் எழுதி கரு. பழனியப்பன் டைரக்டு செய்கிறார். இவர் டைரக்டர்கள் பார்த்திபன், எழில், தரணி ஆகியோரிடம் உதவி இயக்குனராக பணியாற்றியவர்.

ஏற்கனவே சத்யஜோதி பிலிம்ஸ் மணிரத்னம், கதிர், பாக்யநாதன் ஆகியோரை திரையுலகுக்கு அறிமுகப்படுத்தி இருக்கிறது. அந்த வரிசையில் கரு. பழனியப்பனையும் இந்நிறுவனம் அறிமுகப்படுத்துகிறது. யுவன்சங்கர் ராஜா இசை அமைக்றார். செல்வி தியாகராஜன், ஜி. சரவணன் இணைந்து படத்தை தயாரிக்கின்றார்.



இதில் ஸ்ரீகாந்த் கதாநாயகனாக நடிக்க அவருக்கு ஜோடியாக சினேகா நடிக்கின்றனா. இவர்களுடன் முன்னணி நட்சத்திரங்கள் நடிக்கின்றனர்.

இப்படத்தின் படப்பிடிப்பு வரும் அக்டோபா மாதம் சென்னையில் தொடங்கி தொடர்ந்து நடைபெற்று தமிழ் புத்தாண்டு தினத்தன்று திரைக்கு வர உள்ளது. முழுக்க முழுக்க இயற்கை எழில் கொஞ்சும் இந்தியாவிலேயே படப்பிடிப்பு நடக்கிறது.

# காவ்யா மாதவனுக்காக குரல் கொடுத்த சுருதி ஹாசனுக்கு இளையராஜா பாராட்டு!

ஆஸ்கார் பிலிம்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பில் வி. ரவிச்சந்திரன் தயாரித்துள்ள படம் "என் மனவானில்..." அடுத்த மாதம் திரைக்கு வரும் இந்தப் படத்தில் ஜெயசூர்யா கதாநாயகனாக அறிமுகமாக, காவ்யா மாதவன் கதாநாயகியாக நடிக்கிறார்.

இவர்கள் இருவரும் இந்தப் படத்தில் ஊமை கதாபாத்திரங்களில் நடித்திருப்பது குறிப்பிடத்தக்கது. இந்தப் படத்துக்காக இளைய ராஜா இசை அமைப்பில் பழனி பாரதி எழுதி ஹரிஹரனுடன் சாதனா சாக்கம் பாடிய 'என்ன சொல்லி", ஹரிஹரன் பாடிய 'உன்னைத் தேடி', ஹரிஹரனுடன் கார்த்திக் பாடிய 'உன்னை காணும்போது', கார்த்திக்குடன் பவதாரணி பாடிய 'முத்து முத்து', முத்துலிங்கம் இயற்றி மனோ, எஸ்.என். சுரேந்தர், கார்த்திக், ஹரீஷ் ராகவேந்திரா, சுஜாதா பாடிய 'குத்து குத்து', நெப்போலியனுடன் எஸ்.என். சுரேந்தர், பிஜி-9, சுவர்ணலதா பாடிய 'வயது வந்த' ஆகிய பாடல்கள் ஒலிப்பதிவு செய்யப்பட்டது.

மு. மேத்தா எழுதிய,

"ரோட்டோரம் பாட்டுச் சத்தம் கேட்குதா ?
கேட்கும்போது சோகம் வந்து தாக்குதா ?"

என்ற பாடலை சுருதி கமல்ஹாசன் பாட ஒலிப்பதிவானது. அத்தனை சோகத்தையும் தன்னுடைய குரலில் பிரதிபலித்துப் பாடிய அவரை இளைய ராஜா கட்டியணைத்து முத்தமிட்டுப் பாராட்டினார்! இந்த படத்தில் வடிவேலு வித்தியாசமான கூனன் கதாபாத்திரத்தில் நடித்துள்ளார்.





கதை, திரைக்கதை, இயக்கம் வினயன் வசனம் கோகுல கிருஷ்ணா எடிட்டிங் ஜி. முரளி ஒளிப்பதிவு உத்பல வி. நாயனார் அரங்கம் பாவா சண்டைப் பயிற்சி கனல் கண்ணன் இணை தயாரிப்பு டி. சுரேஷ்



காதல் அழிவதில்லை படத்தில் சிம்பு சார்மி

# 100 கார்களின் விளக்கு வெளிச்சத்தில் "டக்கு டக்கு..." பாட்டுக்கு ராணி ஆட்டம்

ஸ்ரீமாசாணி அம்மன் பிக்சர்ஸ் தயாரித்து வரும் படம் "கேம்".

அந்த ஊரின் பிரபல தொழிலதிபர் ஜி.கே. அராஜக பேர்வழி. தன்னைவிட மிஞ்சியவன் எவனாகயிருந்தாலும் சரி.. அவனை ராஜாவை கொண்டு அடக்கிவிடுவான். ராஜா பாக்சிங் சண்டைப் பயிற்சியில் தேர்ச்சி பெற்றவன். வட சென்னையில் மாலை நேரமானால் போதும் ரவுடிகள் கூடி நின்று பேச ஒரு இடம் இருக்கும். அந்த இடத்தில் அவரவர் பலத்தை நிரூபிப்பதுண்டு. 'பெட்' வைப்பதும் உண்டு.

தன்னுடைய கோஷ்டிதான் ஜெயிக்க வேண்டும் என்பது ஜி.கே புத்திசாலித்தனம். அதனால் ராஜாவை 'பாக்சிங்' கோதாவில் இறக்கிவிடுகிறான். எதிரணியை சேர்ந்த பாக்சா வடிவேலுவுடன் மோதுகிறார் ராஜா. 100 கார், ஜீப், மோட்டார் சைக்கிள் என வண்டிகளின் மத்தியில் மோதல் முடிவடைகிறது. ராஜா ஜெயிக்க... கைதட்டல்கள் விண்ணை முட்டுகின்றன.

இந்த வெற்றி விழா அங்கேயே கொண்டாடப்படுகின்றன.

"டக்கு டக்கு டோலெடுத்து
பக்கம் வந்து மெய்யனைச்சு
சிக்கி முக்கி ஆடலாம் வா...
அடிடா... பாங்குடா டோய்...
அடிடா... பாங்குடா டோய்...."



என்று டான்சரான ராணி ஆடி அசத்த.... காட்சி ஒகே ஆனது. இதில் ராஜாவாக கார்த்திக், ஜி. கே.வாக ஜான், பாக்சர் வடிவேலுவாக சிவா, டான்சர் ராணியாக 'ஓ..போடு' ராணி நடித்தார்கள்.

ராயபுரம் அருகே உள்ள ஒரு கொடோனில் படமாக்கப்பட்ட இந்த காட்சி 100 க்கும் மேற்பட்ட கார்களின் விளக்கு வெளிச்சத்தில் படமாக்கப்பட்டது. புதுமையான இந்த விளக்கு வெளிச்சத்தில் எடுக்கப்பட்ட இந்த பாடலை பழனிபாரதி எழுத, அனுராதா ஸ்ரீராம் பாடியுள்ளார்.

நடராஜ் லூயிசா நடனம் அமைத்தார்.

கார்த்திக், ராதா, ஜான், ஊர்வசி, மனோஜ் கே. ஜெயன். வினோத்குமார், ராஜஸ்ரீ, ஆர். சுந்தர்ராஜன், பாண்டு, கசான்கான், மணிக்கராஜ், ராணி மற்றும் பலர் நடிக்கிறார்கள். கதை, திரைக்கதை, வசனம், இயக்கம் ஜான் இசை எஸ்.பி. வெங்கடேஷ் ஒளிப்பதிவு டி. தாமு எடிட்டிங் கிருஷ்ணா கலை தேவா ஸ்டன்ட தளபதி தினேஷ் தயாரிப்பு எஸ். சவுந்திரபாண்டி

# வயதான ஹீரோக்களுடன் நடிக்கத் தயார்!



சிம்ரனின் மேனியழகு. சௌந்தர்யாவின் முகச்சாயல். இது தான் நமீதா. சினிமாவுக்காகப் பைரவி. பட்டப்படிப்பை பாதியில் மறந்துவிட்டு தெலுங்கு தேசத்தில் டூயட் பாடிக் கொண்டிருக்கிறார்.

"நமீதா என்றால் குஜராத்தியில் பெரியவர்களை மதிப்பவர் என்று அர்த்தம். நானும் அப்படித்தான். என்னுடைய தாத்தா, பாட்டி எல்லோருமே ரொம்ப ஆச்சாரம். வீட்டுல இருக்கும்போது ஷார்ட்ஸ் கூட போட முடியாது. ஷல்வார் போட்டால்கூட துப்பட்டா போடணும். அந்தளவுக்குக் கட்டுப்பாடான குடும்பம்.

சின்ன வயசிலிருந்தே ஸ்டேஜ் டிராமா, பரதநாட்டியம் என வளர்ந்த பொண்ணு. அத னால், சினிமா எனக்குப் பிரச்சினையே இல்ல. இங்கு வந்த பிறகு கிளாமரா, பெர்ஃபார்மன்ஸா என்று குழம்பக் கூடாது. ஒரு நடிகையாக நிரூபிச்சுக் காட்டணும். அப்புறமாக சிம்ரன், ஜோதிகா மாதிரி பெயர் வாங்கணும். இவர்களையும் நடிப்பில் ஓவர் டேக் பண்ணணும். அதே மாதிரி என்னைவிட வயது எவ்வளவு அதிகமானவராக இருந்தாலும் சீனியர் ஹீரோக்களுக்கும் ஜோடியாக நடிக்கத் தயங்க மாட்டேன். கமல்ஹாசன் சாருடன் ஒரு படத்திலாவது நடிக்கணும். அவர் மேல எனக்கு அவ்வளவு கிரேஸ்" என்று குஷியாகச் சொல்கிறார்.

# நடிகர் ஷாம்'மைத் தொடர்ந்து +2 நாயகன் - மீண்டும் ஒரு கிஸ் மாஸ்டர்



குஷி படம் முடிந்ததும் குஷியோடு ஆரம்பிக்கப்பட்ட படம் நியூ. இதில் அஜீத் நடிப்பதாக போஸ்டர் ஒட்டப்பட்டு பூஜையும் போடப்பட்டது. கடைசியில் ஏற்பட்ட கசாமுசாவினால் அஜீத் கழன்று கொண்டார். பின்னர் இயக்குனர் எஸ்.ஜே.சூர்யாவே ஹீரோவாக நடிப்பதாக செய்தி வந்தது. மீண்டும் ஒரு திருப்பம் சூர்யாவுடன் நாயகி வேஷம் கட்ட யாரும் முன்வராததால் அஜீத் மீண்டும் முன்னால் சென்று நின்றார். சிந்துபாத் கதையாக நீண்டுக் கொண்டிருந்த இந்த கதையில் கடைசி கடைசியாக சூர்யாவவே ஹீரோவாக நடிக்கிறார் என்று விளம்பரப்படுத் தப்பட்டு பூஜையும் போடப்பட்டு விட்டது. நாயகியாக பரபரப்பு நாயகி சிம்ரன். இந்த படத்தின் பூஜை போஸ்டரிலும் இண்டர் நேஷனல் பரபரப்பை செய்திருந்தார் நாயகி. அது புது நாயகனுடன் உதட்டோடு உதடு ஒட்டி போஸ் கொடுத்திருந்தார். அந்த போஸ்டர்கள் சென்னை முழுவதும் ஒட்டப்பட்டது. தன்னுடன் யாருமே நாயகனாக ஏற்றுக் கொள்ளாத ஆத்திரத்தில் நாயகன் சூர்யாவும், சமூகத்தில் மேல் மற்றும் குறிப்பிட்ட சிலர் மேல் உள்ள கோபத்தாலும் சிம்ரனும் அதுபோல் போஸ் கொடுத்திருக்கிறார்

# இவன்

பார்த்திபன் - சௌந்தர்யா



இப் பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம். எனும் விலாசத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 04.09.2002 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது